டிசம்பர் 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை
ரூபா 100/=

307



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

307

ஒளி : 26 சுடர் : 07

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்



ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி

ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info



சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- கிறிஸ்டி நல்லரெத்தினம் (அவுஸ்திரேலியா) 07
- எ.அ.கிறேஷா மிலானி 15
- என்.சண்முகலிங்கன் 18
- ஏ.எம்.மிஹ்ழார் 24
- தேன்தமிழினி 25
- வெலிகம ரிம்ஸா முஹம்மத் 29
- என்.நஜ்முல் ஹுசைன் 29
- செல்லையா சுப்ரமணியம் 35
- தம்பிலுவில் ஜெகா 35
- கலாநிதி ஜீவகுமாரன் (டென்மார்க்) 41
- மனோகரி ஜெகதீஸ்வரன் 43
- Dr.ஜலீலா முஸம்மில் 44
- ஷெல்லிதாசன் 44
- ஜெயச்சந்திரன் அனுஜன் 47
- முனைவர் கு.சிதம்பரம் (இந்தியா) 48


### சிறுகதைகள்


- ரஞ்ஜனி சுப்ரமணியம் 08
- சி.மௌனகுரு 16
- மகேந்திரன் கோவர்த்தனா 21
- கௌசி (ஜேர்மனி) 26


### கட்டுரைகள்


- தமிழ்மணி அகளங்கன் 02
- லத்பான் றோஸின் 13
- சித்திரவேலாயுதன் 19
- இனியவன் இசாறுதீன் (கனடா) 36
- ஏலையா க. முருகதாசன் (ஜேர்மனி) 42


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 45


### வாசகர் பேசுகிறார்


வாசகர் பேசுகிறார் 48


பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...



## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

### சாண் ஏற முழம் சறுக்கல்

வரலாற்று அடிப்படையில் பாரியதொரு இயற்கை அழிவை இலங்கை மீண்டும் எதிர்கொண்டு தத்தளித்தவண்ணம் உள்ளது. 2025ஆம் வருட இறுதியில் "டித்வா" எனும் புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு இலங்கையை வாரிச் சுருட்டி அடித்துள்ளது. இதுவரை கிடைக்கப்பெற்ற சில புள்ளிவிபரங்கள் :

- 643க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.
- 183க்கும் மேற்பட்டோரை இன்னமும் காணவில்லை.
- 233,000க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர்.
- 658,000க்கும் மேற்பட்டோர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.
- 555,609க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
- 161,013க்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார், தாய்மார், 5வயதுக்கும் உட்பட்ட குழந்தைகள் அடிப்படை ஊட்டச்சத்துக் குறைபாடுகளை எதிர்கொண்டுள்ளனர்.
- 1,200க்கும் மேற்பட்ட மண்சரிவுகள்.
- 107,000க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ பாதிப்படைந்துள்ளன.
- 58,340க்கும் மேற்பட்ட ஹெக்டேயர் விவசாய நிலம் பாதிப்படைந்துள்ளது.
- 1,185க்கும் மேற்பட்ட பாடசாலைகளும், 2,720க்கும் மேற்பட்ட முன்பள்ளிகளும் பாதிப்படைந் துள்ளன.
- 250க்கும் மேற்பட்ட கிலோமீற்றர் A, B தர வீதிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான கிலோமீற்றர் வீதி போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது. 480க்கும் மேற்பட்ட பாலங்கள் பாதிப்படைந்துள்ளன.
- 1000க்கும் மேற்பட்ட கிலோமீற்றர் புகையிரத பாதை சேவை பாதிப்படைந்தது.
- பல்லாயிரக் கணக்கான கால்நடைகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

என இப்பட்டியல் நீள்கின்றது. ஏறத்தாழ 4.1 பில்லியன் அமெரிக்க டொலர் (2024 இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவீதம்) பாதிப்பை இலங்கை எதிர்கொண்டுள்ளதாக அறிக் கைகள் கணிக்கின்றன. இலங்கை முழுவதும் மீள்வதற்கு பல மாதங்கள் எடுக்கலாம். இவை கவனிப்புக்குரிய இலக்கங்களே...

எத்தனையெத்தனை ஆசைகள் அடித்துச் செல்லப்பட்டனவோ...

தன்மீது விழுந்த மண்சரிவு ஏற்படுத்திய வலியினால் "ஐயோ..." என ஒலியெழுப்பமுன் பிடுங்கப் பட்ட உயிர்களின் என்னென்ன கனவுகள் புதையுண்டனவோ...

ஆனால், இவற்றையெல்லாம் நாம் கண்டும் காணாது கடந்து போகின்ற மனநிலைகளை வளர்த்துவிட்டோமோ எனும் கேள்வியும் எழும்புகின்றது. அழிவு ஏற்பட்டவுடன் ஓரிரு அனுதாப வார்த்தைகள், எம்மாலான சிறுசிறு உதவிகள் என சில நாட்கள் கடந்தவுடன் அடுத்தடுத்த நிகழ்வு களுக்குள் அமிழ்ந்துவிடுகின்றோம்...

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்..", "தனி மனிதனுக்கு உணவில்லை எனில், ஜகத்தினை அழித்திடுவோம்" என்பவையெல்லாம் வெறும் மேடைப் பேச்சுகளுக்கு மாத்திரமோ..!

இவற்றை எண்ணும்போது சொற்கள் தடுமாறுகின்றன... உள்ளம் தள்ளாடுகின்றது...

கலை, இலக்கியத்தால் மனிதம் காப்போம்...

❍❍❍





# இராவணன் தமிழனா?

### இராமாயணம் உண்மைக் கதையா?

**சு**வாமி **விவேகானந்தர்** அமெரிக்காவில் சிக்காக்கோச் சொற்பொழிவுகளை முடித்துக் கொண்டு இலங்கையின் தலைநகராகிய கொழும்புக்கு வந்தார். அங்கே அவருக்குப் பெரும் வரவேற்புவிழா நடைபெற்றது.

அதன்பின் யாழ்ப்பாணம் செல்லும் வழியில் அனுராதபுர நகரில் பெரும் வரவேற்பைப் பெற்றார். அப்போது அனுராதபுரத்தில் ஏராளமான சைவத் தமிழர்கள் வாழ்ந்தார்கள். அவரின் ஞாபகார்த்தமாக அனுராதபுரத்தில் **விவேகானந்த வித்தியாலயம்** என்ற பெயரில் ஒரு பாடசாலை இப்போதும் இயங்கி வருகின்றது. இப்போது பெருமளவுக்கு முஸ்லிம் பிள்ளைகளே அப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.

அவர் வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் சென்றார். வவுனியா நகர் அப்போது அனுராத புர நகர் அளவுக்கு வளர்ச்சியடைந்த நகராக, தமிழ்ச் சைவர்களைக்கொண்ட நகராக இருந் திருக்கவில்லை. அதனால் அவருக்கு வவுனி யாவில் வரவேற்பு வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாண மக்கள் அவருக்குப் பெரும் வரவேற்பளித்தனர். அங்கே **யாழ் இந்துக் கல் லூரி**யில் உரையாற்றினார். பின் தலைமன்னார் ஊடாக தமிழகத்திற்குச் சென்றார் என்பது வரலாற்றுத் தகவல்.

தமிழகத்திலே அவருக்கு நடைபெற்ற வரவேற்பு விழாவின்பின் பத்திரிகை நிருபர் களுக்குப் பேட்டியளித்தார். இந்து பத்திரிகை நிருபர் அவரிடம் இராமாயணம் வரலாறா? இதிகாசமா? என்ற கேள்வியைக் கேட்டார். சுவாமி விவேகானந்தர் கேள்வியின் உள் நோக்கத்தைப் புரிந்துகொண்டு நேரடியாக விடையைச் சொல்லாமல் “என்னுடைய மதம் எந்த ஒரு தனிக் கதா பாத்திரத்தையும் சார்ந்து இருகின்ற பலவீனமான மதம் அல்ல”. என்றார். பின்பும் அந்த நிருபர் இராமன் வரலாற்று நாயகனா? இதிகாச நாயகனா? என்று கேட்கிறார். அதற்கு அவர் சொல்கிறார் “மதத் தலைவர்களில் நான் அறிந்த வரையில் கௌதம புத்தரும், முகமது நபியும் மட்டுமே வரலாற்று நாயகர்கள்” என்கிறார். அத்தோடு இன்னொன்றையும் சொல்கிறார். “முதன் முறையாக காட்டுக்குச் சென்ற ஆரியர்கள் தம்மைவிட அழகு குறைந்தவர்களைக் கண்டு குரங்குகள் என்றும், தம்மைவிட பலம் கூடியவர் களைக் கண்டு அரக்கர்கள் என்றும் குறிப்பிட்டனர்.” என்றார். (நன்றி-திரு.சு.வெங்கடேசன், வேள்பாரி நாவல் ஆசிரியர். இந்திய மக்களவை உறுப்பினர்.)

இன்றும் அழகு குறைந்தவர்களை குரங்கு போல என்று சொல்வதும் வலிமை கூடிய வர்களை அரக்கர் போல என்றும் சொல்வது வழக்கம். இன்று பெரு வலி படைத்தவர்களையும் இரக்கமில்லாதவர்களையும் கொடுமை செய்பவர் களையும் அரக்கர்கள் என்று சொல்கிறோம். “இராமாயணம் ஆரியருக்கும் திராவிடருக்கும் இடையே நடைபெற்ற போரைப் பற்றிச் சொல்லுகின்ற கதை” என்கின்றனர் இந்தியாவின் முன்னாள் பிரதமர் பண்டிதர் **ஜவகர் லால் நேரு** அவர் களும் தமிழ் அறிஞர்



**தமிழ்மணி அகளங்கன்**

***பி.டி.சீனிவாச ஐயங்கார்*** அவர்களும். இவர்கள் இராமனை ஆரியன் என்றும் இராவணனைத் திராவிடன் என்றும் சொல்கின்றனர்.

பலமொழிகளில் பல இராமாயணங்கள் பலரால் பல பெயர்களில் பலகாலங்களில் பாடப் பட்டுள்ளன. உலகின் முதல் இராமாயணம் ***பௌத்த ராமாயணமாக*** இருக்கலாம் என்கின்றனர். சில ஆய்வாளர்கள். (நன்றி ஆய்வாளர் மன்னர் மன்னன்),

வான்மீகி இராமாயணத்தில் பௌத்த சமயம் பற்றி பல சந்தர்ப்பங்களில் சொல்லப் பட்டுள்ளது என்றும் சொல்கிறார்கள். இராமனுக்கு முடிசூட்டு விழா என்று கேள்வியுற்று கோசல நாட்டு மக்கள் நகரை அலங்கரிக்கும் போது பௌத்த விகாரைகளிலும் தோரணங்களைக் கட்டினார்கள் என்று வான்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளதாகக் காட்டுகிறார்கள்.

புத்தரின் காலம் கி.மு.5-6 என்றால் மேலே சொல்லிய செய்தியின்படி வான்மீகியின் காலம் அதற்குப் பிந்தியதே எனலாம். இராமனின் காலத்தில் வான்மீகி வாழ்ந்தார் என்பது பௌத்தத்திற்கு முந்தியது இராமாயணம் என்று காட்டவே என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அதிலும் இராமனின் முடிசூட்டு விழாவின் போது பௌத்த விகாரைகளிலும் தோரணங்கட்டி அலங்கரித்தார்கள் என்பது மிகவும் ஆச்சரிய மான செய்தி. இதன்படி பார்த்தால் புத்தர் இராமருக்கு முற்பட்டவராகிவிடுகிறார். வான் மீகியும் இராமரும் சமகாலத்தவர்கள் என்றால் இப்படித்தான் முடிவுகட்டவேண்டிவரும்.

நான்கு யுகக் கணக்கிலே ***கிரேதா யுகம்*** முதலாவது என்றும், அந்த யுகத்திலேதான் இராமாயணக் கதை நடைபெற்றது என்றும் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். வாலிக்கு இராமன் மறைந்திருந்து அம்புவிட இறக்குந் தறுவாயில் இருந்த வாலி இராமனை ஏசும்போது,

ஒலிகடல் உலகந் தன்னில் ஊர்தரு குரங்கின் மாட்டே
கலியது காலம் வந்து பரந்ததோ கருணை வள்ளால்!

ஊர்ந்து திரிகின்ற சாதாரண பிறவியாகிய குரங்கிலேதான் கலிகாலம் வந்து பிறந்திருக் கிறதோ? என்று வாலி கேட்பதாகக் **கம்பன்** சொல்கிறான். கிரேதா யுகத்திற்குப் பின் திரேதாயுகமும், துவாபர யுகமும் வந்து முடிந்த பின்தான் கலியுகம் வரும் என்பதும் கலியுகத்தில் அதர்மம் அதிகரித்திருக்கும் என்பதும் இந்து சமயக் கோட்பாடு.

இராம இராச்சியத்தை விரும்பிய மகாகவி ***பாரதியார்*** “கிருதயுகம் எழுக!..” என்று பாடிய தையும் நினைவுகூரலாம்.

கம்பராமாயணத்திற்குச் சிறந்த உரை எழுதிய ***வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்*** தனது உரையில் இராமாயணகாலத்தை கிருத யுகம் என்று குறிப்பிடுகிறார். அப்படியென்றால் கிருத யுகத்தில் பௌத்தம் இருந்ததா? இருந் திருக்க முடியாது.

இராமனை ஆரியன் என்று வான்மீகியும் கம்பனும் குறிப்பிடுகிறார்கள். அப்படி என்றால் கிரேதா யுகத்தில் ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்து விட்டார்களா? “தேவ பாடையில் இக்கதை சொன்னவர் மூவர்” என்று சொல்கிறார் கம்பர். தேவபாடை என்பது சம்ஸ்கிருத மொழியைக் குறித்தது. மூவரில் முந்தியவராகிய வான்மீகி, இராமாயணத்தை வடமொழியாகிய சமஸ்கிரு தத்தில் பாடியிருக்கிறார். அப்படியென்றால் கிரேதா யுகத்தில் சமஸ்கிருதமொழி இருந்திருக் கிறதா? இப்படிப் பலகேள்விகள் எழுந்துள்ளன.

வேதத்தை எழுதா மறை என்கின்றனர். வேதங்கள் செவிவழியாக குருசிஷ்ய பரம்பரை யாக பரப்பப்பட்டு வந்தன என்பதுதான் முடிவு. வேதங்கள் எழுத்துவடிவுக்கு எப்போது வந்தன?

மகா விஷ்ணு மூர்த்தியின் முதலாவது அவதாரம் மச்ச அவதாரம் என்கின்றனர். மச்சம் என்றால் மீன். கடலுக்குள் வீழ்ந்த வேதங்களை எடுப்பதற்காகத்தான் மகாவிஷ்ணு மச்ச அவதாரம் எடுத்தார் என்று புராணங்கள் சொல்கின்றன.

அப்படியென்றால் மகாவிஷ்ணுவின் முதல் அவதாரத்துக்கு முன்பே சமஸ்கிருத மொழி தோன்றிவிட்டதா? எழுத்து மொழியாக இருந்தி ருக்கிறதா? அப்படியென்றால் வேதங்களுக்கு எழுதாமறை என்ற பெயர் ஏன்வந்தது? என்று பல கேள்விகள் எழுகின்றன.

பௌத்த இராமாயணம், வான்மீகி இராமாயணம், வசிட்டரின் அத்தியாத்ம இராமா யணம், போதாயனரின் இராமாயணம், கம்ப இராமாயணம், துளசிதாசரின் இராமாயணம், வங்காளக் கவி மதுசூதன தத்தரின் மேக நாத வதம், கிருத்தி வாசனின் வங்காள இராமாயணம், சமண இராமாயணம், கர்நாடக இராமாயணம், கருவூர்ச் சித்தரின் சித்த இராமா யணம், புலவர் குழந்தையின் இராவண காவியம், கவிஞர் வாலியின் புதுக்கவிதையில் அமைந்த

அவதார புருஷன், இலங்கை காப்பியக்கோ ஜின்னா சரிபுத்தீனின் "மைவண்ணன் இராம காவியம்" என இன்னும் ஐம்பதிற்கும் மேற்பட்ட இராமாயணங்கள் கவிதையில் வந்துவிட்டன.

பகவான் சத்திய பாபாவின் இராமாயணம், சின்மயானந்தரின் இராமாயணம் என பல இராமாயணங்கள் வந்துவிட்டன. இந்திய மொழிகளில் மட்டும் எழுதப்பட்டும் எழுதப் படாமலும் நானூறுக்கும் மேற்பட்ட இராமா யணங்கள் இருக்கின்றன என்கிறார் ஆய்வாளர் **ஒடிஸா பாலு**.

இந்த இராமாயணங்களில் வங்காள மொழியில் ***கிருத்திவாசன்*** எழுதிய இராமா யணத்தில் விபீடணனைத் தேசத் துரோகி என்றும் குலத்துரோகி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது வித்தியாசமானது.

சமண இராமாயணத்தில் இராவணனை இலக்குவனே கொன்றான் என்று சொல்லப் பட்டுள்ளது. சீதை இராவணனுக்கு மகள் என்றும் சொல்கிறது. கர்நாடக இராமாயணத்தில் இலக்குவனுக்கே முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

தாய்லாந்து இராமாயணத்தில் அனுமனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அசாம் இராமாயணத்தில் இராமனும் இராவண னும் ஒன்றாக இருந்து உரையாடுவதாகவும் சீதையும் மண்டோதரியும் விறகுகளைப் பொறுக்கிக் கொண்டு வீட்டுக்கு வருவதாகவும், நால்வரும் சேர்ந்து ஒன்றாக இருந்து உணவு உண்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

வான்மீகிக்கு முன்பே வடமொழியில் கவிதை கள் இருந்தன என்றும் அந்த அடிப்படையில் வான்மீகி ஆதிகவி என்று அழைக்கப்பட வில்லை என்றும் இராமாயணத்தை முதலில் பாடியதால் இராமாயணத்தின் ஆதிகவி என்ற பொருளில் வான்மீகி ஆதிகவி என்று அழைக்கப்பட்டார் என்றும் சிலர் கருதுகின்றனர்.

வடமொழியில் நாலடிப் பாடல்களாக முதன் முதல் பாடியவர் வான்மீகி என்றும் அந்தக் கவி வடிவத்தின் ஆதிகவி வான்மீகி என்றும் சிலர் சொல்கிறார்கள். கம்பன் இராமாயணத்தில் வான் மீகி பற்றிக் குறிப்பிடும் பொழுது "வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்" என்று தொடங்குகின்றான். வாங்கரும் பாதம் என்றால் நான்கு அடிகளைக் கொண்ட வான் மீகியின் பாடல்களில் எந்த ஒரு அடியையும் எடுத்துவிட்டு வேறு ஒரு அடியைப் போட்டு வேறு எந்தப் பெரும் புலவனாலும் மாற்றீடு செய்ய முடியாதபடி நான்கு அடிகளையும் பொருத்தமாகப் பாடியவன் என்று பொருள்.

வான்மீகி எந்த ஒரு அடியும் மாற்றீடு செய்யப்பட முடியாதபடி நாலடிப் பாடல்களைப் பாடிய முதல்க் கவி என்பதால் ஆதிகவி எனப்பெயர் பெற்றான் என்பர். வான்மீகிக்கு முன் சுலோகங்களாகவே பாடல்கள் இருந்தன எனக் கருதலாம்.

## தமிழில் இராமாயணச் செய்திகள்

கம்பனுக்கு முன்பே தமிழிலில் அகவல், விருத்தம், வெண்பா ஆகிய யாப்புக்களில் இராமாயணம் பாடப்பட்டுள்ளது. தொல்காப்பிய உரையிலும், யாப்பருங்கல உரையிலும் சில தொகை நூற் செய்யுட்களிலும் காட்டப்பட்டுள்ள பாடல்களிலிருந்தும் இதை அறியமுடிகிறது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலாகச் சொல்லப்படும் **புற நானூற்றில்** இடம்பெற்றுள்ள **ஊன்பொதி பசுங்குடையார்** என்ற புலவரின் பாடலொன்றில் இராமாயணத்துச் செய்தி ஒன்று சொல்லப்பட்டுள்ளது.

இராவணன் சீதையைக் கவர்ந்துகொண்டு செல்லும்போது சீதை அடையாளத்துக்காக தன் அணிகலன்களைக் கழற்றி எறிந்துகொண்டு சென்றாள் என்றும் அவற்றைக் குரங்குகள் கண்டெடுத்து அணிந்து அழகு பார்த்தன என்றும் செய்தி உண்டு.

அந்த அணிகலன்களை அதுவரையில் கண்டிராத குரங்குகள் எந்த ஆபரணத்தை எந்த அங்கத்திலே அணிவதென்று தெரியாமல் விரலில் அணியவேண்டியதை காதிலும் காதில் அணியவேண்டியதை விரலிலும், இடையில் அணியவேண்டியதை கழுத்திலும் கழுத்தில் அணியவேண்டியதை இடையிலும் அணிந்தன என்று இராமாயணத்தில் கதை உண்டு.

இந்தக் கதை கம்பனுக்கு ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பாகவே தமிழில் வந்துவிட்டது. ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் இளஞ்சேட் சென்னி என்ற அரசனின் கொடைச் சிறப்பைப் பாடும்போது இக்கதையைச் சொல்கிறார்.

“தென் பரதவர் மிடல் சாய
------- ---- ----
எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த அல்ல மிகப்பல
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே! அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரல்செறி மரபின் செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின் விரற் செறிக் குநரும்
அரைக்கமை மரபின் மிடற்றியாக் குநரும்
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தா அங்கு
---- ---- ----” (புறநானூறு 378)

இளஞ்சேட்சென்னியின் கொடைச் சிறப்பை ஊன்பொதி பசுங்குடையார் என்ற பாணன் பாடிய பாடலே அது.

“நான், இளஞ்சேட்சென்னியின் சிறப்புகளைக் குறைவில்லாது வஞ்சிப் பாடலாகப் பாட அதைக் கேட்ட இளஞ்சேட்சென்னி புலவர்களுக்கும் பாணர் களுக்கும் வழமையாகக் கொடுக்கும் ஆபரணங்கள் அல்லாத அவற்றிலும் மேம்பட்ட அதிக அளவான சிறந்த ஆபரணங்களை என் கை தாங்காத அளவுக் குத் தந்தான்.
அவற்றை வீட்டுக்குக் கொண்டு சென்றபோது அவற்றைக் கண்ட மிகவும் வறுமையிலிருந்த எனது பெரும் உறவினர்கள் விரலில் அணியவேண்டியதை செவியில் அணிந்தனர். செவியில் அணிய வேண்டியதை விரலில் அணிந்தனர். இடையில் அணியவேண்டியதை கழுத்தில் அணிந்தனர். கழுத் தில் அணியவேண்டியதை இடையில் அணிந்தனர். இராமனது மனைவியாகிய சீதையை இராவண னாகிய அரக்கன் வலிந்து கவர்ந்து சென்றபோது சீதை கழற்றி எறிந்து நிலத்தில் கிடந்த அழகிய ஆபரணங்களைக் கண்டெடுத்த குரங்குக்கூட்டம் செய்ததைப்போல இருந்தது அவர்களின் செய்கை”

என்கிறான் பாணன். இப்பாடலில் இராவணனை அரக்கன் என்கிறார். குரங்குக் கூட்டத்தை செம்முகப் பெருங்கிளை என்கிறார்.

வான்மீகி இராமாயணத்தில் இல்லாத இராமன் சீதை காதலை கம்பன் தனது இராமா யணத்தில் காட்டியதற்கு அவன் படித்த பழைய தமிழ் இராமாயணங்கள் துணையாகி யிருக்கலாம்.



**இராவணன் இலங்கையை ஆட்சிசெய்தவன் என்பது எல்லா இராமாயணங்களிலும் சொல்லப்பட்டுள்ளது.**
**ஆனால் அந்த இலங்கை நாம் வாழும் இந்த இலங்கைதானா? என்பதில் பலருக்குச் சந்தேகம் உள்ளது.**
**இலங்கையில் வாழும் சிங்களவர்கள் இராவணனைத் தம் மூதாதை என்று சொந்தங் கொண்டாடத் தொடங்கிவிட்டனர். “ராவண பலய” என்ற பெயரில் ஒரு கட்சியும் நடத்துகிறார்கள்.**

தொல்காப்பிய அகத்திணை இயலில் இராமன சீதை காதல் உதாரணமாக்கப்பட்டுள்ளது. இராமனும் சீதையும் காதலித்ததாகக் கம்பன் காட்டுவதற்கு இதுவும் காரணமாகியிருக்கலாம்.

“அருந்தவ முனிவன் வேள்வி போற்றிய
இராமனவனொடு மிதிலை மூதூர் எய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கட் சீதை ---”

அரிய தவமுனிவனாகிய ***விசுவாமித்திர முனி*** வனது வேள்வியைக் காப்பாற்றிய இராமன் அம்முனிவரோடு மிதிலை என்னும் பழைமையான நகரத்திற்குச் சென்றபோது இராமனைக் காதலித்த பெரிய கண்களைக் கொண்ட சீதை என்பது இதன் பொருள். மதி உடன்பாடு என்ற அருமையான பொருள் பொதிந்த சொல் இன்று மறைந்து காதல் என்ற சொல் நிலைத்துவிட்டது.

***சிலப்பதிகாரத்திலே*** வாமனர், இராமர், கிருஷ்ணர் ஆகியோர் திருமாலின் அவதாரங்

களாகச் சொல்லப்பட்டுள்ளனர். ஆய்ச்சியர் குரவையில் **இளங்கோ அடிகள்** இதனைப் பின் வருமாறு சொல்கிறார். ஆய்ச்சியர் குரவையில் ஒருபாடல்

மூவடியால் ஈருலகும் முறைநிரம்பா வகைமுடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரனும் போர்மடியத் தொல் இலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே?
திருமால்சீர் கேளாத செவி என்ன செவியே?

மூன்று அடிகளால் இரண்டு உலகங்களையும் தாவி அளந்த சிறப்புமிக்க திருவடி சிவந்துபோக தம்பியொடும் இராமன் காட்டுக்குச் சென்ற கதையும் இலங்கையை அழித்த கதையும் இராமன் திருமாலின் அவதாரம் என்ற செய்தி யும் சொல்லப்பட்டுள்ளன.

வான்மீகியின் இராமாயணத்தை அப்படியே தமிழில் பாடுவதாகச் சத்தியம் செய்துவிட்டு வான்மீகி சொல்லாதவைகளைச் சொல்லியும், சொல்லியவற்றில் மாறுபாடுகளைச் சொல்லி யும், சிலவற்றைக் கைவிட்டும் கம்பன் இராமாயணத்தில் பாடியிருப்பதற்கு அவன் படித்த தமிழ் இராமாயணங்கள் காரணமாக இருந்திருக்குமோ என்ற சந்தேகம் எழுவதற்கு நியாயம் உண்டு.

***வசிட்டர்***, **போதாயனர்**, ***வான்மீகி*** என்போரே இராமாயணத்தைச் சொன்ன மூவர் என்பது கம்பனின் அறிவு. இவர்களுள் முதல்ச் சொன்னவராக கம்பன் சொல்லும் வான்மீகிக்கு முன்பே இராமாயணத்தைச் சொல்லிவிட்டார்கள் என்பது இன்றைய முடிவு.

நாலடிப் பாடல் வடிவில் வடமொழியில் இராமாயணத்தை முதலில் பாடியவர் வான்மீகியாக இருக்கலாம். அதையே கம்பன் குறிப்பிட்டதாகவும் கருதலாம்.

## இராவணன் தமிழனா?

இலங்கையை ஆட்சிசெய்த இராவணனைத் தமிழன் என்று சொந்தங் கொண்டாடுகிறார் பாரதிதாசன்.

தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன்
என் சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா
அன்றந்த இலங்கைதனை ஆண்டமறத் தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடைகொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல்புரியும் கூட்டத்தின் கூற்றம்.
என்தமிழர் மூதாதை என்தமிழர் பெருமான்
அவன்நாமம் இவ்வுலகம் அறியும், இராவணன்காண்.
வஞ்சக விபீசணனின் அண்ணனென்று தன்னை
வையத்தார் சொல்லுமொரு மாபழிக்கே அஞ்சும்
நெஞ்சகனை, நல்யாழின் நரம்புகளைத் தடவி
நிறையிசைச் செவியமுது தரும்புலவன் தன்னை
வெஞ்சமரில் சாதல்வர நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையை தமிழ்மறைகள் நான்கும்
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்களைத்
தமிழரென்பேன் மறந்தாரைச் சழக்கரெனச் சொல் வேன்,

என்றவாறாக இராவணனை மறத் தமிழன் என்கிறார். இன்று இலங்கையில் வாழும் தமிழர்களாகிய நாங்கள் இராவணனை எம் மூதாதை என்று சொல்லத் தொடங்கிவிட்டோம். ***லங்கம்*** என்பதன் பொருள் கடல் நடுவில் இருக்கும் சிறு மணற்திட்டு என்கிறது கழகத் தமிழ் அகராதி.. ஆற்றிடைத் தீவு என்றும் சொல்கிறார்கள்.

இராவணன் இலங்கையை ஆட்சிசெய்தவன் என்பது எல்லா இராமாயணங்களிலும் சொல்லப் பட்டுள்ளது. ஆனால் அந்த இலங்கை நாம் வாழும் இந்த இலங்கைதானா? என்பதில் பலருக்குச் சந்தேகம் உள்ளது.

இலங்கையில் வாழும் சிங்களவர்கள் இராவணனைத் தம் மூதாதை என்று சொந்தங் கொண்டாடத் தொடங்கிவிட்டனர். ***றாவண பலய*** என்ற பெயரில் ஒரு கட்சியும் நடத்துகிறார்கள்.

இராமாயணம் சொல்லும் இலங்கை இன்று நாம் வாழும் இலங்கை அல்ல இந்தியாவின் வடநாட்டுப் பகுதியில் ஓடிஸா மாநிலத்தோடு தொடர்புள்ள ஒரு தீவு என்று சில ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

தாங்கள் இராவணனின் பரம்பரையினர் என்றும் இந்தியாவின் வடநாட்டில் உள்ள சிலர் பலகாலமாகச் சொல்லி வருகின்றனர். இராவணனை கடவுளாக வழிபட்டும் வருகின் றனர். சில ஆய்வாளர்களும் அதனை ஏற்றுக் கொள்கின்றனர்,

# ஞாபகமா?

ஞாபகமா... ஞாபகமா?
உயிரே ஞாபகமா?
கரத்தில் முகம் புதைத்து
கண்ணால் எனை கவர்ந்த
கணங்கள்தான் ஞாபகமா?

கடிதங்கள் நீ எழுதி
காதலையும் அதில் எழுதி
காலவெள்ள ஓட்டத்திலே
கடந்தது ஞாபகமா?
நனைந்தது ஞாபகமா?

சிமிட்டி நீ அணிய
சிறு மீசை நான் அணிய
பள்ளிக் காதலிது
ஞாபகமா?
நிலம் பார்த்த ஞாபகமா?
அந்த நிலவு பார்த்த ஞாபகமா?



ஊர் கூடி தேர் இழுக்க
உனைத் தேடி நான் இருக்க
ஊர் கோயில் சிலை போலே
உலா வந்த ஞாபகமா?
உயிரே ஞாபகமா?

நெஞ்சில் நீ முகம் புதைத்து
நீள்மூச்சை தான் உதிர்த்து
மறவேனே என்று சொன்ன
மந்திரங்கள் ஞாபகமா?
அன்பே, தந்திரங்கள் ஞாபகமா?

மலருக்கு மணம் புதிதா
தேனுக்கு சுவை புதிதா
காதலுக்கு நாம் புதிதா
இல்லை கண்ணே,
பிரிவுதான் புதிதடி!
கண்ணே பிரிவு புதிதடி!

தாய் சேயை மறந்தாலும்
வண்டு மலர் மறந்தாலும்
வானம் புவி வீழ்ந்தாலும்
மறவேன் என்று சொன்னாய்
மலரே ஞாபகமா?
என் உயிரே ஞாபகமா?

ஞாபகமா ஞாபகமா?
கரத்தில் முகம் புதைத்து
கண்ணால் என்னை கவர்ந்த
கணங்கள் தான் ஞாபகமா?
கனவுகள் ஞாபகமா?
அன்பே... ஞாபகமே...
இன்னும் ஞாபகமே!

**கிறிஸ்டி நல்லரெத்தினம்**




# முல்லையழகி என் பெயரென்றால்

முதல் பார்வையிலேயே நந்தினியைக் கவர்ந்தவள் அவள். அது ஒரு அற்புதமான அழகென்றோ குடும்பப் பாங்கான முகமென்றோ கூறமுடியாது. அளவெடுத்தால் போன்ற நாசி, உதடுகள், கருணைமிகும் கண்கள் என்றும் சொல்ல இயலாது. ஆனால் பார்ப்பவர் கண்களை மீண்டும் மீண்டும் பார்க்க வைக்கும் கவர்ச்சி மிகுந்த மாயவசீகரம் அவளிடம் இருந்தது.

பெண்களின் நியம அளவிடைகளுக்கு ஏற்ப அமைந்த தனது மெல்லிடையின் மேலும் கீழும் உடலின் செழுமைகளை வெளிக்காட்டும் வண்ணம் ‘லோநெக்’ ‘லோஹிப்’, சற்றே மெல்லிய சேலை அணிந்து, தொங்க விடப்பட்ட முந்தானை காற்றில் அசைய, காலைப் பொழுதொன்றில் அவள் அலுவலகம் புறப்பட்டு கேற்றுக்கு வெளியே வந்த போது, நந்தினி தன் தந்தையுடன் *Purple House* எனும் பெயர் கொண்ட அந்த “ஊதா இல்லத்தினுள்” நுழைந்து கொண்டிருந்தாள்.

பின்னாலேயே ஓடி வந்தார் ஹாஸ்டல் சொந்தக்காரி சுமணா அன்ரி.

“அழகி துவ, லஞ்ச் பொக்ஸ் எக அமதக வுனா நேத, ஆய் படகின்னென் இன்ன வெய்” என்றார் வாஞ்சையுடன். மதிய உணவை எடுக்க மறந்தாலும், பசியறிந்து மகளே என அன்புடன் அழைத்து, வாசல்வரை வந்து தந்த சுமணா அன்ரிக்கு நன்றியாக ஒரு முத்தம் தந்து பெற்றுக் கொண்ட அதேவேளை, சுமணா அன்ரியின் பின்னால் வீட்டு வாசலில் வந்து நின்ற அழகிய இளைஞனைப் பார்த்து நளினமாகக் கையசைத்தாள்.

ஓ... இவள் பெயர் அழகியா ?

மெல்லிய புன்னகையை உதிர்த்தபடி மல்லிகை நறுமண வாசனையுடன் கடந்து சென்றவளை நோக்கிய நந்தினி, பாம்பு போல இடுப்பின் கீழ் தொங்கி இடம்வலமாக ஆடும் பின்னலின் லய நடனத்தை ரசித்தவாறே திரும்பினாள்.

தங்கள்மேல் பார்வையைப் பதித்த சுமணா அன்ரியிடம், படிப்பு முடியும்வரை நந்தினி அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளைக்கதைத்த பின், அன்பான பாது காப்பான இடத்தில் மகளைச் சேர்த்த திருப்தியுடன் தந்தை திரும்பிச் சென்றார்.

♦ ♦ ♦



ரஞ்ஜனி சுப்ரமணியம்

நந்தினியை அந்த முருகன் கோயிலில் வாரம் இரண்டு தரம் செவ்வாய் வெள்ளிகளில் காணலாம். அவளுக்கு கோயில் வருவது பலவிதங்களில் ஆறுதல் தருவது. தனக்கு மேலிருக்கும் இயற்கையின் சக்தியை, தான் விரும்பி மனம் கொண்ட வடிவில் காண்பது அதில் ஒன்று. நெடுங்கால தோழிகளைச் சந்தித்து கோயிலின் வெளியமர்ந்து நினைவுகளைப் பகிர்ந்து கொள்வது முக்கியமான மற்றொன்று. முதுமையின் தலைவாசலில் அவளுக்கான பெரும் மன ஆறுதல் அது. கொழும்பிலே படித்து அங்கேயே வாழ்ந்து வரும் அவளுக்குப் பல புதிய தோழிகளைத் தந்ததும் இந்தக் கோயில்தான்.

எல்லோரையும் சந்தித்தாயிற்று அழகியை மட்டும் அந்த சம்பவத்தின் பின் அவள் காணவேயில்லை என்பது பெரும் மனக்குறை. காலப்பயணத்தில் எத்தனை வருடங்கள் கடந்தாலும் மங்கியோ மக்கியோ போகாது, நெஞ்சில் உலர்ந்த நினைவுகள்.

அன்று வெள்ளிக்கிழமை. கோயிலை விட்டு வெளியே வந்தவள், வழமைபோல வாசலில் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து பிச்சை எடுப்பதுடன், வாகன வழிகாட்டியாகவும் உதவும் கால்களையிழந்த வயதானவருக்கு பணத்தைக் கொடுத்தபடி, அந்தப் பெண்ணை நோட்டமிட்டாள். அவளை சில வாரங்களாக இங்கு காண்பது நினைவில் வந்தது.

கோயிலுக்கு வெளியே உள்ள சிக்னல் கடவையில் உள்ள சீமெந்துக் கம்பத்தோடு முகத்தை ஒட்டி வைத்திருந்தாள். இரு கைகளும் கம்பத்தைச் சுற்றி இறுகப் பற்றி இருந்தன. தலையை ஒரு கறுப்புநிறத் துணியால் முழுதாகச் சுற்றியிருந்தாள். பழைய பட்டுச் சேலை ஒன்றைத் தாறுமாறாகக் கட்டியிருந்தாள். மயில்நீல நிறம் அழுக்கடைந்து மங்கிய போதும் தன் அழகின் பாதியை மங்காது வைத்திருந்தது..

கால்களும் உடலும் சரிவான கோணத்தில் நிலம் தொட, சாலையோரக் கடையில் ஒலித்த பாடலுக்கேற்ப நளினமாக உடலை அசைத்துக் கொண்டிருந்தாள். தாளலயத்திற்கேற்ப அசைந்த இடுப்பும் கால்களும், அவள் ஒரு காலத்தில் சிறந்த நடனமணியாக இருந்திருப்பாளோ எனும்படி நேர்த்தியாக இருந்தது.

"என்னோடு உன்னை
ஒன்றாக்கும் வரை
என்ன செய்தும்
வலி தீரவில்லை
கண்ணான கண்ணே
என் கண்ணாளா
என் உள் மன காதலை
கண்டாயா"

இளைய பாடகி தீ எனும் தீக்ஷிதா வெங்கடேசன் பாடிய பாடல் அது. நந்தினிக்கு மிகவும் பிடிக்கும். விரகத்தின் தேடல் மிகுந்த குரலில் ஒலித்த அந்தப் பாடல், மன ஆழத்தில் வசந்தகால நினைவுகளைத் தர, அதனை ரசித்தபடியே பாதசாரிக் கடவையைக் கடந்தாள். அந்தப் பாடலின் ஆரம்ப வரிகள் எப்போதுமே நந்தினிக்கு அழகியை நினைவுபடுத்தும்.

♦ ♦ ♦

ஊதா இல்லத்தில் நந்தினியும் அழகியும் இரண்டாவது மாடியில் அமைந்த ஒரே அறையைப் பகிர்ந்து கொண்டவர்கள். வீட்டின் அடித்தளத்தில் சுமணா அன்ரியின் குடும்பம். மேல் மாடிகளில் வாடகைக்கு இருப்பவர்கள். அநேகமாக இளம் பெண்கள். மாணவிகள்.

அழகி எல்லோரிடமும் இனிமையாகப் பழகுவாள். அழகாகப் பாடுவாள். ஆனால் மாடியில் அமைந்த அறையின் பல்கனியில் இருந்து அடிக்கடி ஆழ்ந்த யோசனையுடன் வடக்கு நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதையும் நந்தினி அவதானித்து இருக்கிறாள். ஏகாந்தமாக அவள் நினைவுகள் உலாவும் நெடும் பாதைகள் நந்தினி அறியாதவை.

பக்கத்து அறை தீபா, அழகியை சீண்டிக் கொண்டே இருப்பாள். அழகிக்கு அந்தப் பக்கம் இருந்து மதுவர்மனைத் தெரிகிறதாம் என்று. அழகி சிரித்துக் கொள்வாள். அது என்னவிதமான சிரிப்பு. சிரிப்பே அல்ல அழுகையின் மாற்று வெளிப்பாடு என்பது சில மாதங்களின் பின் தெரியவந்தது.

யார் மதுவர்மன் என்று கேட்கும் அளவிற்கு அன்று பழக்கம் போதாது.

மாதங்கள் விலகிச் செல்ல அழகி மனதால் நெருங்கினாள்.

‘‘என்னுடன் துணையாக ஓரிடம் வர முடியுமா நந்தினி? தனியேதான் செல்வது வழக்கம். இன்று எனது உடல்நிலை சரியாக இல்லை”

‘‘அதுக்கென்ன வருகிறேன்”

“இடம் தெரிந்தால் வருவீங்களோ தெரியாது ?”

“எங்கையென்றாலும் வருகிறேன் அழகி” மறுபேச்சில்லாமல் கிளம்பினாள்.

கதையோடு கதையாக மதுவர்மன் யாரென்ற சங்கதியையும் கேட்டுக் கொள்ளலாமே. அதற்கு முன்னோடியாக ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

“உங்கள் முழுப்பெயரே அழகி தானா?”

“இல்லை. முல்லை அழகி என் பெயர்” என்றவளின் முகம் பூவின் மலர்வினைக் கொண்டிருக்கவில்லை.

பொரளைச் சந்தியை நோக்கி நடந்தவர்கள், சில நிமிடங்களில் வந்து நின்ற இடத்தைப் பார்த்து கொஞ்சமல்ல அதிகமாகவே அதிர்ந்து போனாள் நந்தினி.

வெலிக்கடை சிறைச்சாலை.

“சற்று நேரம் வெளியில் இருங்கோ நந்தினி. பயப்பட வேண்டாம்” சொல்லிச் சென்றவள் ஒரு மணித்தியாலம் கழித்து மீண்டும் வந்தபோது முகம் வாடிப் போயிருந்தது.

“யாரைப் பார்க்கப் போனீர்கள்?”

“மதுவர்மனை”

“யாரது? உறவா?”

தலைகுனிந்து கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள். “என் கணவர். ஐந்து வருடங்களாக இங்குதான். ஒவ்வொரு முறை வரும் போதும் என் எதிர்பார்ப்புகள் மங்கிக் கொண்டே செல்கின்றன. இன்று மிகவும் ஏமாற்றம் தரும் நாள் நந்தினி. விடுதலைக்கான செய்தி அருகில் இல்லையென்றார்”

நந்தினியின் தோள் சாய்ந்து விக்கி விக்கி அழுதவள் தொடர்ந்தாள்.

“என்ன பாவம் செய்தேனோ. திருமணமாகி சில மாதங்களில் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்கள். ஆனால் அவர் எதிலும் சேர்ந்தவர் அல்ல”

மேற்கொண்டு கேட்க முடியாதபடி நந்தினி வாயடைத்துப் போயிருந்தாள்.

“எழுபத்தேழு இனக் கலவரத்தில் அப்பா கொல்லப்பட்டார். அதன் பின்தான் என் திருமணம் நடந்தது. காதல் திருமணம்தான். கல்யாணத்தின் பின் வெளிநாடு செல்வதாக எண்ணம் இருந்தது. ஆனால் நினைத்தது எதுவும் நடக்கவில்லை”

நந்தினி தனது கேள்விகளுக்காக வாய்திறக்க முதலே அழகியின் சிறைப்பட்ட மன உணர்வுகள் வலிய தடைகளை தகர்த்தெறிந்தபடி வெளிவரத் தொடங்கின. வீதியில் அழுவதைத் தவிர்க்க அருகில் இருந்த சோலைவனம் கைகொடுத்தது.

“அம்மாவும் என் கவலையில் போய்ச் சேர்ந்து விட்டார். நீதிமன்ற செலவுகளை என்னால் தனியாக சமாளிக்க முடியவில்லை. ஒரு தனியார் கம்பனியில் வரவேற்பாளராக வேலை செய்கிறேன். பல வேளைகளில் வீடு திரும்ப இரவாகிறது. முக்கிய விருந்தினரை உபசரித்தலும் மகிழ்வித்தலும் எழுதப்படாத எனது கடமைகளில் ஒன்று. மேலதிக வருமானம் கிடைக்கும்”

கனத்த மௌனத்தின் ஆழத்தில் புதைந்தாள் அழகி.

“சொல்லாத எண்ணங்கள் பலகோடி என் துன்பத்தின் கீதமடி” என அவளது உள்மனப்பாடல் காதுகளில் கேட்டது. ஆர்ப்பரிக்கும் மன ஓசைகளின் அவல கீதம் அது.

“மதுவர்மனிடம் எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டும்” என்றாள் திடீரென்று.

“இது என்ன புதுக்கதை அழகி”

“உங்களுக்குத் தெரியாது நந்தினி. நான் இரவு நேரங்களில் நேரம் பிந்தி வருவதையும், வெவ்வேறு கார்களில் வந்து இறங்குவதையும் சுமணா அன்ரி இப்போதெல்லாம் விரும்பு-வதில்லை. மனம் நோகும்படி மிக மோசமான வார்த்தைகளைக் கூறுகிறார். ஆனால் அது காரணமல்ல என்பது எனக்குத் தெரியும்”

“ம்.....” மிகுதியைக் கேட்க நேரமில்லை.

கரும் மழைமேகங்கள் சூழ, எழுந்து நடக்கத் தொங்கினோம். குடையை எடுத்துப் போக மறந்ததால் தொப்பலாக நனைந்த கோலத்தில் ஹாஸ்டலை அடைந்த போது காமினி வாசலில் நின்றிருந்தான்.

அவன் சுமணா அன்ரியின் மகன் என்பதை ஏற்கனவே நந்தினி அறிந்திருந்தாள். அழகானவன். மயக்கும் மோக விழிகள் அவனுடையவை. வெளிநாட்டில் வேலை செய்து விட்டு அண்மையில் தான் இலங்கை வந்திருந்தான்.

சரிந்து நின்றபடி, நனைந்திருந்த ஆடைகள் ஊடாக அழகியைப் பார்த்த அவனது கண்களின் இரகசிய மொழி, இவர்களுக்கிடையே இருந்த உறவு பற்றிய மெல்லிழையினை நந்தினியின் உணர்வுகளுக்குக் காட்டித் தந்தது. காலத்தின்

கொடுமையினை நினைத்தவாறு கண்களைத் தாழ்த்தினாள். அவனைக் கடந்து உள்ளே சென்ற போது மதுவின் வாசனை மூர்க்கமாகத் தாக்கியது.

அதன் பிறகு சில நாட்களில் ஹாஸ்டலுக்கு அண்மையான ஓரிடத்தில், கராஜ் போன்ற வெளி அறையொன்றிற்கு அழகி இடம் மாறியபோது, சுமணா அன்ரியின் வற்புறுத்தலால்தான் அது நடந்தது என்பதை உணர்வதற்கு சிரமம் இருக்கவில்லை. காமினியின் திருமணமும் வெகு விரைவில் ஆடம்பரமாக நடைபெற்றது. அழகிய மனைவியுடன் மணவாழ்வு அவனுக்கு மகிழ்வாகவே இருந்தது.

♦ ♦ ♦

வழியில் ஒருநாள் அழகியைக் கண்டபோது ஆதுரத்துடன் கைபற்றித் தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

“நந்தினி உங்களிடம் கதைத்தால் மனதுக்கு மிகவும் ஆறுதலாக இருக்கிறது . எனக்கு மனந்திறந்து கதைக்க எவருமில்லை”

“சொல்லுங்கோ அழகி. எப்படி இருக்கிறீர்கள். மிகவும் வாடிப்போய் இருக்கிறீர்கள்.

சுமணா அன்ரியின் மகன் காமினிக்குத் திருமணமாகி விட்டதே. உங்களுக்குத் தெரியுமா ?”

“தெரியாமலா? அவன் இப்போதெல்லாம் என்னைத் தேடி இங்கு வருவதில்லை”

அதிர்ச்சியாகினாள் நந்தினி. என்ன மாதிரியான பெண்ணிவள்?

நந்தினியின் மனதினை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

“பாருங்கள் நந்தினி. இந்த அறைக் கதவின் கீழிருக்கும் இடைவெளியால் வீதி தெரிகிறதல்லவா. காமினி இந்த வீதியால் செல்லும் போது அவனது வெண்மையான பாதங்கள் அந்த இடைவெளியின் ஊடாகத் தெரியும். அவனது முகத்தை மட்டுமல்ல பாதங்களைக்கூட என்னால் அடையாளம் காண முடியும். அத்தனை ஈர்ப்பு இருந்தது அவன்மேல். அவனைத் தினமும் காண்பதற்காகவே வசதிகள் அதிகம் இல்லாத போதும், இந்த அறைக்கு நான் குடி வந்தேன்”

நந்தினி திகைப்பு மாறாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

“சுமணா அன்ரிக்கு காமினி என்னுடன் நெருங்கிப் பழகுவது பிடிக்கவில்லை. அது நியாயம்தான். எனக்குப் புரிகிறது.

ஆனால் அவனுடைய அரவணைப்பு மிகுந்த அன்பை என்னால் தவிர்க்க முடியவில்லை. பரிதவித்து நிற்கும் எனது மனதிற்கு அவனுடைய உள்ளத்தின் நெருக்கம் மட்டுமல்ல....:

மிகுதியை சொல்வதற்கு மிகவும் சங்கடப் பட்டாள்.

“நான் செய்வது பிழையென்று எனக்குப் புரிகிறது. ஆனால் இது விதி எனக்களித்த பாதை. நான் இங்கு இடம் மாறிய புதிதில் பலநாட்கள் இரவில் யாருக்கும் தெரியாமல் வந்திருக்கிறான்.



அவனுடைய அன்பு உண்மையானது என்ற மன மயக்கத்தைத் தந்தது எனது அவலநிலை. இயலாமை. வேறு வழியில்லை”

“ஊரெல்லாம் தூங்கையிலே விழித்திருக்கும் என் இரவு

உலகமெல்லாம் சிரிக்கையிலே

அழுதிருக்கும் இந்த நிலவு”

அழகி அடிக்கடி பாடும் பாடலை அன்றும் விசும்பியபடி பாடினாள்.

அந்தக் குரலின் அவலம் நந்தினியையும் அழச்செய்வதாக இருந்தது.

“உங்களுடன் வந்த பிறகு, இரண்டு நாட்கள் முன்னதாக மதுவர்மனைப் பார்க்க சிறைச் சாலைக்குச் சென்றிருந்தேன். உடல் மெலிந்து வாடிப் போயிருந்தார். கடும் இருமல் இளைப்பு

வேறு. சற்று நேரத்தில் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும். கதைப்பதற்கு கூட மிகவும் சிரமமாக இருக்கிறதென்றார்.

“ஒரு மாதமாக இருமல் தொடர்வதால் காசநோயாக இருக்கலாம் என சந்தேகமும் இருக்கிறதாம்”

அவளது நிலைக்காக நந்தினியின் மனம் உருகியது.

“இறுதியாகச் செல்லும் போது காமினியுடன் எனக்கிருந்த தொடர்பு எல்லாவற்றையும் மதுவர்மனிடம் கூறி விட்டேன். என்னால் அவருடைய பரிதாபக் கோலத்தைப் பார்க்க முடியவில்லை. அன்று உண்மையைச் சொல்லாவிட்டால் எனது இதயம் வெடித்துவிடும் போல அப்படி ஒரு மரண வேதனை. துரோகம் செய்த உணர்வால் நான் மிகவும் நிலை குலைந்திருந்தேன்”

“அதற்கு அவர் என்ன சொன்னார்”

“என்னை நடத்தை கெட்டவள் துரோகி என்று கண்டபாட்டுக்கு திட்டியிருந்தால் கூட நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். எதுவுமே பேசவில்லையே நந்தினி. பேசுவதற்கு உடலில் வலுவும் இல்லை. நான் சொன்னவற்றைக் கேட்டு உள்ளத்து வலுவையும் இழந்திருப்பார். கலங்கிய கண்களுடன் மெதுவாகத் தலையசைத்தார். புரிந்து கொண்டேன் என்பது போல”

“இப்போ என்ன செய்யப் போகிறீர்கள் அழகி?”

“நான் யாரை நம்பி என் வாழ்வைத் தொடர்வது நந்தினி? நான் இதுவரை நம்பாத கடவுளைத் தான் நம்பி இருக்க வேண்டும்”

அழகி இப்போது உடைந்த குரலில் தேம்பி அழத் தொடங்கியிருந்தாள். எப்படித் தேற்றுவது எனத் தெரியவில்லை. விடைபெறும் போது கலங்கிய குரலில் அன்று அழகி கூறிய வசனம் இன்றும் நந்தினிக்கு நினைவில் ஒலித்தது.

கதைத்து விட்டு வெளியில் வந்தபோது வீதியில் மனிதர்கள் அளவுக்கு அதிகமான பதற்றத்தில் இருந்தாற்போல தோன்றியது. விடுதிக்கு வந்த போது சுமணா அன்ரியும் பதற்றத்தில் இருந்தார். விடுதியில் தமிழ் பெண்கள் அவசர அவசரமாக உடைகளையும் அத்தியாவசிய உடைமைகளையும் அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

அன்றும், தொடர்ந்த பல நாட்களும் அவசர அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தார்கள். அதே முகாமில் தான் அழகியும் இருந்தாள். உயிரைக் கையில் பிடித்தபடி மனம் பதறிய கணங்களில், கேள்விப்பட்ட ஒரு செய்தியால் அழகி மயக்க மடைந்தாள். கறுப்பு ஜூலையின் அடர்கருமை படர்ந்த நாள் அது. ஜூலை இருபத்தைந்து.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அழகிக்கு என்ன நடந்தது என அறியக் கூடிய நிலை இல்லை. முகாமில் இருந்து திக் கொன்றாக சிதறிய நந்தினியும் அழகியும் அதன் பின் நேரில் சந்திக்கவேயில்லை. தொடர்பும் இல்லை.

♦ ♦ ♦

அடுத்த வெள்ளியன்று வழமைபோல கோயிலுக்கு போன நந்தினி, வாசலிலே அந்த அவலத்தைக் காண நேர்ந்தது.

வீதிக்கடவைக்கு அருகில் ஆடிக் கொண்டிருந்த நீலவண்ணமயில் வீழ்ந்து கிடந்தாள்.

தலையில் கட்டியிருந்த கறுப்புத் துணி முழுதாக விலகியிருக்க பரட்டை படர்ந்த நீளக்கூந்தல் பாம்பு போல வீதியில் அவிழ்ந்து கிடந்தது.

அங்கு நின்ற யாருக்கும் அவள் யாரெனத் தெரியவில்லை.

“இந்த மனிசி கொஞ்சம் மரை கழண்ட கேஸ். கொஞ்ச நாளாக காலையில தொடக்கம் பின்னேரம் வரை இந்த சிக்னலில் தானே ஆடிக் கொண்டிருக்கும். நல்லா பாட்டும் பாடும். கொஞ்சநாளைக்கு முதல் வேறை ஒரு கோயிலில நின்று ஆடிக்கொண்டு இருந்தது”

கதைத்துக் கொண்டிருந்தவர்களின் வாயில் அன்று அவள் பெயர் அனாதைப் பிணம் என்றானது.

அப்போது தான்,

விரிந்து கிடந்த இடது கையை மூடியிருந்த முந்தானைச் சேலை காற்றில் அசைய, மதுவர்மன் என்ற பெயர் முன்கையில் பச்சை நிறத்தில் மின்னியது.

“முல்லை அழகி என் பெயரென்றால், இருத்தல் எனக்கு உரித்துடைய பண்பல்லவா”

அன்று அழகி கூறிய வரிகளால் நந்தினியின் நினைவு வலித்தது.

❍❍❍

# ஒழுங்கமைப்பு மோதல்

## (Organizational Conflict)



லத்பான் றோஸின்
பேராதனைப் பல்கலைக்கழகம்

**மோ**தல் என்ற கருத்தைத் தரும் Conflict என்ற ஆங்கிலப் பதம் Conflic-tus என்ற இலத்தீன் மொழிப் பதத்திலிருந்து உருவாக்கப் பட்டதாகும். Conflictus என்ற பதத்தின் பொருள் தீவிரமான சண்டை அல்லது மோதல் என்பதாகும். இதே அர்த்தத்தை தரும் வகையில் ஆங்கிலத்தில் Conflict என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. மனிதனிலிருந்து பிரிக்க முடியாததும், சமூக வாழ்க்கையில் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறதுமான சொற் பதமே மோதல் என்ற பதமாகும். ஒற்றுமை, உடன்பாடு, ஐக்கியம் போன்ற மன உணர்வுகள் சமுக வாழ்க்கையில் இரண்டறக்கலந்துள்ளமை போன்று சண்டை, தகராறு, உடன்பாடின்மை போன்ற மன உணர்வுகளும் இரண்டறக்கலந் துள்ளன. எனவே எதிர்வினைத் தொடர்புகள் அல்லது மகிழ்சியற்ற தொடர்புகள் மோதல் களைத் தோற்றுவிக்கின்றன எனப் பொதுவாகக் கூறலாம். உடன்பாடின்மை, வேறுபாடுகள் என்பவைகளுடன் மோதல் தொடர்புபட்டதாகும். எனவே வேறுபாடுகள், உடன்டின்மைகளால் மோதல் ஏற்படுகின்றது எனவும் கூறலாம்.

அச்சுறுத்துவது, மோதலைத்தூண்டுவது, மோதலுக்கான விவாதங்களை நடாத்துவது மோதலைத் தவிர்ப்பது போன்ற ஆற்றல்கள் மனிதர்களிடமுள்ளன. வேறுபாடுகளும் வேறுபாடுகளுடன் தொடர்புபடும் ஆற்றலும் சமூக வாழ்க்கையில் மனிதனை அச்சத்திற் குள்ளாக்குகின்றன. இத்தகைய மகிழ்ச்சியற்ற, எதிர்நிலையான உறவுகளும் மோதல்களை உருவாக்குகின்றன எனக் கூறலாம். மோதல் குறித்து பலரிடத்திலும் பல விதமான நோக்குகள் உள்ளது. சிலர் மோதல் என்பது எதிரான சூழ்நிலை அது எவ்விலை கொடுத்தேனும் தவிர்க்கப்படல் வேண்டும் எனக் கருதுகின்றனர். சிலர் அது ஒரு நிகழ்வு அது கட்டாயம் முகாமை செய்யப்படல் வேண்டும் எனக் கருதுகின்றனர். வேறு சிலர் மோதல் என்பது தனிப்பட்ட வளர்ச்சிக் கான உணர்ச்சியூட்டும் சந்தர்ப்பம் ஆதலால், அதன் முழு அளவிலான நன்மை பயன் படுத்தப்படல் வேண்டும் என நோக்குகின்றனர்.

தொழிற்பாட்டுவாத அணுகுமுறையை அல்லது கோட்பாட்டு அடிப்படையை ஆதரிப்ப வரான ஜோர்ஜ் சிம்மெல் (George Simmel) மோதலை மாறுபட்ட இருமைகளைத் தீர்க்க வடிவமைக்கப்பட்டது மோதுகின்ற ஒரு தரப்பை அழித்தல் அல்லது இல்லாமல் செய்தல் எனும் வழிமுறை ஊடாகவேனும் அது சில வகையான ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் வழி என்கின்றார். அதேபோல் மோதல் படிமுறையான விசைப்பண்பாகும் (Dynamic). இதில் கட்டமைப்பு, மனப்பாங்கு, நடத்தை என்பன ஒன்றின் மீது மற்றொன்று செல்வாக்குச் செலுத்துவதுடன் தொடர்ந்து இவைகள் மாற்றமடைந்து கொண்டிருக்கும் என ஜோகான் கல்துங் (Johan Galtung 1969) கூறுகிறார்.

ஒழுங்கமைப்புகளை பொறுத்தமட்டில் மோதல் முக்கியத்துவம் உடையதாக உள்ளது. பொதுத்துறை நிர்வாகத்தில் தாம் பணியாற்றும் சூழலில் பணியாட்களும் நிர்வாகிகளும் நாளாந்தம் பல்வேறுபட்ட மோதல்களை எதிர் கொள்வதுடன் அவற்றை சரியாக அல்லது முறையாகக் கையாளவும் கூடிய ஆற்றல்களைப் பெற்றிருப்பது தமது பண்ணிச் சூழலை அமைதி நிலவும் அல்லது சிரமமின்றி பணியாற்றக்கூடிய சூழலாக தொடர்ந்தும் பேண அவர்களுக்கு உதவுகின்றது. ஒழுங்கமைப்புகளில் பணியாற்று பவர்களின் வாழ்வில் மோதல் என்பது விரும்பி ஏற்றுக்கொள்கின்ற ஒரு விடயமல்ல. மோதல் குழல் என்பது உண்மையில் தவிர்க்கப்படக் கூடியது அன்று ஏனெனில், அது நிறுவன

ஒழுங்கமைப்பின் வெற்றிக்கு அதிகளவில் சவாலாக அல்லது தடையாகவே உள்ளது அதேபோல் ஒரு ஒழுங்கமைப்பை பலப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

ஒழுங்கமைப்பு மோதல் (*Organizational Conflict*) என்பதை வேலைத்தள மோதல் (*workplace conflict*) எனவும் அழைக்கப் படுகின்றது. வேலைத்தளத்தில் குறித்த வேலை (பணி) அல்லது தீர்மானம் குறித்து வேறுபட்ட அல்லது மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவும் போது மோதல்கள் தோற்றம் பெறுகின்றது. (உ.தா சம்பளம், வேலை நேரம்). ஒழுங்கமைப்பு மோதல் (*Organizational Conflict*) என்பது ஒரு நிறுவனத்திற்குள் தனிநபர்கள், குழுக்கள் அல்லது பிரிவுகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடு, முரண்பாடு அல்லது எதிர்ப்பு ஆகும். இது இயற்கையானதும், தவிர்க்க முடியாததுமான ஒரு நிகழ்வாகும்.

வேறுவகையில் கூறுகையில் ஒழுங்கமைப் பொன்றில் முறையான அதிகாரத்துவத்துக்கும் அங்கு பணியாற்றும் நபர்களுக்கும் இடையே தேவைகள், பெறுமானங்கள், நலன்கள் தொடர்பில் உண்மையில் வேறுபாடுகள் உள்ளது அல்லது வேறுபாடுகள் இருப்பதாக உணருகின்ற ஒரு எதிர்நிலை எனலாம்.

ஒழுங்கமைப்பு ஒன்றில் அதன் செயற்பாடு களானவை தனிப்பட்டவர்கள் அல்லது குழுக்களால் தொந்தரவு செய்யப்பட்டு அதனால் அவ்வொழுங்கமைப்பின் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ள முடியாதுள்ளபோது அங்கே மோதல் எழுச்சி பெறுகின்றது எனலாம். ஒழுங்கமைப்பொன்றில் பணிகள் மற்றும் வளங்கள் எவ்வாறு பகிரப்படல் வேண்டும்? எவ்வளவு நேரத்திற்கு பணியாட்கள் வேலை செய்ய வேண்டும்? என்பன தொடர்பில் எப்போதும் சர்ச்சைகள் வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்து கொண்டே இருக்கும். அவ்வாறே தனிப்பட்ட பிரிவுகள் மற்றும் இலாகாக்களுக்கு இடையேயும், தொழிற்சங்கங்கள் மற்றும் முகாமைத்துவத்திற்கு இடையேயும் அதிகார வரம்பு குறித்த உடன் பாடின்மையும் தொடர்ந்தும் காணப்படும்.

உண்மையில், ஒழுங்கமைப்புக்கள் பல்வேறு பட்ட தகுதிகள், நிபுணத்துவ அனுபவங்கள் கொண்ட வகுப்புக்களையும் தரங் களையும் கொண்ட அலுவலர்களைக் கொண் டுள்ளது. அங்கு அவ்வலுவலர்கள் தமது சக அலுவலர்களை ஒழுங்கமைப்பின் இலக்குளை அடைந்து கொள்வதற்காக இணைந்து பணி யாற்றும் பங்காளர்கள் எனக் கருதும் நிலையை விட போட்டியார்கள் எனும் கருதும் நிலையி லேயே அதிகளவில் உள்ளனர். ஆதலால், ஒழுங்கமைப்பின் ஒவ்வொரு செயற்பாட்டின் போதும் முக்கியமாக முகாமைத்துவம் தீர் மானங்களை எடுக்கும்போது மோதல்கள் உருவாகுவதற்கான சாத்தியம் அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறு ஒழுங்கமைப்புக்களில் உருவாகச் சாத்தியமாகவுள்ள மோதல்களை சாதகமாகவும் வினைத்திறனுடனும் கையாழ்வது என்பது நிர்வாகிகளுக்கும் மிகவும் அவசியமான மேலாள ருக்கும் சவாலாக உள்ளது. இடைநிலை நிர்வாகி களுக்கும் மிகவும் அவசியமான ஆற்றலாக உள்ளது. ஏனெனில், ஒழுங்கமைப்பொன்றின் மேலாளருக்கு (நிர்வாகி அல்லது முகாமை யாளர்) மோதல் என்பது மிகவும் முக்கியத்துவ மிக்கது. ஒழுங்கமைப்பு மோதல் என்பது எப்போதும் நிகழக்கூடியது. ஏனெனில், ஒழுங்க மைப்பை ஆளுகின்ற விதிகள், வழிமுறைகள். குறித்து இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது என்பது மிகவும் கடினமானது ஏனெனில், பணியாட் களிடையே அவை குறித்து வேறுபட்ட கருத்துக்களும் அடிப்படைகளும் தொடர்ந்தும் காணப்படும்.

பொதுவாக தெளிவில்லாத பொறுப்பு ஒப்படைப்பு, ஆட்களுக்கு இடையிலான முறை யற்ற உறவு, வளப்பற்றாக்குறை, நலன்களின் மோதல்கள், முகாமைத்துவத்தில் உச்சமட்ட எதிர்பார்க்கைகள், தொடர்பாடலில் காணப்படும் இடையூறுகள், சிறப்பு நிபுணத்துவம், பணியாளர் களுக்கு இடையில் காணப்படும் வேறுபாடு பணி சூழலில் ஒருவரில் ஒருவர் தங்கி இருத்தல், அதிகாரத்துவ உறவு போன்ற பல்வேறு காரணிகள் ஒழுங்கமைப்பில் மோதல் களை ஏற்படுத்துகின்றது. ஒழுங்கமைப்பு மோதல் தொடர்பான அறிஞர்களின் வரைவிலக் கணங்கள் பின்வருமாறு :

**லூயிஸ் ஆர். பிராங்க்** (Louis R. Pondy):- ஒழுங்கமைப்புச் செயற்பாட்டின் இயல்பான மற்றும் தவிர்க்க முடியாத அம்சம் என்று இவர் விவரித்தார். மோதல் ஐந்து நிலைகளைக் கொண்டது என இவர் பரிந்துரைத்தார் மறைக்கப்பட்ட மோதல், உணரப்பட்ட மோதல், உணர்ச்சிப்பூர்வமான மோதல், வெளிப்படையான மோதல் மற்றும் மோதலுக்குப் பிந்தைய நிலை.

**ரால்ஃப் டாரெண்டோர்** (Ralf Dahrendorf):- ஒழுங்கமைப்பு மோதல் என்பது சமூக அமைப்புகளில் உள்ளார்ந்த சர்வாதிகாரத் தொடர்புகளில் இருந்து உருவாகும் முரண்பாடுகளாகும். இது அதிகாரம், அதிகாரத்துவம் மற்றும் ஆதாரங்களைக் கட்டுப்படுத்தும் போட்டியில் இருந்து தோன்றுகிறது.

**ஜே. டபிள்யூ. டபிள்யூ. ஸ்டிலிங்** (J.C.W. van Stijn) :- ஒழுங்கமைப்பு மோதல் என்பது நிறுவனங்களில் உள்ள பல்வேறு அலகுகள்/பங்குதாரர்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செயல்பாட்டு கோரிக்கைகளை முன்வைக்கும் போது ஏற்படும் கட்டமைப்பு முரண்பாடாகும்.

**ஆலன்ஃபாக்ஸ்** (Alan Fox) :- தொழிற் சங்கங்கள், மேலாண்மை மற்றும் அரசாங்கக் கொள்கைகள் போன்ற நிறுவனங்களுக்கிடையேயான முரண்பாடுகள், குறிப்பாக தொழிலாளர் உறவுகளில் ஏற்படும் நிரந்தர மோதல் வடிவங்கள்.

எனவே ஒழுங்கமைப்பு மோதல்கள் அவசியமானவை அவை பல வழிகளில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தவல்லவை என்பதும் நோக்கத்தக்கது. மோதல்கள் இயற்கையானவை மோதல்கள் அவசியமானவை மோதல்கள் நமது மனோநிலைகளை, நடத்தைகளை, சிந்தனைகளை, செயற்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்க அல்லது பரிசீலனை செய்ய முகாமை செய்யப்பட்டால் பலருக்கும் பலதரப்பட்ட சாதகங்களைத் தரும் என்பதும் நோக்கத்தக்கது.


**உசாத்துணை:**

தனபாலசிங்கம். (2021), மோதல் தீர்வு கற்கைகள் ஓர் அறிமுகம், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

*Abdul Jabbar M, (2017), Peace and Social Harmony-11, Centre for External Degree and Professional Learning, South Eastern University of Sri Lanka.*

*Borisoff, D. & Victor, D.A. (1998). Conflict Management: A Communication Skills Approach. Needham Heights: Allyn & Bacon, A Viacom Company. Pp 78-80.*

*Hughes, C. (2001). An Investigation of Conflict Management in Cambodia Villages, University of Cambodia Centre for Development Research*

*Tjosvold, et al (1992). Managing Conflict Between Department to Serve Customers. Human Relations 45 (10), 1035-1054.*


❍❍❍




பச்சை மலைமுகடிடையே
தையல் ஒருத்தி தென்படுகிறாள்
முதுகிலே ஒரு கூடை கொழுந்தும்
தலையிலே ஒரு தலைப்பாகையும்
கரைவைத்த சேலையும்
இவையெல்லாம் இருக்க
அவளின் முகத்தினில் ஏதோ ஒரு சலனம்
ஓடுகிறது

கொழுந்து எடுத்த களையால்
அவள் விரல் பிளந்து
குருதியும் வடிகிறது
மலைமுகடுகளில் சுற்றுலா சென்றதால்
பாதங்களும் பிளந்து மரத்துப் போய்
இருக்கும்
அட்டைப்பூச்சிகூட அவளின் குருதி
மகிழ்ந்திருக்கும்
அத்தனையும் இருக்க அவளுக்கு
இந்நிலை எதற்கு?

அத்தனை பச்சை மேடையையும்
பவனி வந்து முடித்தாலும்
அவளுக்கு கிடைப்பது என்னவோ
போதாக் காசும் மிச்ச மஞ்சாடி தேயிலையும்
கங்காணி ஐயாவின் பேச்சுக்களுமே
இதற்கொரு விடை இல்லையா?


**எ.அ.கிறேஷா மிலானி**
பேராதனைப் பல்கலைக்கழகம்.



சிறுகதை

# குறும்புக்காரச் சிறுவர்களும் குரைக்கும் நாய்களும்

பல வருடங்களுக்குப்பின்னர் அவர் தன் ஊருக்கு வந்திருந்தார்.

அவர் ஒரு ஓய்வு பெற்ற அதிபர். அவரது ஊர் ஒரு கிராமம். அமைதியான கிராமம், புதிய நாகரிகத்தால் இன்னும் தாக்கப்படாத கிராமம். அழகான அவரது வீடு ஆற்றங்கரை ஓரத்தில் அமைந்திருந்தது.

தண்ணீர் எப்போதும் தள தளவென்று கண் முன்னால் காட்சி தரும். காற்று தண்ணீரைத் தழுவி குளிர்ச்சியை அவர் முற்றத்தில் கொணர்ந்து கொட்டும் வீட்டுக்கு முன்னால் மாமரங்களும் வேம்பு மரங்களும் வெயில் காலத்தில் நிழல் தந்து வெக்கை போக்கும் ரம்மியமான சூழல்.

நகர வாழ்க்கையை விட கிராம வாழ்வை அவர் மிகவும் விரும்பினார். நிர்ப்பந்தம் அவரைத் தலைநகர் வாழ்விற்குத் தள்ளி விட்டது. நகரில் வசதி இருந்தது கிராமத்தில் வாழ்வு இருந்தது. அவர் வாழ்வையே விரும்பினார்.

இப்போது அவர் நகர சூழலில் வாழ்ந்த அவர் மீண்டும் கிராம சூழலில் வாழ தன்னூர் திரும்பி இருந்தார். எண்பது வயதை கடந்து விட்ட அவர் இன்னும் தளர்ச்சி அடையவில்லை. அவரது உணவு பழக்க வழக்கமும் உடற் பயிற்சியும் அதற்கு ஒரு காரணமாக அமைந்தன. காலையில் எழுந்ததும் ஒரு நீண்ட நடைப் பயிற்சி செய்து வருவது அவரது தினக் கடமை களில் ஒன்றானது.

அவரது திறந்த இருதய சிகிச்சை 20 வருடங் களுக்கு முன் நடைபெற்றது. 15 வருடம் உத்தர வாதம் அளித்திருந்தார் இருதய சிகிச்சை நிபுணர். ஆனால் அவர் வைத்தியர் கொடுத்த கெடுவையும் தாண்டிவிட்டார். அவர் தினமும் பெரும் பாலும் காலையில் நடக்கிறார். அது பழக்கம் ஆகிப்போய் நடையே அவருக்குச் சுவாசமும் ஆகிவிட்டது. 20 வருடங்களுக்கு முன் கொழும்பில் சத்திர சிகிச்சை பெற்று ஊருக்கு வந்த அவர் முதல் நாள் நடக்க ஆரம்பித்தார். நடைப்பயிற்சி அவருக்கு பல அனுபவங்களைக் கொடுத்தது பல புதிய நண்பர்களைக் கொடுத்து பல புதிய தரிசனங்களையும் கொடுத்தது.

ஒருநாள் அவர் நிமிர்ந்து நேராக கையை விசுக்கி விசுக்கி ஒரு இராணுவ வீரன் போல நடந்து சென்ற போது வீதியிலே விளையாடிக் கொண்டிருந்த பதின்ம வயது சிறுவர்கள் இவரை வினோதமாகப் பார்த்தனர். நடைப்பயிற்சி அவர்களுக்கும் அந்த கிராமத்திற்கு புதிது போலும். இத்தகைய நடையை அவர்கள் தம் பாடசாலை அணிவகுப்பில் கண்டிருப்பர்.

இவர் நடையின் தன்மையை பார்த்த ஒரு சிறுவன், அவன் ஒரு குறும்புச் சிறுவனாக இருக்க வேண்டும். லெப்ட் ரைட் என்று அவர் நடைக்கேற்ற ஒரு ஓசை வழங்கினான். அவனது நண்பர்களும் அவன் வழியைப் பின் தொடர்ந்தனர். அதே ஓசை எழுப்பினர். லெப் ரைட் இவரைப் பார்த்துச் சொல்லாமல் எங்கோ பார்த்துச் சொன்னார்கள்.

அவர் அந்தப் பையனையும் அந்தச் சிறுவர்களையும் பார்த்து சிரித்தபடி நடையைத் தொடர்ந்தார்.



சி. மௌனகுரு

பாடசாலையில் இப்படி எத்தனை பேரை அவர் கண்டிருப்பார். மறுநாளும் அதே நேரம் அவர் நடந்து போகும்போது முதல் நாள் நடந்த லெப் ரைடு சத்தம் மீண்டும் ஒலித்தது. கூட்டாக ஒரே குரலில் ஒலித்தார்கள். இவர் அவர்களைத் திரும்பிப் பார்த்தார் எங்கோ பார்த்தபடி அவர்கள் ஒலித்தார்கள்.

இவர் கவனிப்பது அவர்களுக்கு ஒரு உற்சாகம் கொடுத்தது. கவனிப்பு இருந்தால் வேகம்கூடும்தானே? சிறுவர்களின் குழப்படியை நன்கு அறிந்தவர் அவர். சிரித்துக்கொண்டே நடையைத் தொடர்ந்தார்.

மூன்று நாள் அவர் நடந்து செல்லும் போது அவர்களைப் பார்க்காமல் அவர்களின் ஒலியை மாத்திரம் அவதானித்தார்.

இப்போது கூட்டொலி எழவில்லை ஓரிரு ஒலிகளே எழுந்தன. சிலர் ஒலிக்காமல் நின்று வேடிக்கை பார்ப்பதை அவர் உணர்ந்தார். நான்காம் நாள் ஒலியே எழவில்லை. பின்னர் அதுவும் கேட்காமல் ஆகிவிட்டது. அவர் நடை உடை அவர்களுக்குப் பழக்கம் ஆகிவிட்டது.

மிக அதிக காலம் வெளியில் இருந்து விட்டு இப்போது அவர் தன் ஊருக்கு வந்து இருக்கிறார். வீட்டின் அந்தச் சுழலைக் காலையில் அனுபவித்த அவர் மீண்டும் கிராமத்தில் நடைப் பயணத்தைத் தொடங்கினார்.

காலையில் எழுந்ததும் கருப்பு கட்டைக் காற் சட்டையும் கறுப்பு டி-ஷர்ட்டும் அணிந்து கொண்டார். கால்களில் நடப்பதற்கு என்றே வாங்கிய அந்த நடைச் சப்பாத்தைப் போட்டுக் கண்டார்.

அதிகாலை வேளை. சூரியன் இன்னும் உதய மாகவில்லை. றோட்டிலே இன்னும் ஜன நட மாட்டம் தொடங்கவில்லை. வீதி வெறிச்சோடி கிடந்தது. ஆனந்தமாக அந்த வீதியிலே அவர் நடக்கத் தொடங்கினார்.

வழமைபோல கைகளை விசுக்கியபடி அவர் வீட்டின் முன்னால் ஓர் ஒழுங்கை அங்கிருந்து சிறிது தூரம் நடந்தால் பிரதான வீதி வந்துவிடும். தன் வீட்டிலிருந்து நடையைத் தொடங்கிய அவர் ஒழுங்கையால் நடந்து பிரதான வீதிக்கு வந்த போது அந்தச் சந்தியிலே ஐந்து நாய்கள் நின்று கொண்டிருந்தன.

அவரையும் அவர் உடலையும் அவதானிப்பது போன்று அவை நிற்பது போல அவருக்குத் தெரிந்தது.



அந்த நாய்களுக்கு அவரும் அவர் நடையும் உடையும் புதிது. புதியன கண்டால் நாய்கள் குரைக்கும் என்பதும், அதுவும் தமது எல்லைக் குள் அந்தப் புதுமை வந்தால் அவற்றின் குரைப்பு வேகம் கொள்ளும் என்பதும் அவருக்குத் தெரியும். அவரும் ஆயத்தமானார். நாய்களுக்கு அருகே அவர் சென்றதும் ஒரு நாய் அவரைப் பார்த்து குரைக்கத் தொடங்கியது. அவர் திரும்பி தற்காப்புக்காக ஒரு நிலை எடுத்தார்.

அருகிலே பெரியதோர் கைக்கடக்கமான கல்லும் கிடந்தது. அதை எடுப்போமா என்று ஒரு தடவை யோசித்தார். அதை எடுத்துக் குரைக்கும் நாய் மீது வீசி இருந்தால் அத்தனை நாய்களும் ஒன்றில் ஓடி இருக்கும் அல்லது மூர்க்கமாகத் தாக்கி இருக்கும்.

தன்னை அவர் தற்காத்துக் கொண்டாரே ஒழிய நாய்களைத் தாக்கும் முயற்சியில் அவர் ஈடுபடவில்லை.

ஒரு நாய் மாத்திரம் முன்னால் வேகமாகக் குரைத்தபடி வந்தது. சில நாய்கள் அதனைத் தொடர்ந்தன. சிறிது தூரம் பின்னால் அவை குலைத்துக் கொண்டே வந்தன. அவற்றினுடைய எல்லையை அவர் தாண்டியதும் குலைப்பதை அவை நிறுத்திக் கொண்டன. திரும்பி வரும் போது நாய்களை எதிர்பார்த்தார் ஆனால் அங்கே அவை இருக்கவில்லை. அவை தமக்கான சாப்பாடு களை தேடி வேறு எங்கோ சென்று இருக்கக் கூடும் என எண்ணிக்கொண்டார்.



# ஞாயிறு போற்றுதும் ...

இன்றைய காலையில்
வானிலே மீண்டும் சூரியன்
கைகளைக் கூப்பி
'ஞாயிறு போற்றுதும்'
ஞாயிறு போற்றுதும்
இளங்கோவின் ஆத்மாவாய்
இதயம் உரத்துப்பாடும்

காலையிலே தினமும்
குளித்த கையொடு
கிணற்றடியில் அம்மா நிகழ்த்திய
சூரிய வழிபாடும்

தைப்பொங்கல் படையல் வேளை
'சிவசூரியாய நம'
'சிவசூரியாய நம '
இது அப்பு பாடும் பாடல் என்று
அம்மா பாட, நாங்கள் சேர்ந்து பாடிய
ஆராதனையும்
இன்று நெஞ்சிலே
விஸ்வரூபதரிசனமாகும்

இயற்கையோடு இசைந்த
பண்பாட்டு வாழ்வின் மேன்மை
'டிட்வா' அனர்த்த இருண்மை தந்த
ஞானத்தால் உணரப்படும்

ஞாயிறு போற்றுதும்...
ஞாயிறு போற்றுதும்...

**– என். சண்முகலிங்கன்**

மறுநாள் அவர் நடைப்பயிற்சிக்கு புறப்படும் போது பாதுகாப்பாக ஒரு கல்லை எடுத்துக் காற்சடைப் பக்கட்டில் போட்டுக் கொண்டார்.

அவரது முன் ஒழுங்கை தாண்டி பிரதான சந்திக்கு இறங்கிய போது மீண்டும் அதே நாய்கள் அவரைச் சந்தித்தன.

பக்கட்டுக்குள் கையை விட்டு கல்லை எடுப்போமா என அவர் ஒரு கணம் யோசித்தார். அவர் கல்லை வெளியே எடுக்கவில்லை. ஆனால் முன்னால் வரும் அந்த மூர்க்க நாய் கடித்து விட்டால் என்ற அவதானத்துடனும் பாதுகாப்புடனும் நடந்து சென்றார்.

மூன்றாம் நாளும் நடை பயிற்சிக்கு அவர் புறப்பட்டபோது தற்பாதுகாப்பு கருவிகள் தடி எதுவும் கொண்டு செல்லவில்லை. எனினும் சமாளிக்கும் தயார் நிலையில் சென்றார். முந்தி அவரை துரத்தி துரத்தி வந்த அந்த ஒற்றை நாய் மீண்டும் குரைக்க ஆரம்பித்தது.

அவர் பின்னால் குரைத்துக் கொண்டே வந்தது. இப்போது அதன் பின்னால் இரண்டு நாய்களே குரைத்துகொண்டு வந்தன. இப்போது இவருக்கு இந்த நாய் விளையாட்டு பொழுது போக்கு ஆகிவிட்டது.

மறுநாள் இம்முறை என்ன நடக்கும் என்று எண்ணிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார்

அதே நடை, அதே இடம், அதே நாய்கள். ஆனால் இப்போது அந்த குறிப்பிட்ட ஒரு நாய் மாத்திரமே குரைத்துக்கொண்டு வந்தது.

அதனைத் தொடர்ந்து வந்து குரைத்த ஏனைய நாய்கள் எதுவும் அதனைத் இல்லை தொடரவும் இல்லை. ஒதுங்கிக் கொண்டன போல என எண்ணிக்கொண்டார்.

அடுத்த நாள் புறப்பட்டு அவர் நடந்து சென்றார். தன்னை துரத்தி வந்த அந்த நாய் எல்லா நாய்களுடன் ஓரத்திலே படுத்துக் கொண்டிருந்தது. ஒரு கணம் இவரை நோக்கி ஒரு பார்வை பார்த்துவிட்டு அது அப்படியே படுத்துக் கொண்டது.

இப்போது அவர் தினமும் நடந்து செல்கிறார். நாய்களும் அதே இடத்தில் நிற்கின்றன. அவரது நடையும் உடையும் அவரது முகமும் அந்நாய்களுக்குப் பழகிப்போய் விட்டன.

இப்போது குரைப்புச் சத்தம் கேட்பதே யில்லை.

அவர் நடை தொடர்கிறது.

○○○

# “நல்ல ... நல்ல... நல்ல...” எல்லாம் நல்லன அல்ல




சித்திரவேலாயுதன்
திருகோணமலை


எங்கள் தமிழ் மொழியிலே சில சொற்கள் வெளிப்படையான கருத்தைத் தராமல் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு வெவ்வேறு பொருள் களிலும் சில சந்தர்ப்பங்களில் எதிர்மறைக் கருத்துக்களையும் தந்து நிற்கின்றன. அவற்றுள் முதலாவதாக “நல்ல...” என்ற சொல்லின் பயன்பாட்டைப் பார்ப்போம்.

**நல்ல** என்ற சொல்லின் பொருள் பெரும்பாலும் ***சிறந்த***, ***தகுதியான***, **நன்மையான**, என்ற கருத்துப்படும் அடைமொழியாகவே பயன் படுத்தப்படும். உதாரணத்துக்கு:-

1. “சிறந்த” புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
2. மூன்று “சிறந்த” சிறுகதைகள் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.
3. “தகுதியான” விண்ணப்பதாரி பதவிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.
4. நாட்டுக்குச் சேவை செய்யக்கூடிய “தகுதியான” வேட்பாளர் களைப் பாராளுமன்றத்துக்குக்கு தெரிவு செய்து அனுப் பினால்தான் நாடு முன்னேறும்.
5. நாட்டு மக்களுக்கு “நன்மையான” வேலைத் திட்டங் களை அரசு அறிமுகப்படுத்தும்போது எதிர்க்கட்சியினரும் அவற்றுக்கு ஆதரவு வழங்கவேண்டும்.
6. ஒரு வீட்டில் “நன்மையான” காரியம் நடைபெறும் பொழுது எல்லோரும் குளித்துப் புத்தாடை அணிந்து குத்துவிளக்கேற்றி மங்களகரமாகக் காட்சியளிப்பார்கள்.

மேலே காட்டப்பட்ட வசனங்களில் பயன்படுத்தப்பட்ட “சிறந்த”, “தகுதியான” மற்றும் “நன்மையான” என்ற சொற்கள் வந்த இடங்களில் எல்லாம் பொதுவாக **நல்ல** என்ற சொல்லைப் பிரதியீடு செய்தாலும் வாக்கியங்களின் பொருள் மாறப்போவதில்லை.

ஆனால், ஒரு விவசாயி, **நல்ல** மழை பெய்து கதிர்விட்ட நெற்பயிர்கள் எல்லாம் நீரில் மூழ்கிவிட்டன என்று கூறினால் அது அவரைப் பொறுத்த அளவில் **நல்ல** மழை அல்ல. மாறாக, நெற்பயிரை அழித்து நட்டம் விளைவித்த கெட்ட மழையாகும்.

“பிள்ளைக்கு **நல்ல** காய்ச்சல் அடிக்குது வைத்தியரிடம் கூட்டிப் போகவேணும்” என்று தாய்தகப்பன் கவலைப்பட்டுக் கூறினால் அது **நல்ல** காய்ச்சலா?

வீதியில் ஒருவன் மது போதையில் தள்ளாடித் தள்ளாடி ஏதோ உளறிக் கொண்டு போவதைக் கண்டு, “இவனுக்கு **நல்ல** வெறி போல இருக்கு” என்று நாம் சொல்லும்போது இவனுக்கு ஏற்பட்டிருக்கும் வெறி உண்மையில் நல்ல வெறிதானா?

மேற்கூறிய மூன்று சந்தர்ப்பங்களிலும் **நல்ல** என்பது **கூடுதலான** என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரு நண்பர்கள் எங்கேயோ போவதற்குத் திட்டமிட்டு, ஒருவன் மற்றவனிடம், “சரியாக பத்து மணிக்கு ஆயத்தமாக நில்லு. நான் மோட்டர் சயிக்கிளில் உன்னைக் கூட்டிப் போக வருவேன்” என்று கூறிவிட்டுப் போன நண்பன் பதினொரு மணிக்குத்தான் வந்து சேர்ந்தான். கால் கடுக்கக் காத்திருந்த நண்பன் பொறுமை இழந்து, **நல்லொரு** ஆளப்பா நீ” என்றான். காக்க வைத்த நண்பன் உண்மையிலேயே “நல்லொரு” ஆள்தானா?

படமெடுத்தாடித் தீண்டித் தனது பல் விஷத்தினால் மனிதரைக் கொல்லும் நாக பாம்பை **நல்ல** பாம்பு என்றுதானே சொல்கிறோம். 'திருவருட் செல்வர்' என்ற சினிமாப் படத்தில் பாம்பு தீண்டி இறந்த சிறுவனை திருநாவுக்கரசராக நடித்த சிவாஜி கணேசன் சிறுவனின் உயிரை மீட்பதற்காக ரீ.எம்.சௌந்தரராஜன் குரல் கொடுக்க இறைவனிடம் மன்றாடிப் பாடுவதாக அமைக்கப்பட்ட பாடல், "நாதர் முடி மேலிருக்கும் நாக பாம்பே உனக்கு **நல்ல** பெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே" என்று பாடுவதாக ஒரு காட்சி.

மேற்கூறிய இரு சந்தர்ப்பங்களிலும் வந்த **நல்ல** என்பது அதன் எதிர்மறைக்கருத்தையே குறித்து நிற்பதைக் காணலாம்.

❊ ❊ ❊

அடுத்து **சும்மா** என்ற சொல் பின்வருமாறு பல பொருள்களில் வருவதைப் பார்ப்போம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | அமைதியாக | 6. | சோம்பேறியாக |
| 2. | வீணாக | 7. | வெறுங்கையோடு |
| 3 | இலவசமாக | 8. | பொய் |
| 4. | உபயோகம் அற்று | 9. | அடிக்கடி |
| 5. | எப்போதும் | 10. | காலியாக |

இன்னும் பல பல உண்டு. ஆனால் இவை பத்தும் **சும்மா** உதாரணங்களுக்காக மட்டுமே.

கட்டுரை நீண்டுவிடும் என்னும் தயக்கத்தில் மேலே தந்த 10 பொருள்களுக்கும் ஒவ்வொரு உதாரணத்தை மட்டும் தந்துள்ளேன்.

| | |
|---|---|
| 1. நான் கதைக்கிறன். நீ குறுக்க பேசாம **சும்மா** இரு | :- அமைதியாக |
| 2. காசு இருக்கென்று **சும்மா** செலவு செய்கிறான் | :- வீணா |
| 3. இந்தக் கலண்டர் **சும்மா** தந்தார்கள் | :- இலவசமாக |
| 4. இதெல்லாம் **சும்மா** தானே கிடக்கு குப்பையிலே போடலாமே | :- உபயோகமற்று |
| 5. வயசு போன நேரத்திலே **சும்மா** தொணதொணக்காதே | :- எப்போதும் |
| 6. வீட்டிலே **சும்மா** இருக்காமல் வெளியில போய் வேலையைச் செய் | :- சோம்பேறியாக |
| 7. விருந்தினர் வீட்டுக்குப் போகும்போது **சும்மா** போகக்கூடாது | :- வெறுங்கையோ |
| 8. இன்றைக்கு ஏப்ரல் முதலாம் திகதி. இவன் **சும்மா** சொல்லுகிறான் | :- பொய் |
| 9. **சும்மா சும்மா** தொலைபேசி அழைப்பு எடுத்து என்னைக் குழப்பாதே | :- அடிக்கடி |
| 10. இந்தப் பெட்டி **சும்மா** கிடக்கு.இதுக்குள்ள எல்லாத்தையும் போடுங்க | :- காலியாக |

இவற்றுக்கு மேலதிகமாக முருகப் பெருமான் அருணகிரிநாதரை ஆட்கொள்ள வேண்டி வழங்கிய உபதேசமான "**சும்மா இரு** சொல் அற" என்ற சொற்றொடரில் வரும் **சும்மா** என்பதன் பொருளை நாம் ஆன்மிக ரீதியாக அணுகினால், தேவையற்ற வார்த்தைகள் மற்றும் சிந்தனை களை விடுத்து பேச்சடங்குவது மட்டுமன்றி மனம் சலியாது அலை பாயாமல் அடங்கி ஒடுங்கி ஆன்ம சக்தி ஓங்கி தெய்வீக சுகம் காண்பதற்காக **சும்மா** இருக்கும் நிலையே அந்த **சும்மா இரு** என்பதன் பொருளாகும். இதன் உண்மையை உணர்ந்த ஒரு வெள்ளைக்காரச் சுவாமி (ஜேர் மனியர்) தனது கையிலே **சும்மா இரு** என்று பச்சை குத்தியுள்ளார். அவர் யாழ்ப்பாணத்தி லிருந்து கரையோரப் பாதை வழியாக கதிர்காம பாதயாத்திரைக்காக திருகோணமலை வந்து சென்ற போதெல்லாம் நான் அவர் கையிலே பச்சை குத்தியுள்ளதை நேரில் பார்த்துள்ளேன்.

இறுதியாக - தமிழ் மொழி என்பது ஒரு பெருங்கடல். ஒரு சாதாரண சொல்லைக்கூட பண்டு தொட்டு இன்று வரை பல சந்தர்ப்பங்களில் பல பொருள் பட, அதுவும் நம்மை அறியாமலேயே பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் கூட பயன்படுத்தி வருகிறோம். இவ்வாறு ஒரு சொல் லுக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இத்தனை பல்வேறு பொருள் தரக்கூடிய மொழி தமிழ் மொழி மட்டுமே. பாரதியார் **சும்மாவா** சொன்னார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்", என்று. அவர் **சும்மா** பாரதியார் அல்ல. மகாகவி பாரதியார் என்பதையும் நினைவிற் கொள்வோம்.

❍❍❍




# யாருக்கோ பூத்த பூக்கள்

நிறைமாத கற்பிணி போல் நின்று நின்று நகர்ந்து கொண்டிருக்கும் பேருந்தினுள் கலங்கிய கண்களுடன் யன்னலோர இருக்கையில் வானில் இருந்து விழும் மழைத்துளிகளை பார்த்தபடி அமர்ந்திருந்தாள் புனிதா. அவளின் பெயரைப் போன்றே அவளது மனமும் புனிதமானதுதான். அடிக்கடி தன் கையில் உள்ள பையில் இருக்கும் மலர்கொத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எத்தனை அழகான மலர்கள் இவை நிச்சயம் அம்மாவிற்குப் பிடிக்கும் என நினைத்துக் கொண்டாள். சிறிது தூரம் சென்ற பின் ஒரு விசில் சத்தம் பேருந்து ஒரு சந்தியில் நின்றது. அப்போது பேருந்தினுள் இருந்த சிலர் இறங்கிக் கொண்டனர் சிலர் ஏறிக்கொண்டனர். ஏறியவர்களில் ஒரு சிறுமி நெரிசலில் தன் பிஞ்சுக் கைகளை எதில் பிடித்துக் கொள்வது என தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். பார்க்கப் பாவமாக இருந்ததால் புனிதா அவளை அழைத்து தன் மடியில் இருத்திக் கொண்டாள். பேருந்து மீண்டும் தன் பயணத்தைத் தொடங்கியது.



**மகேந்திரன் கோவர்த்தனா**
மகிழவட்டவான்
ஆயித்தியமலை

சிறிது தூரம் சென்றதும் புனிதாவின் கண்களில் இருந்து அவளை அறியாமலேயே கண்ணீர் துளிகள் சிந்தத் தொடங்கின. அந்தச் சிறுமியின் நெருக்கம் அவளுக்கும், அவளுடைய அம்மாவிற்கும் இருந்த பாசப்பிணைப்பை நினைவூட்டியது. சிறுமையின் தலை முடியை தன்னுடைய ஒரு கையால் தடவியபடி தன் ஆடையின் ஒரு பகுதியால் கண்களை துடைத்துக் கொண்டு தலையை பேருந்தின் யன்னலில் சற்று சாய்த்து கண்களை மூடிக்கொண்டாள். அவளது மனம் முழுவதும் கண்ணம்மாவை பற்றிய நினைவுகள் அலைமோதின.

கண்ணம்மா ஓர் குடிசை வீட்டுக்குச் சொந்தக்காரி அடிப்படை வசதிகளற்ற மகிழ வட்டவான் என்ற ஊரில் பிறந்தவள். அங்கு குடிநீர் வசதியோ, மின்சார வசதியோ கிடையாது. ஆனால் இயற்கை வளம் பொருந்திய அழகிய கிராமம். வழி நெடுகிலும் பனை மரங்கள், கிறவல்

போட்ட பாதைகள் சிறு சிறு ஆறுகள் பச்சைப் பசேல் என விரிந்திருக்கும் வயல் நிலங்கள் எல்லாம் அமையப்பெற்ற ஓர் அழகிய கிராமம்.

கண்ணம்மாவிற்கு 2 பிள்ளைகள் ஒரு ஆண் பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் கண்ணம்மாவின் கணவன் குடியால் தன் ஆயுளை இழந்து விட்டார். அவர் இருக்கும் போதும் கண்ணம்மாவிற்கு நிம்மதி இல்லை இறந்த பின்பும் நிம்மதி இல்லை. காட்டுக்குச் சென்று விறகு வெட்டி அதை ஊருக்குள் விற்பது, மிளகாய் தூள் இடித்து விற்பதுமாக வாழ்க்கை நடத்தி வந்தால். அவளுக்கு இருப்பது எல்லாம் ஒரே ஒரு கவலைதான் தன் மகள் புனிதாவை பற்றியது. புனிதா தரம் 11-ல் கல்வி கற்று வந்தால் புனிதாவின் அண்ணன் கணேஷ் தனது படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டான். புனிதாவையாவது நன்றாக படிக்க வைத்து அவளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் கண்ணம்மாவின் மிகப்பெரிய ஆசை. கண்ணம்மா அடிக்கடி புனிதாவிடம் அவன் ஆம்பளபுள்ள அவன் எப்படியும் பிழைச்சிடுவான். நீ படிச்சா மட்டும் தான் உனக்கு நல்ல வாழ்க்கை அமையும் படிப்புதான் நம்மள காப்பாத்தும் என்று அடிக்கடி கூறுவாள்.

கண்ணம்மா உடம்பில் வருத்தம் இருந்தாலும் அதை பிள்ளைகளிடம் காட்டிக்கொள்ள மாட்டாள். வருத்தத்திலும் ஓய்வென்பதை அறியாத கண்ணம்மாவின் மனதில் இருப்பது ஒன்றுதான் மகன் படிப்பை விட்டுத்தான் இருந்தாலும் அவன் கடைசி காலத்திலே என்னைப் பார்த்துக் கொள்வான். புனிதாவை படிக்க வச்சு ஒரு இடத்துல கட்டி கொடுத்தால் அவள் அவளுடைய குடும்பத்தை பார்த்துக்கொள்வாள் என்பதுதான்.

ஆனால் நாம் நினைப்பது போன்று வாழ்வில் எதுவும் நடப்பதில்லையே காலம் என்ன ஒரு இடத்தில் தரித்து நிற்கப் போகிறதா? காலம் அதன் பாட்டில் சுழண்டோடியது புனிதா உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து விட்டால். அதை கேட்டதும் கண்ணம்மாவிற்கு தலைகால் புரியவில்லை. ஊரில் ஒருத்தர் மீதம் இல்லாமல் என்ட மகள் பாஸ் பண்ணித்தாள் பாஸ் பண்ணி தாள் என்று சொல்லி அவளுக்கு வாயே வலித்து விட்டது. புனிதாவின் அண்ணன் பாதியிலேயே படிப்பை விட்டதால் நகரில் இருக்கும் ஒரு கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அதில் வரும் வருமானத்தை கஷ்டப் பட்டு வளர்த்த தாயின் கையில் கொடுத்த தில்லை. கண்ணம்மாவிற்கு அவனைக் குறித்த கவலை மனதில் இருந்தாலும் அதனை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டாள். உன்ட மகன் உன்னை பார்க்க மாட்டான் என்று சொல்பவர்களிடம் அவன் என்னை பார்ப்பான் என்று குரலுயர்த்தி பேசி விட்டு மனதுக்குள் வருத்தப் பட்டு வரும் கண்ணம்மாவின் மனதுக்கு மருந்து போடும் அளவிற்கு அம்மா நான் உன்னை பார்த்துக் கொள்வேன் என்று கூறும் புனிதாவின் சொற்கள் அருமருந்தாகவே இருக்கும்.

அன்றொரு நாள் வெள்ளிக்கிழமை புனிதா கோவிலுக்கு சென்றிருந்தாள் கண்ணம்மாவின் வாசலில் ஒரு சத்தம்.

கண்ணம்மா உன்ட பிள்ளைக்கு ஒரு கடிதம் வந்திருக்கின்றது என்று வெளியே வந்து பார்த்தாள் வாசலில் ஒரு தபாற்காரர் நின்று கொண்டிருந்தார் ஓடிப்போய் கடிதத்தை வாங்கி எடுத்தாள். கடிதத்தில் என்ன இருக்கின்றது என்று பார்க்கும் ஆசை மேலிட அதை அவரிடமே கொடுத்து இதைப் படித்துக் காட்டுங்கள் என்று கொடுத்தாள். அவர் கடிதத்தை வாசித்து விட்டு உன்ட பிள்ளைக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் கிடைச்சிருக்குதாம் என்று கடிதம் வந்திருக்குது என்று சொன்னார். அவ்வளவுதான் கண்ணம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாய் பெருக்கெடுத்து ஓடியது. அவளின் கால்கள் நிலத்தில் நிற்க வில்லை. படிக்காத ஒரு ஏழையின் பிள்ளைக்காக பல்கலைக்கழகம் கிடைத்திருக்கிறது. அய்யோ கடவுளே உனக்கு நான் எப்படி நன்றி சொல்வேன் என்று சாமி படத்துக்கு முன்னால் கடிதத்தை வைத்து வணங்கி விட்டு புனிதாவுக்காக காத்திருந்தாள்.

புனிதா வளவுக்குள் நுழையும்போதே “புனிதா புனிதா உனக்கு ஒரு கடிதம் வந்து இருக்குது. உனக்கு கிழக்கு பல்கலைக்கழகம் கிடைச்சிருக்குதாம் என் தங்கமே..” என்று சொல்லிக் கொண்டு தன் பிள்ளையை வாரி அனைத்துக் கொண்டாள். சந்தோசத்தில் கண்ணம்மாவிற்கு தலைகால் புரியவில்லை. இப்படியே புனிதா பல்கலைக்கழகத்திற்கு செல்லும் நாளும் நெருங்கியது. கண்ணம்மாவிற்கு ஒரே குழப்பமாக இருந்தது மகளை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கு கையில் காசு இல்லை. அக்கம் பக்கத்தில் கடன் கேட்க முடியாது ஏற்கனவே



**"புனிதா... புனிதா.. உனக்கு ஒரு கடிதம் வந்து இருக்குது. உனக்கு கிழக்கு பல்கலைக்கழகம் கிடைச்சிருக்குதாம் என் தங்கமே.." என்று சொல்லிக் கொண்டு தன் பிள்ளையை வாரி அணைத்துக் கொண்டாள்.**

வாங்கின கடனே இன்னும் முடியாம இருக்கு இப்போ என்ன பண்ணுவன் நான் என யோசிச்சு கொண்டே இருந்தாள்.

அம்மா என்ன யோசிக்கிறிங்க... என கேட்டுக் கொண்டே புனிதா வீட்டிக்குள் வந்தாள் ஒன்றுமில்லை புனிதா உங்கட அப்பா போன பிறகு நிறைய கஷ்டப்பட்டு எப்படியோ உங்களை வளர்த்துட்டன் காலம் போனாலும் நமக்கு கவலை போகாது போல. பாரு உன்னையே பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப என்னிடம் காசு இல்ல. இப்ப நான் யாருகிட்ட போய் காசு கேட்பேன் என்று புலம்பினாள். கவலைப்படாதீங்க அம்மா எவ்வளவோ கஷ்டங்களை தாண்டி வந்துட்டோம். இன்னும் கொஞ்சம் காலம்தானே கடவுள் வழிகாட்டுவார் என்று இருவரும் கதைத்துக் கொண்டிருந்த வேளையில் கண்ணம்மா கண்ணம்மா என பதட்டத்துடன் ஒரு குரல் வெளியில் இருந்து வந்தது. வெளிய வந்த கண்ணம்மா என்ன நடந்த அக்கா ஏன் இப்பிடி கூப்பிடுறிங்க என கேட்டாள் உன் மகன் செய்த வேலையை பார்த்தாயா சுமதியின் மகள இழுத்துட்டு போய்ட்டானாம். அவ்வளவுதான் கண்ணம்மாவின் உலகம் நின்று விட்டது. ஓரளவு கவலை இருக்கும் இடத்தில் தான் கண்ணீருக்கு வேலை இருக்கும். கவலை எல்லை இல்லாத அளவு உயந்து விட்டால் கண்ணீர் ஸ்தம்பித்து விடும். கண்ணம்மாவின் நிலையும் அதுதான் அவன் பார்ப்பான் என்ற நம்பிக்கைக்கு நெருப்பு வைத்து விட்டு சென்றவனைப் பற்றி யோசிப்பதா இல்லை இருப்பதும் ஒரு பொம்பள பிள்ள அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என யோசிப்பதா.? கண்ணம்மாவின் வீடு சாவு விழுந்த வீடு போல் ஆகி விட்டது. இருவரும் வெளியில் வரவே இல்லை. அன்று அவளின் வீட்டில் விறகுகளுக்கு விடுமுறை நாள்......

மகிழவட்டவான் சந்தி வந்துட்டு இறங்குற ஆட்கள் இறங்குங்க.... என்ற சத்தம் கண்ணம்மாவை பற்றிய நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது புனிதா பட்டென்று விழித்துக் கொண்டாள். ஓ.... இறங்குமிடம் வந்துவிட்டதா என்று தன் மடியில் இருந்து தாயின் அரவணைப்பை உணரச் செய்த அந்தச் சிறுமியின் கன்னத்தில் ஒரு முத்தத்தைப் பதித்து கையில் இருந்த பூச்செண்டுகளை சிறுமியின் கைகளில் கொடுத்து விட்டு பேருந்தில் இருந்து இறங்கி தன் தாய் உறங்கிக் கொண்டிருக்கும் மயானம் நோக்கி நடக்க தொடங்கினாள்.

தன் மகனின் செயலைக் கண்டு கலங்கிய கண்ணம்மா மறுநாள் தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கவே இல்லை. அனுபவித்தது போதும் வா என்று இறைவன் அழைத்துக் கொண்டார் போலும். புனிதா எது வந்த போதிலும் படிப்பைக் கை விடவில்லை. உதவும் கரங்கள் என்ற அமைப்பின் உதவியுடன் பல்கலைக் கழகத்தில் படிப்பை தொடர்கின்றாள். இன்று தன் தாயின் நினைவு தினம் என்பதால் பல்கலைக் கழகத்தில் இருந்து சொந்த ஊருக்கு தன் தாயை பார்ப்பதற்காக வந்திருக்கின்றாள். இழப்பு என்பது மனித வாழ்வில் இயல்புதான். இன்று இழந்து இருந்தாலும் என்ற ஒரு நாள் நிச்சயம் தொலைத்த சந்தோஷம் என்னை வந்தடையும் என நினைத்துக் கொண்டு தொடர்ந்தால் தான் தாயைப் பார்க்கும் பயணத்தை.....

❍❍❍

நில்லாதென நினைக்கவில்லை
அருளென அறிந்த மழை
பொல்லாத பேரழிவை
பகிர்ந்து செல்லுமென
கணப்பொழுதும்
எண்ணவில்லை

பழுதாகி விழும்
பற்களைப் போல
பலமிழந்த மலைகள்
வந்து சிதறிய
வாந்தி போல்
கோலமிழந்த கோபுரங்கள்
கட்டுமானங்கள்
தவிடு பொடியான தரைகள்
வெள்ளத்தின் வடுக்களாக

மாடிமனைகளைத் தேடி
இல்லங்களின் உச்சம் தொட்ட
வெள்ளத்தின் எச்சத்தை
கண்ணெனக் காத்தவை
மண்ணாகிப் போனதை
இதுவரை கண்டதில்லை

கவனக் குறைவான
தவறான நடத்தைகள்
அழைத்து வந்த அழிவுகளா

இயற்கையை நோவித்து
எழுந்த சீற்றங்களின்
காரணங்கள் புரியாத
ஆற்றமுடியா ரணங்களா
படிப்பினைக்கான
பக்கங்களின்
பன்முகப் பரிமாணங்களை
பார்க்கத் தவறினோமா

எழுதப்பட்டவை என்ற
இறைநம்பிக்கையோடும்
நம் கைகளால்
நழுவ விடப்பட்டவைகள்
பிரசவித்த நெருக்கடிகளை
நோக்கியும் நோக்காமலும்
மீண்டெழத் துடிக்கும்
நேரமிது

அபிவிருத்திக் கிரீடத்தை
அணிந்த தேசங்கள்
அறிவால் அனைத்தையும்
அடைய நினைத்ததும்
தொழில்நுட்பத்தை
தொழும் நிலையும்
பாதுகாப்பு பலமென

ஊதிப் பெருப்பித்த
பலூனின் தோற்றமும்
வல்லரசு வறிய நாடென
வேறுபாடின்றி
அனர்த்தங்களின் முன்னால்
இறைவனை மறந்த
மனிதனின் சுயத்தை
உணரும் தருணம்

பிரிவினை பேதம் மறந்து
சேதமுற்ற தேசத்தை
சீர்ப்படுத்த
அழைப்பின்றி
அணிவகுக்கும் தொண்டர்கள்

இருப்பவர்களையும்
இழந்தவர்களையும்
இணைத்து வைத்து
உளத்தைப் பலப்படுத்தும்
இறை அத்தாட்சியும்
மக்கள் சேவைக்கு
உந்தும் மனசாட்சியும்
சிந்தையைக் கிளறும்
படிப்பினைகள் தொடரும்



# அத்தாட்சியும் மனசாட்சியும்



ஏ.எம்.மிஹ்ழார்
சாஹிரா கல்லூரி, கொழும்பு.

# படிக்கச் சென்ற நகரத்தில் பாடம் சொல்லித்தராதது

வானம் கத்தக் கத்தத் துளிர்த்தது
மழைத்துளிகள் அல்ல,
எலும்புக்குள் ஊடுருவக் கூடிய
இரும்பு ஊசிகள்.
டித்வா ஆட்டத்திற்கு
மகாவலி அன்று மகாபலி கேட்டதாலோ?

உணவு இல்லை – பசியை
பல்லால் கடித்தோம்.
வாயில் நீர் விழுங்கினோம்.
கனவுகளில் மட்டும் சாதம் வாசனை.

குடிநீர் இல்லை – மழைநீர்
தாகம் தீர்த்தது.
கழிப்பறைக்கு வெள்ளநீர் சேகரித்தோம்.

உடுக்க இல்லை – உடல்
நடுங்கிக் கொண்டே காலம் நகர்த்தினோம்.

உறங்குவதற்கு இடம் இல்லை
ஒருவர் மடியில் ஒருவர் விழுந்து விழுந்து
இருட்டோடு பேசினோம்.
இருள் நம்மை விழுங்கியது.

கவரேஜ் இல்லை.
நாம் உயிரா இறந்தவர்களா – என
நாமே கேள்வியாயினோம்.
தொலைபேசி கற்களாகின.
சார்ஜ் கனவானது.

ஏ.ரி.எம் ஆல் பயனில்லை
கையில் காசு இல்லை.
காசிருந்தும் கடையில்லை.

ஒரு தீக்குச்சி கூட
அரக்கனின் மூச்சில் சாம்பலானது.
கால்கள் கிழிந்தன சிக்னல் தேடி.
காது கொடுத்து கேக்காத செய்திக்காக
இன்று வானொலி அன்ரனாவா மாறினோம்.

நீர் நிறைந்த பாதைகளில்,
நம்பிக்கையை சுமந்து நடந்தோம்.
கண்முன்னே சுவர்கள் சரிந்தன,
வீடுகள் மண்டியிட்டன,
வீதியோரங்கள் பிணங்களின் அமைதியால்
மூடப்பட்டன.

மூன்று நாட்கள் சிறு பிஸ்கட்டை
எழு பேரும் பகிர்ந்தோம்,
அந்த ஒரு பிஸ்கட்
ஒரு உயிரின் முழு நம்பிக்கை ஆனது.

ஆனால்...
எங்களை பற்றி இல்லை
எங்கள் பயம். “அம்மா என்ன ஆகிறாள்?”
“அக்கா உயிரோடா?” “செல்லப்பிராணி
எங்கே?” என்ற பயமே மார்பை கிழித்தது.
இயற்கை அரக்கன் ஆனது.
ஆனால் மனிதம்...
கடவுள்களாயினர்.

ஒரு நண்பன் தன் கையை நீட்டினான்,
ஒரு கப் சுடுநீர்
ஒரு உயிரைத் திருப்பிக் கொடுத்தது.
உயிர் பயம் எங்களை ஒன்றாக்கியது.
அந்த மூன்று நாட்களில்
எங்களில் பேதம் இல்லை.
நாம் மாணவர்கள் இல்லை,
நாம் பசி,
நாம் பயம்,
நாம் ஜீவன்.

புயல் கத்தும் போது
மனிதம் நெகிழ்ந்தது.

இன்று நின்று நினைக்கிறேன்
மனிதம்
மட்டுமே கடவுள்.



தேன்தமிழினி
மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்




அந்த நிலாக்காலம் இரவிலும் உலகம் மெல்லிய நிலா வெளிச்சத்தில் விழித்தே இருந்தது. ஹற்றமரேன் ஹொட்டலின் உணவகம் பரபரப்பாகக் காணப்பட்டது. வாடிக்கையாளர்கள் வருவதும் போவதுமாக உணவகம் நிரம்பி வழிந்தது. மெல்லிய பியானோ இசையை இசைத்தபடி பியானோ வல்லுநர் தன்னுடைய கரங்களையும் தலையையும் அசைத்தபடி உணவருந்திக் கொண்டிருந்தோருக்கு மெல்லிய இனிமையான இசையை வழங்கிக் கொண்டி ருந்தார். ஒரு ஓரமாக கடலலையின் இரம்மியத்தை இரசித்தபடி சித்ராவும் வினித்தும் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். கடலலையின் சங்கீதமும், பியானோ இசையில் இரம்மியமும் கலந்த ஒரு இசையின் இரசனையுடன் உணவு இருவருக்கும் உள் நுழைந்து கொண்டிருந்தது.

இருவரும் திருமணம் செய்து 5 வருடங்கள் கடந்து விட்டன. வினித் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தில் பணி புரிகின்றான். இத்தனை வருடங் களும் தனக்குக் கிடைக்கின்ற வெளியூர்ப் பயணங்களை ஏதோ காரணங்களைச் சொல்லித் தவிர்த்து வந்தான். சித்ராவும் வினித்தும் 5 வருடங்கள் காதலித்து இரு மனங்களும் ஒத்துப் போகவே இருவருக்கும் இடையில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்பதை முற்று முழுதாக நம்பிய பின்னரே திருமணம் செய்து கொண்டார்கள்.

சித்ரா ஒரு பாடசாலையில் ஆசிரியையாகப் பணி புரிகின்றாள். மாணவர்களிடம் அவள் காட்டுகின்ற தாயன்பு ஆசிரியை என்பதையும் மீறி அவளிடம் தீராக் காதலை மாணவர்களுக்கு ஏற்படுத்தி இருந்தது. பிரேமம் மலையாளப் படத்தின் நாயகி மலர் ரீச்சர் போல சித்ராவும் இளமையும் அழகும் மிக்கவள். வாழ்க்கையில் 30 வருடங்களையே கடத்தியிருந்தவளுக்கு மாணவர்கள் நண்பர்கள் போல இருந்தார்கள். அவளை வலம் வருவதும், அவளுடைய கட்டுப்பாடுகளை மீறாமல் நடந்து கொள்வதுமாக இருந்தார்கள்.

காலையில் இருவரும் வீட்டை விட்டுக் கிளம்பினால், மதியம் தாண்டி முதலில் வீட்டுக்குள் நுழைவது சித்ராவே. வீட்டுக்கு வந்தவுடன் வேலை முடிந்து களைப்புடன் வரும் வினித்துக்கு ஏதாவது சிற்றுண்டி தயாரித்து விடுவாள். இரவுணவை ஏதாவது உணவகத்தில் முடிப்பார்கள். இல்லையென்றால், இருவரும் இணைந்தே வீட்டில் சமைத்து உண்பார்கள்.

காதலுக்கும், அன்புக்கும், விட்டுக் கொடுப் புக்கும், தியாகத்துக்கும் எந்தவித குறையும் இருவருக்கிடையிலும் இருந்ததில்லை. ஆனால், இருவருக்கும் மனத்துக்குள் பெரிய பாறாங் கல்லாக அழுத்தும் கவலை தமக்கென்று ஒரு வாரிசு இல்லையே என்னும் குறையே.

படித்த அறிவு மட்டுமல்லாமல் பகுத்தறிவும் கொண்ட இருவரும் தமக்குரிய பரிசோதனை எல்லாம் பார்த்து விட்டார்கள். இருவருக்கும் எந்தவிதக் குறையும் இல்லையென்று வைத்தி யர்கள் சொல்லிவிட்டார்கள். குழந்தை வீட்டில் விளையாட வேண்டும், இருவரையும் பிரதி பலித்துக் காட்டும் வாரிசுகள் தமக்கும் கிடைக்க வேண்டும் என்ற மனம் நிறைந்த ஆசை இருவருக்கும் உள்ளத்துக்குள் எல்லை மீறி இருந்தது.

தம்மாலான முயற்சிகள் எல்லாம் எடுத்து விட்டார்கள். ஆனால் ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. பெற்றால் தான் பிள்ளையா? என்று நினைத்த போது இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம் என்று காலங்கள் தான் கடந்தது. வினித்தின் முகத்தில் ஏமாற்றத்தை நீக்க வேண்டும் என்று சித்ரா வேண்டாத கடவுள் இல்லை. சித்ராவின் மனத்தில் மகிழ்ச்சியைக் கொண்டு வர வேண்டும் என்று நாளும் பொழுதும் கவலையிலே காலத்தைக் கடத்தினான் வினித்.

குழந்தை என்பது தம்பதியர் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஓர் அடையாளம். இவர்கள் ஒரு பிள்ளையை வளர்க்க வேண்டும் என்று இயற்கை தீர்மானிக்க வேண்டும். இந்தப் பெற்றோரே இந்தப் பிள்ளையை வளர்க்க வேண்டும் என்று பிரபஞ்சம் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அந்த பாக்கியம் இந்தத் தம்பதியினருக்கு இல்லையென்று வேறு பிள்ளையைத் தத்தெடுத்து வளர்க்க வேண்டும். ஆனால், வினித்துக்கு இன்னும் தனக்கென்று ஒரு பிள்ளை சித்ரா மூலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

அன்று வெள்ளக்கிழமை இரவுணவு உணவகத்தில் உண்பதற்காகவே ஹற்றமரேன் ஹொட்டலுக்கு இருவரும் வந்திருந்தார்கள். உணவுண்டு முடித்து உரையாடிக் கொண்டிருக்கும் சமயம் சர்வர் ஏதாவது குடிப்பதற்கு வேண்டுமா? என்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தான். அந்த இடத்தில் வேறு வாடிக்கையாளர்களை இருத்திவிடும் துடிப்பு அவனுக்கு இருந்தது. இவர்கள் இருக்கும் நேரம் முழுவதும் ஏதாவது வாங்கிக் குடித்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால், ஏதாவது பின் உணவாக இனிப்பு உணவு வாங்கிச் சாப்பிட வேண்டும். இருக்கும் இடத்திற்கு வருமானத்தை எதிர்பார்த்தே உணவகத்தார் எலி போல முகர்ந்து கொண்டிருப்பார்கள்.

கடற்காற்றில் எல்லை கடக்கும் சித்ராவின் கூந்தலை வருடியபடி இருந்த வினித் திடீரென்று சித்ராவின் கைகளைப் பற்றினான்.

ஏதோ ஒரு செய்தியைத் தன்னிடம் கூறுவதற்கு எத்தனிக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்ட சித்ரா, “என்ன மெற்றர் வினித்? என்றாள்.

“சித்ரா! நீ இந்த முறை இதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். திங்கட்கிழமை வேலை விடயமாக நான் ஜெர்மனி போக வேண்டியிருக்கிறது. இந்தத் தடவை என்னால், மறுப்புச் சொல்ல முடியாமல் போனது. 6 மாதங்களே நான் அங்கு பணிபுரிய வேண்டிய அவசியம் இருக்கிறது. 6 மாதம் முடிந்ததும் ஓடி வந்து விடுவேன். இந்தப் பயணம் எனக்கு நல்லது என்றுதான் நினைக்கிறேன் சித்ரா. அங்குபோய் ஒரு தடவை என்னை பரிசோதனைக்கு உட்படுத்தலாம் என்று நினைக்கிறேன். சிலவேளை ஏதாவது நல்ல மருத்துவ வசதி கிடைத்தால் எங்களுடைய குறை தீர்ந்துவிடும். இறுதியாக முயற்சி செய்து பார்ப்போமே’’ என்றான்.

சித்ராவுக்கும் இது சரியென்றே பட்டது. ஒருநாளும் வினித்தைப் பிரிந்தறியாத சித்ராவுக்கு நிச்சயமாக அவனைப் பிரிந்திருக்கும் காலங்கள் பெரிய கவலையாகவே இருக்கும். வாழ்க்கையில் எல்லாமே பழக்கத்துக்குக் கொண்டு வர வேண்டியது அவசியமே என்பதை அவள் விளங்காதவள் இல்லையே. ஆனாலும்,

“ஜெர்மனியில் மருத்துவக் காப்புறுதி செலுத்தாதவர்களுக்கு மருத்துவச் செலவு அதிகம் என்று சொல்லுகின்றார்களே. ஒரு புத்தகத்தில் வாசித்திருக்கிறேனே!’’ என்றாள்.

“சித்ரா! பணமெல்லாம் இரண்டாம்பட்சம், முதல் பிள்ளை. அதுதான் முக்கியம். நீ இங்கு ஆறு மாதங்கள் வாழப் போதிய பணவசதி உன்னிடம் இருக்கிறது. கடைசி முயற்சியாகச் செய்து பார்ப்போம்’’ என்றான்.

பாடசாலைப் பணிகளும் மாணவர்களின் உதவியுமே மணிக்கூட்டுக் கம்பிகளை அவளையறியாமலே துரிதமாக ஓடச் செய்யும். அதனால், தனிமை பெரிய தாக்கமாக இருக்காது என்பது அவளுக்குத் தெரிந்ததே.

“பயணம் நல்ல நோக்கமாக இருந்தாலும் பிரிவு என்பது பெரிய தாக்கம்தானே வினித். உங்களைத் தவிர எங்களுடைய வாரிசு எனக்கு முக்கியமா? என்ற கேள்வி என்னுடைய மனத்துக்குள் புகுந்து வெகு நாளாகி விட்டது வினித். ஜெர்மனிப் பயணம் சிலவேளை எனக்கும் உங்களுக்கும் இடையில் பெரிய இடைவெளியைத் தந்துவிட்டால் என்ன செய்வது?’’ என்று இயல்பாகவே எதற்கும்

சந்தேகித்துத் தெளியும் சித்ரா வினித்திடம் வினவினாள்.

“சித்ரா தொடங்கிட்டியா? இந்த சந்தேகப் புத்தி உன்னை விட்டுப் போகாதே. உன்னைத் தவிர இந்த உலகத்திலே எந்த ரம்பையும் என்னைக் கவர முடியாது. நான் தானே ஆறு மாதத்தில் திரும்பி வந்துவிடுவேன். அங்கு நிற்கப் போகின்றேன் என்றால் கூட நிற்க முடியுமா? நான் வேலையில் கவனம் செலுத்துவேனா? உன்னுடைய சந்தேகத்துக்கு எல்லாம் கவனம் செலுத்துவேனா? இந்த ஒருதடவை இறுதியாக என்னுடைய விருப்பத் துக்கு விடேன்'' என்றான்.

எதனையும் எடுத்தெறிந்து பேசாது. ஆறுதலாக எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் இயல்பான குணம் கொண்டவன் வினித்.

நல்லது நடந்தால் இருவருக்கும் மகிழ்ச்சியே என்று நினைத்த சித்ரா சம்மதித்தாள். வீட்டுக்குப் போகும் வரை ஆயிரம் கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுத்தாள். எங்கே? எப்படி? என்று கேள்விகளின் வடிவங்கள் மாறி மாறி வந்தன. வினித்தும் சிரித்தபடி கோபப்படாமல் விடைகளை அடுக்கினான். ஜெர்மனி டுசெல்டோ∴பில் வினித்துடைய நண்பன் இருக்கின்றான். அவன் வினித் ஜெர்மனியில் தங்குவதற்கும் மருத்து வரைச் சந்திப்பதற்கும் உரிய வசதிகளைச் செய்து வைப்பதாகக் கூறியுள்ளான்.

திங்கட்கிழமை காலை கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு ஒரு வாடகைச் சிற்றூந்தில் வினித் சென்றான். அவனை வழியனுப்பிவிட்டு சித்ராவும் பாடசாலைக்குச் சென்று விட்டாள். அன்றைய தினம் 6 மணிக்கு விமானம் புறப்படும் நேரம் என்ற காரணத்தினால், 3 மணிக்கு விமான நிலையத்தில் நிற்க வேண்டும். அதனால், 2 மணிக்கு வினித் புறப்பட்டாக வேண்டும் என்று அதிகாலை எழுந்து அவனை அனுப்பிவிட்டு உறங்கிய சித்ராவுக்கு ஒழுங்கான நித்திரை இல்லை. அதனால், பாடசாலையில் இருந்து வந்தவுடன் தூங்கிப் போனாள்.

இரண்டு படுக்கை அறைகள் கொண்ட அவர்களுடைய வீட்டில் விருந்தினருக்காக ஒரு அறையை வைத்திருந்தார்கள். அதில் திருகோணமலையில் இருந்து சித்ராவின் பெற்றோரும், யாழ்ப்பாணத்திலிருந்து வினித்தின் பெற்றோரும், உறவினர்களும் வந்தால் தங்குவார்கள். நீர்கொழும்பு விஜயரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலேயே சித்ரா ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றாள். மாணவர் கள் அடிக்கடி இவளைப் பார்க்க வருவதும், அவளுக்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்வதும், அவள் பக்குவத்தில் உருவாகிய உணவுகளைச் சுவைப்பதும் என்று மாணவப் பட்டாளமே அவளுக்காக இருக்கும். 11, 12 ஆம் வகுப்புக்கள் படிக்கின்ற மாணவர்கள் என்பதால் சித்ராவை விட 10,12 வயதுகள் வித்தியாசமே அவர்களுக்கும் இவளுக்கும் இடையில் இருந்ததன.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவளை கைத் தொலைபேசி அலறல் தட்டி எழுப்பியது. மறுமுனையில் அவளுடைய அக்காவே பேசினாள்.

“சித்ரா வினித் போயிற்றாரா? எத்தனை மணிக்கு ஜெர்மனியில் லேண்ட் ஆகுது?

“அக்கா. நான் நித்திரை. அவர் துபாயில் ரான்சிற் என்றபடியால் பின்னேரம்தான் போய்ச் சேர்வார்''

சித்ராவின் அக்கா, அவர்கள் குடும்பத்தில் முதல் பிள்ளையாகப் பிறந்தவள். சித்ரா பிறந்த போது அவளைப் பாசத்தோடு வளர்த்த பொறுப்பு அவளிடமே இருந்தது. தன்னுடைய பிள்ளையைப் போல கண்ணும் கருத்துமாக வளர்த்த அவள், சித்ராவின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பாள்.

“சித்ரா வினித் வரும்வரை நீ தனியா வீட்டில் நிற்காதே. செந்திலனை அனுப்புகிறன் அவன் வினித் வரும்வரை உன்னோட நிற்கட்டும். இன்டைக்குப் பின்னேரம் வருவான். நான் அவனிட்ட சொல்லிப் போட்டேன். அவனக் கவனமாப் பார்'' என்றாள் சித்ராவின் அக்கா.

“சரி அக்கா. இப்ப என்னைப் படுக்க விடு'' என்று கூறியபடி தலையணையை முகத்திலே மூடியபடி மீண்டும் படுத்துவிட்டாள்.

சுகமாக வினித் ஜெர்மனியைச் சென்றடைந்து விட்டான். அவனுடைய நண்பன் ராஜன் விமான நிலையத்துக்கு வந்து அவனை அழைத்துச் சென்றான். கைகால்கள் இரத்த ஓட்டமில்லாது மஞ்சள் நிறமாகி விறைத்துப் போனது. மாரி காலத்துக்கு அணியும் காலணியை அணியாத காரணத்தால், வாத்துப் போல நடந்து வந்து சிற்றுந்துக்குள் ஏறினான். கால்கள் தரையில் படுவதையே அவனால் உணர முடியவில்லை.

# கானல் நீராகிப் போன கண்ணீர்

– வெலிகம ரிம்ஸா முஹம்மத்

உலர்ந்து போன
கண்ணீர்த் துளிகளில்
மௌனத் துயரங்கள்
மறைந்திருக்கும்!

மனது கனத்திடும்
வடுக்களில்
நிலவே சாட்சியாகும்!

பழைய டயரியின்
பக்கங்களாக
மறக்கவியலா நினைவுகள்
மௌனமாகப் புரட்டப்படும்!

அந்த ஒருவருக்காக
திறந்திருக்கும்
இதயக் கதவுகள்
நிசப்தமாய் வருந்தி ஏங்கும்!

ஒவ்வொரு நினைவினுள்ளும்
ஏதோ ஒரு துடிப்பு
அமைதியாக
அடங்கிப் போகும்!

கானல் நீராகிப் போன
கண்ணீர்த் தடங்களில்
ஏதோ ஒரு அமைதி
சூறாவளியாய் சுழன்றடிக்கும்!!!



# அ(ன)ர்த்தம்

– என். நஜ்முல் ஹுசைன்

வெள்ளம் சேறாக்கிச்
சென்றது –
மனிதம்
கழுவிக் கொண்டிருக்கிறது
❍

அணைக்கட்டு திறந்தது
எல்லோரும்
அணைக்கட்டும்
என்று !
❍

நாளை போவோம்
என்றிருந்தவர்களை
இன்றே
புதைத்துக் கொண்டது மண்–
சரிந்து!
❍

மண் சரிந்தது
மனிதனை
நிமிர்த்த!
❍

தண்ணீர் வெள்ளத்துக்கும்
கண்ணீர்
வெள்ளத்துக்கும்
போட்டி !
❍

வெள்ளத்தை
வெல்லமாக்குகிறது
உதவும் கரம் !

விறைத்துப் போய் இருந்தது. ஏறிய பின்தான் மூச்சு விட்டான்.

"என்ன மச்சான் சரியான வெக்கையா இருக்கா?

"ஓம் சூரியன் 40 டிகிரியில எறிக்குது. எனக்கு வாயில வருது. எப்பிடிடா இந்த நாட்டில எல்லாம் வாழுறீங்க. மனிசனக் கொல்லுற குளிரா இருக்கு. அதுக்கு நம்ம நாடுதான் இருக்கு. சும்மா காத்தோட்டமா ஒரு சாறனக் கட்டினா ஹாயாக இருக்கலாம்''

கலகலவென்று சிரித்த ராஜனிடம்

"சித்ராக்கு வந்து இறங்கின விடயத்தைச் சொல்ல வேண்டும். ஒருக்கா உன்ர ரெலிபோனில சொல்லிட்டு வெளிக்கிடுவமே. உன்ர நம்பரத்தான் அவளுக்குக் கொடுத்திட்டு வந்தனான்'' என்றான்.

ராஜனுடைய தொலைபேசியைப் பெற்று சித்ராக்கு அழைப்பு விடுத்தான். வினித் தொலபேசி அழைப்பு சித்ராவை நித்திரையால் எழுப்பியது. விமானத்தின் வேகமும் காலத்தின் வேகமும் ஒன்றாகத்தான் இருக்கின்றன. வந்திறங்கிய விடயத்தைச் சொல்லிவிட்டு தான் சிம் கார்ட் போட்ட பின்னர் நம்பர் தருவ தாகவும், ஏதாவது அவசியம் என்றால், ராஜன் தொலைபேசிக்கு அழைப்பு விடுக்கும் படியும் கூறிவிட்டு ராஜனுடைய வீடு நோக்கிச் சென்றான்.

வீதியோரமெங்கும் வெண்பஞ்சுகள் குவிந்து கிடந்தன. ஊசியிலைக் காடுகளின் அழகுக்கு அழகு செய்ய வெண்பூக்களை வானம் பொழிந்து கொண்டிருந்தது. பட்ட மரங்களே வீதியெங்கும் பரவலாகக் காணப்பட்டன.

"மச்சான். என்னடா இது இங்கிலீஸ் படத்தில பார்க்கிறது போல பேய் வீடுகள் போல இந்த வீடுகளைச் சுற்றிப் பட்ட மரங்கள். இந்த நாடுகளுக்கு இதுதான் செழிப்பா'' என்று கேட்டான்.

"அழகே, அழகே இதுவும் அழகே. விடிஞ்ச பிறகு பாரு. எப்பிடி இருக்கும் என்று'' என்று சொல்லியபடி பயணம் தொடர்ந்தான்.

படுக்கையில் கிடந்தபடி ஆறு மாதங்கள் என்றால், அரை வருடம். பூமி எத்தனை முறை சுழலவேண்டும். கணக்குப் போட்டாள். ஏன் மனிதன் இவ்வாறு வேலை பார்க்க வேண்டும். உடுக்கவும், உண்ணவும், படுக்கவும் வசதி இருந்தால் போதும்தானே. யாருமில்லாத ஒரு கிராமத்தில் ஒரு சின்ன வீடு எடுத்து உற்றார், உறவினர்கள் காணாத இடத்தில் நானும் வினித்தும் வாழ்ந்தால் போதும் அல்லவா. "கல்யாணம் கட்டி ஐந்து வருஷங்களாச்சு. வயிற்றில் ஒரு புழு, பூச்சி இல்லையா?'' என்று எங்களுடைய வாழ்க்கையில் மூக்கு நுழைக்க உறவுக்காரர்கள் இருக்க மாட்டார்கள். சுதந்திரமாகக் காற்றில் பறக்கும் சருகுகள் போல மனம் போன போக்கில் போகலாம் அல்லவா! எதிர்காலக் கனவுகளும் வேண்டாம். பிள்ளைகளுக்கு என்று மாய்ந்து மாய்ந்து உழைக்கவும் வேண்டாம். இரண்டு பேரும் எதற்கு இந்த ஓட்டம் ஓட வேண்டும்'' என்று நினைத்தவளாய். உடனே ராஜனுக்கு அழைப்பு விடுத்தாள்.

"சித்ராதான் பேசு'' என்று தொலைபேசியை ராஜன் கொடுத்தான்.

"இன்னும் நாங்கள் போய்ச் சேரவில்லை. என்ன விஷயம்?'' என்றான்.

"எதுக்கு வினித். 6 மாதங்கள்? கெதியா வாங்கள். எங்களுக்கு ஒன்றும் வேண்டாம்'' என்றாள்.

வினித் சிரிப்பை அடக்கமுடியாது சத்தமாகச் சிரித்தான். "இதெல்லாம் விளையாட்டா சித்ரா. நாளைக்கு வேலைக்குப் போனாயென்டால் சரியாகப் போய்விடும். சும்மா ஒன்றும் யோசிக்க வேண்டாம். பயமென்றால், மாமியக் கூப்பிட்டு வைத்துக் கொள்ளேன். நான் நம்பர் அனுப்பின பிறகு கோல் பண்ணு. ராஜனக் கரைச்சல் கொடுக்காதே. சரியா'' என்றான்

"ஒன்றும் வேண்டாம். நான் வைக்கிறன்'' என்று கோபத்துடன் தொலைபேசியை நிறுத்தவும் வாசல் அழைப்புமணி அடிக்கவும் சரியாக இருந்தது.

எழுந்து போய்ப் பார்த்தான். அக்கா மகன் செந்திலன்தான் பயணப் பொதியோடு நின்றான்.

அவனைப் பாரத்தவுடன் திகைத்துப் போனாள். நீண்ட காலம் தொலைபேசியில் மட்டுமே பேசியவனை இன்று தான் பார்க்கின்றாள். நல்ல வாட்ட சாட்டமாக ஜிம் செய்து முறுக் கேற்றிய உடலுடன் சாருஹாசனைப் போலக் கட்டுமஸ்தாகக் காட்சியளித்தான். முறுகேறிய அவனுடலைப் பார்த்தால் வயதுப் பெண்கள் வாய் பிளந்து நிற்பார்கள். அப்படியே சித்ராவும் வாயைப் பிளந்தபடி அவனைப் பார்த்துவிட்டு "இப்பத்தான் சித்தியப் பார்க்க மனம் வந்ததா?

அக்கா சொல்லாட்டி இன்டைக்கும் வந்திருக்க மாட்டாய். நீ பெரிய மகாராசன் என்ன? சொல்லிய படி, தன்னுடைய மகன் எவ்வளவு அழகாக இருக்கின்றான் என்று மனத்துக்குள் நினைத்தாள்.

அவனை உள்ளே அழைத்து அறைக்குள்ளே உடுப்புப்பையை வைத்து விட்டு வரும்படிச் சொன்னாள்.

செந்திலன் அம்மா செல்லம் என்று எல் லோராலும் அழைக்கப்படுபவன். தகவல் தொலைநுட்பக் கம்பனி ஒன்றில் வேலைக்காகப் படித்துக் கொண்டிருந்தான்.

முதல்நாள் அவித்த புட்டும் கறியும் இருந்த படியால் சமைக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு மாசிச் சம்பல் போட்டால், நன்றாக இருக்கும் என்று நினைத்தவளாய். செந்திலனுக்கு தேநீர் போட்டுக் கொடுத்தாள்.

"செந்திலன் நாளைக்குப் பள்ளிக்கூடம் போக வேண்டுமா? இங்கே இருந்து போக உனக்கு கஷ்டம் இல்லையாடா? என்று கேட்டாள்.

"இல்ல சித்தி. ஆறு மாதம் தானே. அந்த வீட்ட விட்டிற்று வந்தேன். வாடகை கட்டத் தேவையில்ல. பிறகு பார்த்து வேற வீடு எடுப்பம். அம்மாதான் சொன்னா சித்திக்கு சித்தப்பா வரும்வரை ஒத்தாசையாக இருக்கும்படி'' என்றான்.

அவனுடைய தலையைக் கோதியபடி "என்னடா பத்தையாட்டம் மயிர வளர்த்து வச்சிருக் கிறாய்? இத வெட்டக்கிட்ட மாட்டியா? நாளைக்குக் காசு தாறன் முதல்ல இந்த பத்தைய வெட்டிப் போட்டு வா? அதுசரி காலையில எத்தனை மணிக்கு உனக்கு பஸ்சுக்குப் போக வேணும்?''

"ஆறு மணிக்கு கொழும்பு பஸ் எடுக்க வேணும் சித்தி. நீங்க எழும்பத் தேவையில்ல. நான் காலைச் சாப்பாடு ஏதாவது எடுத்திட்டுப் போவன். மத்தியானம் அங்க கெட்டினில சாப்பிடுவன். பிறகு 5 மணிக்கெல்லாம் வந்திடுவன்'' என்றான்.

"நான் 5 மணிக்கு எழும்பிடுவன். பார்ப்பம். போய்க் குளிச்சிட்டு வா'' என்றாள்.

இருவரும் உணவருந்தினார்கள். பலதும் பத்தும் பேசியபடி உறங்கப் போனார்கள். உடைமாற்றி அவள் உறங்கியபின் செந்திலன் கதவைத் தட்டினான்.

"சித்தி பால் காய்ச்சினேன். உங்களுக்கும் எடுத்து வந்திருக்கிறேன். குடித்துவிட்டுப் படுங்கள்''

எழுந்து போய்ப் பால்க் கிண்ணத்தை வாங்கி விட்டு "பரவாயில்லையே அக்கா உன்ன நல்லாத்தான் வளர்த்திருக்கிறா. நீ மட்டும் குடிக்காமல் சித்திக்கும் கொண்டு வந்து தருகின்றாய். இதெல்லாம் நீ செய்ய வேணுமா? உனக்கு இரவில் பால் குடிக்கும் பழக்கம் இருந்தால், நாளையில் இருந்து நானே உனக்குக் காய்ச்சித் தாரன்'' என்றாள்.

"சித்தி உங்களையும்தான் அம்மா நல்லா வளர்த்திருக்கிறா. நான் தான் உங்களுக்குப் பால் காய்ச்சி எடுத்து வருவேன். அது என்னுடைய வேலை'' என்றான்.

"சரிடா போ... போ.. போய்ப்படு'' என்று பாலைக் குடித்துவிட்டுப் படுத்துவிட்டாள்.

அடுத்த நாள் பாடசாலைக்குச் சென்ற சித்ரா எதையோ பறி கொடுத்தது போல இருப்பதைக் கண்ட அவளுடைய சிநேகிதி ஆசிரியை

"என்ன இன்றைக்கு ஆயிரக் கணக்கில பறி கொடுத்தவளைப் போல மூஞ்சியை வைத்திருக்கிறாய்? உனக்கு என்ன நடந்தது? என்று கேட்டாள்.

"அது வினித் ஜெர்மனி போனதில் இருந்து உடம்பெல்லாம் சோர்ந்து சோர்ந்து போகுது. நான் நினைக்கிறன். நான் வாழல்லை ரீச்சர். அவன்தான் என்னை வாழ வைச்சிருக்கிறான். ஒரு பிள்ளை இருந்திருந்தால், இந்தப் பிணைப்பு குறைந்திருக்கும் என்று நினைக்கிறன். ரொம்பவே முடியாமல் இருக்கு'' என்றாள்.

"அம்மாக்கு கைவளை கழறப் போகுதோ. பசலை நோய் வந்து விட்டதோ'' என்று கேலியாகப் பேசிவிட்டு,

"வினித் ஜெர்மனி போன விசயம் நீ எனக்குச் சொன்னியா? அதுதான் இரண்டு பேருக்கும் ஒரு பிரச்சினையும் இல்லையென்றுதானே சொன்னார்கள். எதுக்கு அவதிப்படுகிறீர்கள். 10 வருஷத்துக்குப் பிறகும் பிள்ளை பிறந்திருக்கு. பொறுத்துப் பாருங்களேன்''

"அது வேலைக்காகப் போறான். அதோட ரீற்மன்ட் செய்து பார்ப்போம் என்று சொன்னான்'' என்று கூறினாள்.

எது தடுத்தாலும் வாழ்க்கை நகரத்தானே வேண்டும். ஓடுகின்ற கப்பலுக்குள் ஏறி இருந்துவிட்டால், கரை சேரும் வரை பயணம் செய்யத்தான் வேண்டும். அலுத்து விட்டது என்று நினைத்த போது இறங்க முடியுமா? கடல் காற்றுக்கும் கடலலைக்கும் ஈடு கொடுத்தேயாக வேண்டும்.

சித்ரா எந்தவித கடினமும் இல்லாமல் காலத்தைக் கடத்தினாள். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர செந்திலன் இருக்கின்றான். வீட்டு வேலைகள் அனைத்துக்கும் கைகொடுத்து உதவுகின்றான். கை நீட்டி வேலை சொன்னால், செய்வதற்கு மாணவர்கள் இருக்கின்றார்கள். பேச்சுத் துணைக்கு நண்பிகள் இருக்கின்றார்கள். வார இறுதி நாளில் செந்திலன் வீட்டில் நிற்பதனால், நீர்கொழும்புக் கடற்கரைக்கு காலாற நடந்து செல்வார்கள். செந்திலனும் மனம் திறந்து தன்னுடைய காதலியைப் பற்றி சித்ராவிடம் வாயாரப் புகழ்வான். அவன் காத லுக்குச் சித்தியாகக் கண்டிப்பு இல்லாமல் நண்பி போல கேட்டுக் கொண்டிருப்பாள்.

வினித்துக்கு எந்தவித பிரச்சினையும் இல்லையென்று ஜெர்மனி மருத்துவம்

“சித்தி இன்றைக்கு கடற்கரையில நிற்பது நல்லதில்ல. எல்லாரும் எழும்பிப் போறாங்கள். நாங்களும் போறதுதான் நல்லது. மழை வேற தூறுகிறது” என்று கூறிய செந்திலன், சித்ராவை வீட்டுக்கு அழைத்துச் சென்றான். மாணவர்களும் விடை பெற்றனர்.

வீடு வந்தபின் பாலைக் குடித்துவிட்டுப் படுத்து விட்டாள். அதிகாலை அவளால் முடியவில்லை. சத்தியும், வயிற்று வலியும் தாங்க முடியவில்லை. உணவகத்து உணவின் ஒவ்வாமை யாகத்தான இருக்கும் என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். ஆனால், குடலுக்குள் ஒரு பூகம்பமே நடந்தது. விரல் களால் அலுத்தி அலுத்திப் பாரத்தாள். பிரண்டு பிரண்டு படுத்தாள். சுடு தண்ணீர்ப் பையை வயிற்றில் வைத்துப் படுத்துப் பார்தாள். முடியவில்லை.



உறுதியாகச்சொல்லி விட்டது. சித்ராவும் அவன் வரும் நாளைக் காத்துக் கொண்டிருந்தாள்.

அன்று வழமை போல இரவுணவைக் கடற்கரை அருகில் இருந்த ஒரு உணவகத்தில் இருவரும் உண்டு விட்டுக் கடற்கரையில் நடந்து கொண்டிருக்கும் போது அவளுடைய மாணவர்கள் இருவர் அவர்களுடன் இணைந்து கொண்டனர். அலைகள் வழமைக்கு மாறாக ஆக்ரோசமாகக் கரையில் வந்து அடித்துக் கொண்டிருந்தன. கடற்காற்று சித்ராவை விழுத்தி விழுத்தி வேடிக்கை பார்த்தது.

காலை 5 மணி செந்திலன் நிறுவகம் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

“செந்திலன்..” என்று கத்தினாள்.

ஓடி வந்த செந்திலன் சித்தியினுடைய நிலைமையைப் பார்த்துப் பயந்து போய்விட்டான். உடனடியாக வாடகை வாகனத்துக்கு அழைப்பு விடுத்து சித்ராவை மருத்துவமனைக்குக் கொண்டு வந்துவிட்டான்.

அம்மா என்னைச் சித்தியுடன் நிற்கச் சொன்னது நல்லதாகப் போய்விட்டது என்று செந்திலனும், அக்கா எவ்வளவு அக்கறை

யுள்ளவர் என்று சித்ராவும் நினைத்தார்கள். உடனடியாக வழமையாக அவள் போகும் மருத்துவமனைக்கே போனார்கள். செந்திலன் தாய்க்கு அறிவித்து விட்டு வெளியே காத்துக் கொண்டு நின்றான்.

“என்ன கன்றாவியச் சாப்பிட்டேனோ? என்று அவதிப்பட்டுக் கொண்டு சித்ரா நின்றாள். மருத்துவமனைத் தாதிகளெல்லாம் தேவதைகள் போல அவள் கண்களுக்குத் தெரிந்தனர். “நான் சாகப் போகிறேனோ'' என்று மனத்துக்குள் ஒரு சந்தேகம் வந்தது. வினித்துக்கு அறிவிப்போமா? சீச்சீ அவன் பயந்து விடுவான். அவன் வராமல் நான் செத்துவிடுவேனோ'' இப்படிப் பலவாறாக அவளுடைய எண்ண ஓட்டம் தடம்புரண்டது.

அவளுடைய உடலைப் பரிசோதித்த மருத்துவர், உணவு நஞ்சேறியிருக்கின்றது என்பது உறுதியானது. ஆனால், சில சிக்கல்களும் இருப்பதனால், மேலும் பல பரிசோனைகள் நடந்தன. அவளுக்கு நோ தெரியாமல் இருக்க மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. மருத்துவ மனையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

அன்று பிற்பகல் சித்ராவின் உடல்நிலை சீரானது. மருத்துவர் அவளை அழைத்தார். வழமையாக வருகின்ற மருத்துவமனை என்ற காரணத்தால், மருத்துவருக்கு அவளுடைய மருத்துவ வரலாறு நன்றாகவே தெரிந்திருந்தது.

“சித்ரா வினித் வரவில்லையா? என்று கேட்டார். இப்படிக்கேட்டவுடன் சித்ரா நன்றாகவே பயந்து போனாள்.

“ஏன் டொக்டர் ஏதாவது பிரச்சினையா? அவர் ஜெர்மனி போய்ட்டார்'' என்றாள்

“சீச்சீ அப்படி ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொல்லியபடி நான் இரத்தம் எல்லாம் பரிசோதனை செய்து பார்த்துவிட்டேன். நீங்கள் இரவு சாப்பிட்ட சாப்பாட்டிலேதான் ஏதோ பிரச்சினை இருந்திருக்கிறது. அது உடம்புக் குள்ளே நஞ்சாகியிருக்கிறது. நாங்கள் மருந்து தந்துவிட்டோம். நீங்கள் சத்தி எடுத்தபடியால் நல்லதாகப் போய்விட்டது. உங்களுக்கு குளுக்கோஸ் ஏற்றியிருக்கிறோம். பயப்பிட ஒன்றுமில்ல. ஆனால்...'' என்று கூறிப் பக்கத்தில் இருந்த கைகளை அசைத்துக் கொண்டிருக்கும் ஒரு பொம்மையைக் காட்டினார்.

ஆச்சரியத்துடன் மருத்துவரைப் பார்த்த சித்ராவிடம்

“நீங்கள் அம்மாவாகப் போகின்றீர்கள். இரண்டு மாதங்கள் முடிந்துவிட்டன. உங்களு டைய இரத்தப் பரிசோதனையைப் பார்த்த போது எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அதையும் பார்த்துவிடுவோமே என்று பெண் மருத்து வருக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் வரும்போதெல்லாம் என்னிடம் இதுபற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அதனால், இந்த முயற்சியை எடுத்தேன். இரத்தப் பரிசோதனை யும், கரு சுமக்கின்றீர்கள் என்று உறுதியாகச் சொல்லி விட்டது. கொங்குரஜுலேசன்'' என்று கைகளை நீட்டினார்.

மண்டைக்குள் பாறாங்கல்லால் ஓங்கி அடிப்பது போன்று இருந்தது. பதிலுக்குக் கைகளை நீட்டிக் கைகுலுக்கி விட்டு நடைப் பிணமானாள். குழந்தை வயிற்றுக்குள் வளர்கிறது என்று மகிழ்வதா? தன்னுடைய வினித் வரப் போகின்றான். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று பயப்படுவதா? குழந்தை வயிற்றில் தங்கி 2 மாதங்களே வினித் சென்று 6 மாதங்கள். இது எப்படி நடந்தது?

வெளியே வந்த போது செந்திலன்,

“என்ன சித்தி ஓகே யா? ரெக்சியக் கூப்பிடட்டா'' என்றான். அவனை முகங்கொடுத்துப் பார்க்காது. அவனிடம் எதுவுமே பேசாமல் தலையை மட்டும் ஆட்டினாள். வீடு போகும் வரை எதுவுமே செந்திலனுடன் பேசவில்லை.

அறைக்குள்ளே போய்க் கட்டிலில் விழுந்தாள். சத்தி எடுத்துத் தொண்டை புண்ணாகிவிட்டது. வயிற்று வலியால் வயிறு புண்ணாகி விட்டது. இது எப்படி நடந்தது? யார் காரணம்? என்னை யறியாமல் இது எப்படி நடந்திருக்கும்? இந்த வீட்டுக்குள் என்னையறியாமல் யாரும் வருவதில்லையே. இவன்தானே இரவில் எனக்குப் பால் கொண்டு வந்து தருவான். பாலுக்குள் எதையாவது போட்டு மயங்க வைத்து என்னை அனுபவித்திருப்பானோ? இவனைப் பிள்ளை போலத்தானே வைத்திருந்தேன். இப்படிச் செய்து போட்டானே. படுபாவி என்று மனத்துக்குள் இருந்த ஆத்திரம் தீயாகப் பற்றியது.

அந்த நேரம் தாயிடம் கேட்டு சித்ராவுக்குக் கஞ்சி காய்ச்சி எடுத்து வந்தான் செந்திலன். அவனுக்கு அவளை நினைக்கப் பயமாக இருந்தது. தன்னைப் பார்க்கும் போதெல்லாம் சித்ராவின் கண்களில் கோபக்கனல் தெறிப்பதைப் பார்த்தவனுக்கு இதை எப்படிக் கொடுப்பது என்ற பயம் இருந்தது.

பயத்துடன் அதைக் கொண்டு வந்து அவளின் பக்கத்தில் வைத்தான். அதைக் கண்ட சித்ரா அப்படியே கைகளால் அந்தக் கஞ்சிக் கிண்ணத்தை வீசி எறிந்தாள். அறை முழுவதும் கஞ்சி தெறித்துப் பறந்தது.

பயந்து நடுங்கிய படி தண்ணீர்த் துடைப் பத்தை எடுத்து வந்து துடைத்தான்.

"வெளியே போ....." என்று கத்தினாள்.

அப்படியே கட்டிலில் இருந்தவள், சிறிது நேரத்தில் கண்களைத் துடைத்தபடி எழுந்து யன்னல் கம்பிகளினூடாக வெளியே விறைத்துப் பார்த்தபடி நின்றாள். மனத்துக்குள் போராட்டம். வெளியுலகமோ மௌனமாக அமைதியாக இருந்தது. அப்போது பின்புறமாக அவளை இரு கரங்கள் கட்டியணைத்தன. படாரென்று திரும்பித் தன்னுடைய கரங்களால் ஓங்கி அறைந்தாள்.

"ஐயோ.." என்று பின்புறம் நின்ற வினித் கத்தினான்.

வினித்தைக் கண்டவள் சத்தமாக அழுதபடி அவனுடைய நெஞ்சுக்குள் புகுந்தாள்.

"சரி சரி என்ன நடந்தது? நான்தான் வந்து விட்டேனே. சித்ராம்மா கூல் .. கூல். உன்னட்டச் சொல்லாமல் செப்பிரஸ் ஆக வரவேண்டும் என்றதற்கு இந்தத் தண்டனையா? என்று அவளை அணைத்தபடி கட்டிலில் இருக்க வைத்தான்.

அழுது தீர்த்த சித்ரா நடந்தவற்றை வினித்திடம் விளக்கினாள். ஆச்சரியமடைந்த வினித்தும்

"சரி நாளைக்கு டொக்டரிட்டப் போவம். நீ ஒன்றும் யோசிக்காதே. உனக்கு நான் இருக்கிறேன்" என்று சித்ராவைச் சமாதானப் படுத்தி விட்டுக் கொண்டு வந்த பொருட்கள் எல்லாம் அப்படியே போட்ட படிக் கிடக்கப் படுத்துவிட்டான்.

அடுத்தநாள் காலையில் எழுந்து செந்திலன் சித்தப்பாவுடனும் பேசாமல் கல்வி நிறுவகத் துக்குச் சென்று விட்டான். வினித்தும் சித்ராவும் பாணை பட்டர், ஜேம் பூசி உண்டு விட்டு அமைதியாக மருத்துவமனை போனார்கள். வினித் திரும்பி வந்த மகிழ்ச்சியோ, வயிற்றில் பிள்ளை வளருகின்ற மகிழ்ச்சியோ எதுவும் இல்லாமல் இருவரும் மௌனமாக அழைப்பு வரும்வரை மருத்துவமனையிலே இருந்தார்கள்.

ஒரு நிமிடத்தில் மனத்திலே இருக்கின்ற அத்தனை மகிழ்ச்சியையும் சூறாவளி அடித்துத் தூக்கிக் கொண்டு போனது போல இருந்தது. இதுதான் வாழ்க்கை. அடுத்த நிமிடம் என்ன நடக்கப் போகின்றது என்று யாருக்கும் தெரிவதில்லை. திருப்பங்களைத் திருப்பிப் போடுவதுதான் இந்தப் பிரபஞ்ச நியதி.

இப்போது மருத்துவர் முன்னே இருவரும். இருவரையும் கண்டவுடன் மருத்துவர் கைகுலுக்கி கொங்குரஜுலேசன் தான் முதலில் சொன்னார். எதுவுமே சொல்லாத வினித் கையிலிருந்த மருத்துவக் கோப்புக்களை மருத்துவரிடம் நீட்டினான்.

"பிளீஸ் டொக்டர் . நீங்கள் இவற்றை மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்யுங்கள் " என்றான்.

முகத்தில் சந்தேகத்தை வரவழைத்த மருத்து வரும் வெளியே இருவரையும் இருக்கச் சொல்லிவிட்டு அதனை வாங்கிப் பார்த்தார். வேறு யாரிடமோ அதனை அனுப்பினார். சிறிது நேரத்தின் பின் இருவரையும் அழைத்தார்.

"ஐ ஏம் சோ சொரி வினித். இங்கேதான் ஏதோ தப்பு நடந்து விட்டது. இது வேறு யாருடையதோ பிளட் ரிப்போர்ட் விபரம். மாறி சித்ராவினுடைய ரிப்போர்ட்டில் பதிந்து விட்டார்கள். இதற்கு நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என்றார்.

"செய்வதைச் செய்து விட்டு என்ன மன்னிப்பு டொக்டர். உங்களையெல்லாம் நம்பி எப்படி எங்க ளுடைய உடம்பைக் காட்டுவது. டொக்டர்ஸ் கடவுள் போல இருக்க வேண்டும் டொக்டர். இது நோயாளிகளுடைய வாழ்க்கை. ஒரு நிமிடத்தில் சித்ராவின் மனத்தை நோகடித்துப் போட்டீர்கள். அந்த நிமிடம் அவளுடைய மனம் எவ்வளவு வேதனையை அனுபவித்திருக்கும் தெரியுமா? ஆறு மாதங்களின் பின் நேற்றுத்தான் ஜெர்மனியில் இருந்து நான் வந்தேன். நீங்கள் எத்தனை பேருடைய நம்பிக்கையைப் பாழாக்கிப் போட்டீர்கள். நல்ல வேளை சத்திர சிகிச்சை என்று உடம்பைக் கூறு போட்டுவிட்டு மன்னிப்புக் கேட்கவில்லை. மன்னிப்பு என்ற வார்த்தை சொல்லி விட்டால் போதுமா டொக்டர், நடந்தது நடந்ததுதான்" என்று கூறியடி சித்ராவை அணைத்துக் கொண்டு வெளியேறினான் வினித்.

❍❍❍

# கனவுகள் மெய்ப்படுவதில்லை

கனவு மெய்ப்படவேண்டும்
பாரதி சொன்னான்
பாரதி கண்மூடித்திறந்தால்
கனவுகள் கொள்ளை
மண்மூடிப் போவதன்முன்
உண்மைகள்தான் மிஞ்சும்
மற்றவை கனவாய் போகும்

ஏணியில்லை ஏக்கமுண்டு
எட்டாத தூரமுண்டு
தொட்டுவிட ஆசையுண்டு
வானம்கூட தொட்டுவிடும் தூரம்தான்
வாழ்க்கைகூட கனவுகளின் சேரல்தான்
மெய்ப்படாமல் போவததன் இயல்புதான்

பூமிபோடும் புதிர்களெலாம்
புரியாத கனவாகும்
பூரிக்கும் சித்திரங்கள்
பூப்பூக்கும் விண்மீன்கள்
விழிதிறந்தால் மாயமாய்
வெளிச்சத்தில் ஓய்கிறது
கண்திறந்து கனவுகாண்
விண்ணளப்பாய் நிஜமென்றார்
கனவல்லவது கடும் தவம்

அச்சக்கயிறறுத்து
இச்சையுடன் நம்பிக்கைப் படகோட்டி
நடுக்கடலில் வெற்றிக்கனியெனும்
மீன்பிடிக்க ஆசையுண்டு
உறக்கம் கலைந்திட்டால்
அத்தனையும் நிராசைதான்
நினைப்பதெல்லாம் நடப்பதில்லை
நடந்ததெல்லாம் நினைத்ததல்ல
மௌனப் புன்னகையை
மனதால் துணைக்கழைத்து
மீண்டும் உறங்குகிறேன்
மெய்ப்படாக் கனவுகளை
தீண்டும் திகிலோடு.

–செல்லையா சுப்ரமணியம்–

# விடியும்

பூமித்தாய் நடுங்கினால்
கடல் மகள் என்ன செய்வாள்?

சுனாமி அலை
எங்களைத் துரத்தியது.
மேட்டு நிலங்களை நோக்கி
ஓடினோம்..
உயிர்களையும் உடைமைகளையும்
இழந்தோம்..
நம்பிக்கையை மட்டும்
இழக்கவில்லை.
இன்னும் வாழ்கின்றோம்.

கண்ணுக்கு இனிதாய்
காட்சி தந்த மலையகம்
மண்ணுக்குள் மறையாது
எங்கள் பொங்கல் தினம்
உங்களுக்கு தீபாவளியாக
அமையும்..

இரவும் பகலும்
இணைந்ததே
இவ்வுலக வாழ்வு
உங்கள் வாழ்வும் விடியும்

'தம்பிலுவில் ஜெகா'

# மூலிகை – மீன்மருத்துவத்தால் மக்கள்பிணி தீர்த்து வைத்த அல்ஹாஜ் முகைதீன் பிச்சைப் பரிகாரி



அறபிக்கல்லூரி, கல்விக்கல்லூரி, ஆசிரியர் கலாசாலை, தேசியபாடசாலை, பல்கலைக் கழகம் என தன் கல்விவிலாசத்தை விஸ்தரித்துக் கொண்ட **அட்டாளைச்சேனை** இலங்கையில் பிரபல்யமானது. இந்த ஊரின் நிலவரலாறும், கால வரலாறும், புலமையாளர்களின் இஸ்லாமிய இலக்கியச் செழுமையும் பாரம்பரியமானவை.

மருத்துவத்தைத் வாழ்க்கையாக்கிக் கொண்டும், ஏழைகளுக்கு இலவச சிகிச்சை அளித்துக்கொண்டும் சமூகத்தின் இதயத்தை சம்பாதித்துக்கொண்டே பிரபலயமானவர், அட்டாளைச் சேனையைச் சேர்ந்த முதுபெரும் ஆயர்வேத மூலிகை வைத்தியர் ***அல்ஹாஜ் முகைதீன் பிச்சைப் பரிகாரி***.

இலங்கையில் ஆயுர்வேத வைத்தியத் துறைக்கு அரச அங்கீகாரம் கிடைத்தபோது **பாமக்கோப்பியா யூனானி** வைத்திய பீடத்தின் முதலாம் அங்கத்தவரானவர். ஆங்கில மருத்துவம் அபிவிருத்தி பெறாத *1900 - 1970* ஆண்டு காலத்தில் அவர் பல மூத்த அரசியல் வாதிகளுக்கும் சிகிச்சை செய்து பேரும் புகழும், பரிசும் பெற்றவர்.

தான் வாழ்ந்த காலத்தில் தானதர்மம் செய்தவர். தாளாத வயதில் தான் சேர்த்துவைத்த சொத்தையெல்லாம் மூன்று தலைமுறைக்குத் தத்தெழுதி வைத்தவர். எம். பி. பி. எம். இப்றாலெவ்வை, எம். பி. பி. எம். இஸ்மாயில் (ஆசிரியர்) ஆகிய அவரது இரண்டு புதல்வர்களையும் இன்னும் புதல்விகளையும் ஆயுர்வேதம் படிக்க வைத்துப் பட்டம் பெற வைத்தவர்.

பிள்ளைப்பேற்றுத் தாய்மார்களைப் பத்தியம் இருக்கச் செய்து மூலிகைப் பொடியும் மூட்டுவலித் தைலமும் குளிசையும் கசாயமும் இலவசமாய்க் கொடுத்து மூலிகைமருத்துவத்தால் சுகப்பிரசவம் செய்தவர்.

பிச்சைப்பரிகாரி வாகடம் படித்தவர். வாழ்நாள் முழுவதும் ***மீன் மருத்துவ நிபுணர்*** என்றும் பேர்பெற்ற அவர் கடல்மீன்களாலும் மக்களுக்கு மருத்துவம் செய்து உபாதைகள் பலதையும் தீர்த்ததால் அவர் மரணத்தின் பின்னும் மக்கள் மனங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

பிச்சைப்பரிகாரி என்னுடைய பாட்டன்: என் தாயாரின் தாய்க்குத் தந்தை. அவர் தந்த கொடைநிலத்தில்தான் இப்போதும் நாங்கள் குடும்பம் நடத்துகிறோம்.

எனக்குப் பத்து வயதாயிக்கும்போது பிச்சைப் பரிகாரிக்கு எண்பது வயதிருந்திருக்கும். அவர் ஊன்றுகோலுடன் ஊருக்குள் நடக்கும்போது நான் அவரைப் பின்தொடர்வேன். அடிக்கடி எனக்கு அறிவுரை சொல்லும் அவர் என் மீது அபார அன்பு செலுத்தியவர். ஆனால் அவரது அழகிலும் அபார ஆற்றலிலும் அடிக்கடி வியந்துபோனவன் நான்.

பிச்சைப்பரிகாரி கூறிய மூலிகை மருத்துவ குறிப்புகள் இன்றும் பலரின் நினைவில் உள்ளன.

'இஞ்சி நஞ்சுகொல்லி' என்றார். மிளகு - கபத்தை சமநிலைப்படுத்தும்' என்றார்: வெள்ளைப்பூண்டும் வெங்காயமும் நுரையீரல் புற்றுநோயைக் குணப் படுத்தும்' என்றார். அவை இரண்டும் வைரஸ் பக்டீரியா நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டவை. செரிமான நொதிகொண்ட ஏலக்காயும்



**கனடாவிலிருந்து இனியவன் இசாறுதீன் –**

வயிறுவீக்கம் வாயுத்தொல்லை போக்கும் - பழப்புளியும் கூடகுதவழிக் குடல்களில் உள்ள கிருமிகளைக் கொன்றழிக்கும் - வெந்தயம் செரிமானத்தை மேம்படுத்தும் - பெருங்காயம் வயிற்றுவலியையும் மலச்சிக்கலையும் போக்கும்' என்றார்.

'முருங்கைமரம் என்பது முழு உடப்புக்கும் வரம்: பால் - முட்டை ஆகியவற்றை விட முருங்கைக் காயும் முருங்கை இலைக்கறியும் ஊட்டச் சத்துள்ள உணவுகள்'' என்றார்.

முருங்கைமரத்தை தன் முற்றத்தில் நட்டு வளர்த்தார். முள்முருங்கை - முருங்கைப்பட்டை மனித உபாதைக்கு மாமருந்தென்ற அவர் ஒரு மூலிகைத்தோட்டத்தையும் வளர்த்தார். நொச்சி - துளசி - கற்பூரவல்லி - முடக்கத்தான் - கருவேப்பிலை - தேசிக்காய் போன்ற செடி களையும் பயிரிட்டார்.

உண்ணும் மீன்களின் உன்னதம் சொன்ன முகைதீன் பிச்சைப்பரிகாரி 'இறைச்சியை விட மீன் ஆரோக்கியமானது' என்பார். 'கெண்டை – குறவை - கயல் - சள்ளல் - வரால் - விலாங்கு - கெழுத்தி – திலாப்பியா போன்ற நந்நீர்மீன்கள் ஒமேகாஅமிலம் இல்லாதவை' என்றார்.

'கருவுற்றபெண்கள் கண்டிப்பாக மீன் சாப்பிடுவது மிக நல்லது. சாளை – நெத்தலி – சங்கரா – வஞ்சரம் - வவ்வால்மீன் - கோலாமீன் - காரப்பொடிமீன் என்பன ஒமேகா-3 சத்துக் கொண்டவை என்பதால் அவற்றைச் சாப்பிட்டால் அவர்களது கர்ப்பவளர்ச்சிக்கு ஆரோக்கிய மாயிருக்கும்' என்றார்.

அட்டாளைச்சேனை ஊரின் நீள அகலத்திற் கேற்ப கிழக்குக் கடலிற்கும், மேற்கு வயலுக்கும் இடையே அந்த நிலப்பரப்பின் மார்புக்கு மத்தியில் சமாந்தரமாய் ஓடுகின்றது 'கோணாவத்தை' என்கிற ஒரு சிற்றாறு. அந்த ஆற்றின் கரையில் அவருக்கென ஒரு தோணியும் தோணித்துறையும் இருந்ததாய் நான் அறிந்திருக்கிறேன்.

கோணாவத்தை ஆற்றின் மாசற்ற காற்றும் தூசற்ற நன்னீரும் எல்லோரையும் நேசிக்க வைத்தவை. அந்த ஆற்றிலுள்ள கயல் - சள்ளல் - கெழுத்தி - திலாப்பியா – விலாங்கு - வெள்ளிறால் போன்ற மீனினம் சுவை மிகுந்தவை: 'கைமீன்' எனும் கயல்மீனும் சள்ளல்மீனும் சத்துள்ளவை. அயலூர் மக்களும்கூட விரும்பி உண்பவை.

ஆற்றங்கரையிலிருந்து கடற்கரைவரை நூறு ஏக்கர் நிலப்பரப்பிற்குச் சொந்தக்காரரான நிலப்பிரபு முகைதீன் பிச்சைப்பாரிகாரிக்கு அப்போது இலங்கை அரசாங்கம் உரிமத் துப்பாக்கியும் வழங்கியது.

ஆண்டு 1970இல் பிச்சைப் பரிகாரி அவரது கோணாவத்தை ஆற்றிற்குப் பக்கத்து நிலப்பரப்பின் ஒரு சிறுபகுதியை அவரது இரண்டாவது மகன் எம். பி. பி. எம். இஸ்மாயில் (ஆசிரியர்) மூலம் மஸ்ஜித் கட்டுவதற்குக் கொடை வழங்கினார். அப்போது தினகரன் பத்திரிகையில் பிரசுரமான இச்செய்திக்குரிய பாலத்தடி 'ரகுமானியாபாத் மஸ்ஜித்' இப்போது அப்பகுதி மக்களாலேயே பரிபாலிக்கப்படுகின்றது.

சாளைமீனை 'மத்தி' என்றழைக்கிறார்கள். ஓமேகா -3 அதிகமுள்ள மீன்களில் முரல்மீனும் முக்கியமானது. 'உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் முரல்மீனை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்' என்றார்

முரல்மீன் இதயத்துடிப்பைச் சீராக்குகிறது. சர்க்கரை நோயாளியின் ரத்தத்திலிருக்கும் சர்க் கரை அளவையும் குறைக்கின்றது. பற்களையும் எலும்புகளையும் உறுதியாக்குகின்றது'

'எருமைநக்கி' என்கிற கடல்மீனை அனேகர் உண்பதில்லை. அது திருக்கையின் முக அமைப்பைப் போலுள்ள மீன். ஆனால் அது உடல்நோய்க்கு அருமருந்தென்றார். தூக்கத்திலும் விழிப்பிலும் தன்னையறியாமல் மலசலம் கழிக்கும் பழக்கமுள்ளவர்களுக்கு எருமைநக்கி என்கிற மீனை அவர் நெருப்பி லிட்டுச் சுட்டுக் கொடுத்தார். சுட்டமீன் தின்ற நோயாளிகள் பலர் சுகதேகியாகினர். இப்படி அவரது மருத்துவசேவை அனைத்து மக்களுக்கும் கிடைத்த அபாரசேவை என மதிக்கப்பட்டது.

விலாங்குமீன்கள் வழுவழுப்பான தோலுடை யவை: பிற மீன்களை விட வித்தியாசமானவை. உடல் நீளமாயும், தலை பாம்மைப் போலும், வால் மீனைப் போன்றும் உள்ளவை. இப்படியான தோற்றம் கண்டு விலாங்குமீனைப் பலர் உண்ண விரும்புவதில்லை. ஆனால் இதை உண்டவர் அதன் சுவை மறப்பதில்லை. ஆற்றுநீரிலும் சேற்றுநீரிலும் வாழும் இந்த விலாங்குமீன்கள் பற்றி சங்க இலக்கியத்தில் 'மலங்கு' என்று **புறநானூறு** பாடலும் உள்ளது.

பாம்பிற்கொரு தலைகாட்டி ஒருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டும் ஆங்கு
மலங்கு அன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கு அன்ன வெள்ளறிவினார்



கடல்மீன்கள் ஓமேகா அமிலக் கொழுப்பு உள்ளவை. மீன்தலையில் அதிக தாதுச்சத்துக் களும் கொழுப்புக்களும் உள்ளன என்று உபதேசித்த பிச்சைப் பரிகாரி மீனெண்ணெய் - மீன்குளிசை என மீன்அமிலக்கொழுப்பில் மருந்து தாயாரித்துக் கொடுத்தார். கண் - காது - மூக்கு நோயாளர்க்கும் நீரிழிவு நோயாளர்களுக்கும் மீன்தலை சாப்பிடச் சொன்னார்.

மீன்தலை சாப்பிட்டால் கண்பார்வையைப் பிரகாசமாக்கும். மூட்டுவலி – பக்கவாதம் - வீக்கம் - மாரடைப்பு - இதயநோய்கள் எல்லாம் இல்லாமல் போகும்.பெண்களின் மாதவிடாய்க்கால வயிற்றுவலியையும் அது போக்கும், குருதி உறையாநோயை குணப் படுத்தும். உடல்நோய் எதிர்ப்புச் சக்தியையும் கூட்டிவிடும்'

ஆக, வாரம் ஒருமுறையோ இரண்டு முறையோ மீன்தலை சாப்பிட்டால் மொத்த ஆரோக்கியமும் மேம்படும். அதனால் கொதி நீரில் மஞ்சள்தூள்- ஊப்புத்தூள் - கொறக்காய் சேர்த்து மீன்தலைகளை சமைக்குமுன் 30 நிமிடம் மூடி ஊறவைக்க வேண்டும்.

கடுகு - வெந்தயம் - நசுக்கிய இஞ்சி - பூண்டு - நறுக்கிய வெங்காயம் எல்லாவற்றையும் ஒன்றாய் சேர்த்து வதக்கிய பின்னரே மிளகாய்த் தூள் - மஞ்சள்தூள் - மல்லித்தூள் சேர்த்து குறைந்த நெருப்பிலிட்டு கறியைக் கொதிக்க வைக்க வேண்டும். பின்னரே மீன்தலை களைச் சட்டியிலிட்டு மூடிவிட வேண்டும். 10 நிமிடத்தின் பின் கறிவேப்பிலையும் தேங்காய்ப் பாலும் இட்டு சிறுநெருப்பில் கொதிக்க வைக்க வேண்டும்' என்று சமையல்முறையையும் சொல்லிக்கொடுத்தார்.

கொழுப்பு இறைச்சியைவிட மனிதர்களின் உடல்நோய் தீர்க்கும் உன்னத மருந்துதான் கடல்மீன். ஓமேகா-3 என்னும் அமிலம்தான் உடல் வளர்ச்சிக்கும் உள்ளத்தின் ஆரோக்கி யத்திற்குமான ஊட்டச்சத்து.

அட்டாளைச்சேனை ஆழிசூழ் கடற்பரப்பில் சூடை முதல் திமிங்கிலம்வரை ஆயிரக்கணக்கான மீனினங்கள பிடிக்கப்படுகின்றன. அவற்றின் சுவை அபாரமானவை. பாறை – கொடுவா – சூரை – சுறா – அறக்குளா – கணவா - முரல் -

என்ற மீன்பா மகத்தானது. நூறுவகை மீன்களைப் பற்றிப் பேசும் **பள்ளு இலக்கியம்** ஆற்றுமீன்கள் பற்றி அதிசுவாரசியமான சேதி சொல்கின்றன.

'ஓங்கு செந்நெல் ஊடு கயல் உகள' என்று வெண்பாவில் ஓதி உட்பொருள் உவமம் சேர்த்து ஒழுங்கமைத்திருப்பதையும் அறிய முடிகிறது. உலக நிலப்பரப்பில் 2000க்கு மேற்பட்ட மீனி னங்கள் உள்ளதாக சங்க நூல்கள் தெரிவிக் கின்றன. **கம்பராமாயண**த்தில் 'பனைமீன் திமிலோடு தொடர்ந்து துள்ள' என்ற பாடலில் 'பனைமீ' னென்று திமிங்கிலத்தைப் பற்றிப் பாடிய பாடல் பிரமிக்க வைக்கிறது

'சேல் பட்டு அழிந்தது செந்தூர் வயற் பொழில்' என்று மொழிகிறார் **அருணகிரிநாதர்**. சேல் என்றாலும் மீன் என்றுதான் பொருள். 'ஒழுகு நீர் ஆரல், இருஞ்சேற்று அயிரை, கருங்கண் வரால், கணைக்கோட்டு வாளை, சுறவு கோட்டன்ன முள் இலைத்தாழை, கடுஞ்சுறா எறிந்த கொடுந்திமில் பரதவர்' என்றெல்லாம் மீனினத்தின் மீது தமிழ்மேன்மை பிரயோகிக்கப் பட்டு பிரமிக்க வைக்கிறது பள்ளு இலக்கியம்.

ஆனால் பிச்சைப்பரிகாரியோ விலாங்கு மீனை 'மருந்துமீன்' என்கிறார். அது 'வித்தியா சமான தோற்றத்தில் இருந்தாலும் அபார சத்துள்ள விலாங்குமீனைச் சமைத்து அடுத்த நாள் சாப்பிட்டால் அது சுவையாகவும் இருக்கும். சுகாதாரமாகவும் இருக்கும்'' என்று சொல்கிறார்.

'நன்னீரில் வாழும் மீனைவிட உப்புத் தண்ணீரில் வளரும் மீன்கள் ஒமேகாஅமிலம் கொண்டவை. கடல்மீன்கள் கடற்பாசியை உண்கின்றன. ஆற்றுமீன்களோ பூச்சி புழுக்களைத்தான் தின்னுகின்றன.

தளப்பத்து – தோறா – சீலா – திரளி என ஏராளமான மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

'கடல்மீனிலும் பலவகை உள்ளன. ஒவ்வொரு மீனிலும் பல்லினம் உள்ளன. பாறைமீனிலும் சுறாமீனிலும் பலவகை உள்ளன.

சுறாமீன்கள் ஆபத்தானவை ஆனால் ஆரோக்கியமானவை. கடலில் நீராடுபவர்களுக்கும் மீன்பிடிப்பவர்களுக்கும் அவை சவாலானவை. அவற்றின் பற்கள் கூர்மையானவை. வெய்யிலில் காயவைத்த சுறாவின் தோலும் முட்களும் எலும்புகளும் மனிதர்க்குப் பயனுள்ளவை – விலை மதிப்புள்ளவை.

'இறால் - மீன் வாங்கும்போது எப்போதுமே அதன் தலையைச் சரியாகப் பார்த்து வாங்க வேண்டும். இறால் - மீன்களின் தலை, செவுள் (சுவாசப்பூ) சுத்தமாகவும் வலுவாகவும் உறுதியாகவும் இருந்தால் அது இப்போதே பிடிக்கப் பட்டது என்று அரத்தம்.

இறாலில் உள்ள சத்துக்கள் அபரிமிதமானவை. கனிமச்சத்து அதிகமுள்ளவை. இரத்தத்தில் ஈமோகுளேபினை அதிகரித்து ஞாபகசக்தியையும் அதிகரிக்கிறது' நுரையீரல் நோய்க்கெதிராகவும் போராடுகின்றது' என்றார்

'மீன்முள் தொண்டையில் மாட்டிக் கொண்டால் ஒருகிளாஸ் தண்ணீரில் சிறிது உப்பு போட்டுக் குடித்தாலே போதும். ஒரு துண்டு வாழைப்பழத்தை தொண்டையில் சிறிதுநேரம் வைத்திருந்தாலே போதும் வாழைப்பழம் அப்படியே வாயில் சுரக்கும் உமிழ்நீருடன் சிக்கிய மீன்முள்ளையும் சேர்த்து வயிற்றுக்குள் தள்ளிவிடும்.

ஒரு கரண்டி ஆலிவ் எண்ணெயை தொண்டைக்குள் விட்டால் எண்ணெயின் வழவழப்பில் மீன்முள் வயிற்றுக்குள் சென்றுவிடும். அல்லது 1 டம்ளர் வினாகிரியைத் தண்ணீரில் கலந்து 1 கரண்டி எடுத்துக் குடித்தால் போதும் இந்த அவசர சிகிச்சையைச் செய்ய வேண்டும்' என்றும் முதலுதவி சிகிச்சை முறையையும் சொல்லித் தந்தார் பிச்சைப்பரிகாரி.

திருக்கைமீன்களைப் பற்றி பள்ளு இலக்கியங்கள் பல உள்ளன. 'பெண்களுக்கு அரு மருந்தென்றால் அது திருக்கைமீன்தான். இதை தாய்மார் சாப்பிட்டாலே போதும் தாய்பால் உடன் சுரக்கும். அது உடம்பை முறுக்கிப் பிழிந்து கெட்டநீர் கசடுகளை வெளியேற்றி விடும். உடம்பையே திருகி கெட்ட கழிவுகளை வெளியேற்றுவதால்தான் அதற்கு திருக்கைமீன் என்றே பேர் வந்ததாம்' என்றார் பிச்சைப்பரிகாரி.

திருக்கை என்கிற இந்த வித்தியாசமான மீன் மற்ற மீன்களைப் போலல்லாமல் உருவ அமைப்பில் வேறுபட்டது. தட்டையான உடலமைப்புடையது. இதன் மேற்புறத்தில் இரண்டு கண்கள். கூர்மையான பற்கள் கொண்டது. அதன் தடித்த உடற்தோலில் சிறு சிறு முட்கள் இருக்கும். வாலின் முற்பகுதியில் இரண்டு கொடுக்கு இந்தக் கொடுக்குகளால் எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும். அதன் வால் உடலை விட நீளமாயிருக்கும். அந்த வாலில் ஏராளமாக மிகச் சிறுசிறு முட்களும் இருக்கும்.

கடலுக்கு அடியில் கும்மிருட்டில் கூட திருக்கை வாழும். அப்போது திடீரென ஒருவித ஒளியை உமிழ்ந்து மின்சார அதிர்வை உருவாக்கி வெளிச்சம் பாய்ச்சும். இந்த வெளிச்சத்திற்குப் பயந்து எதிரிமீன்கள் ஓடிவிடும்.

பொதுவாக நமது மக்கள் முட்களை நீக்கிவிட்டே மீனைச் சமைப்பார்கள். ஆனால் இதன் முட்களிலிருந்துதான் நிறைய மருந்துப் பொருட்கள் எடுக்கப்படுகின்றன. இதில் ஓமேகா-3 அதிகம் இருக்கின்றது. உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கும் சக்தி இந்த திருக்கை மீனுக்கு இருக்கிறது.

- **உலக நிலப்பரப்பில் 2000க்கு மேற்பட்ட மீனினங்கள் உள்ளதாக சங்க நூல்கள் தெரிவிக்கின்றன.**
- **கம்பராமாயணத்தில் 'பனைமீன் திமிலோடு தொடர்ந்து துள்ள' என்ற பாடலில் 'பனைமீன்' என்று திமிங்கிலத்தைப் பற்றிப் பாடிய பாடல் பிரமிக்க வைக்கிறது.**
- **'சேல் பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில்' என்று மொழிகிறார் அருணகிரிநாதர். சேல் என்றாலும் மீன் என்றுதான் பொருள்.**
- **நூறுவகை மீன்களைப் பற்றிப் பேசும் பள்ளு இலக்கியம் ஆற்றுமீன்கள் பற்றி அதிசுவாரசியமான சேதி சொல்கின்றன.**

பித்தம் - தலைசுற்றல் - வாந்தி – தலைமுடி உதிர்வு போன்றவற்றைத் தடுக்கும். எலும்பு – பல் - நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப் படுத்தும். மூளையின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். ஆஸ்துமா - இதயநோய் - புற்றுநோய் - நீரிழிவுநோய் போன்றவற்றின் அபாயத்தையும் குறைக்கும்.

“சூடை என்றழைக்கப்படும் மத்தி மற்றும் அயிலா - திரளி - சங்கரா போன்ற கடல் மீன்களில் ஓமேகா- 3 என்ற அமிலச்சத்துக் கொண்டவை. ஓமேகா- 3 கொழுப்பு அமிலம் மூளைக்கும் இதயத்திற்கும் மூட்டுவலிக்கும் மாமருந் தென்றும் மனச்சோர்வு - மனஇறுக்கம் - மனஅழுத்தம் போன்ற பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதாகவும் உடற்கொழுப்பின் அளவு குறைக்கப்படுவதாகவும் இதயத்துடிப்பு சீரடை வதாகவும் சமீப ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

மீன்களில் நெத்தலி ஆரோக்கியமானது. இரண்டு சென்ரிமீட்டர் நீள உருவஅமைப்பு கொண்டது. அரும்பெரும் கனிமச் சத்துக்களைக் கொண்டது. நெத்தலி என்பதை நெய்த்தோலி எனவும் மலையாளத்தில் அழைக்கப்படுகின்றது. நெத்தலிமீனில் ஓமேகா-3 மற்றும் பிற புரதங்களும் நிறைந்துள்ளது. நெத்தலிக்கருவாடு மக்களிடையே மிகப் பிரசித்தமானது மட்டுமன்றி எல்லா வகையான புரதச்சத்துக்களும் உள்ளன.

மனித உடலில் ஒமேகா-3 அமிலக்கொழுப்பு இயற்கையாக சுரக்காது என்பதனால் மீன் சாப்பிட வேண்டும் என மருத்துவர்கள் சொல்கி றார்கள். ஈழத்தில் கீரிமீன் என அழைக்கப்படும் கானாங்கெழுத்தியில் ஒமேகா-3 மட்டுமன்றி செலினியம் - மக்னீசியம் ஆகிய ஊட்டச் சத்துக் களும் உள்ளடங்கியுள்ளன” என்று கருத்து ரைத்தார் பிச்சைப் பரிகாரி.

ஆழிசூழ் அட்டாளைச்சேனையில் பிடிக்கப் படும் கானாங்கெழுத்தி மீனை ‘கீரிமீன்’ என அழைக்கிறார்கள். இது மிகவும் சுவை யானது. இது ஒமேகா-3 மட்டுமன்றி செலினியம் - மக்னீசியம் ஆகிய ஊட்டச்சத்தைக் கொண்டது.

சூறைமீன் அதிக சதை கொண்டது. ஒமேகா-3, விற்றமின் டீ12 ஆகிய சத்துக்களும் நிறைந்தது. இந்த மீனை சிறு துண்டங்களாக வெட்டிப் பதப்படுத்தியும் விற்கிறார்கள். அதையே நாம் ‘மீன்மாசி’ என்றழைக்கிறோம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் மாலை தீவிலும் தாயாரிக்கப்படும் மாசிக்கருவாடு அதிக ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக வருமானத்தை ஈட்டித்தருகிறது. அது மக்கள் விரும்பி உண்ணும் உணவாக நுகரப்படுகிறது.

அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளில் வாழும் ‘சால்மன்மீன்’ என்கிற சதைமீன் மனித சமூகத்துக்கு உன்னதமான உணவு. அதிக அளவு ஒமேகா -3 அமிலம் நிறைந்த சாலமன்மீன் புற்றுநோயக்குப் பெருமருந்தென ஆங்கில மருத்துவம் அறிவிக்கிறது.

கடல்வாழ் மீனினங்களில் ஒரு ராட்சத இனம்தான் திமிங்கிலம். **அம்பர்கிறிஸ்** என்கிற அதன் வாந்திக்கழிவால் வாசனைத்திரவியம் (பெர்பியூம்) தாயாரிக்கப்படுகிறது. அது உலக வரத்தகத்தில் பெருமதிப்பைப் பெற்றிருக் கின்றது. திமிங்கிலத்தைப் பிடிப்பதும் உண்பதும் எப்படி தடுக்கப்பட்டதோ அப்படி ‘அம்பர்கிறிஸ்’ என்கிற அதன் வாந்திக்கழிவையும் எடுப்பதும் - விற்பதும் சட்ட விரோதமானது.

அயிரைமீன்கள் தனி ருசியானவை. அவை நமது ஆயுள் காப்பவை. ஒமேகா 6 என்ற கொழுப்புச் சத்துடைய அயிரை மீன்கள் புரோட்டீன் விற்றமின் கனிமச் சத்துக்கள் அத்தனையும் அபரிமிதமாக உள்ளவை. வயல்களிலும் ஏரிகளிலும் ஆறுகளிலும் ஓடைகளிலும் வாய்க் கால்களிலும் வளர்பவை. அதனால் மழைக் காலங்களில் நீரோடைகளில் வலை அல்லது அத்தாங்கு வீசி இந்த மீனைப் பிடிக்கிறார்கள்.

‘கெட்ட கொழுப்புகள் குறைவாகவும் நல்ல கொழுப்புகள் அதிகமாகவும் உள்ளதால் அயிரையை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இந்த மீன் களை உணவுடன் அடிக்கடி சேர்த்துச் சாப்பிடு வதால் நம் உடலின் இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தி இரத்தஅழுத்தப் பிரச்சினையைத் தடுக்கிறது. சர்க்கரை நோயாளிகள் அதிகம் சாப்பிடுவதால் உடலில் அபாயம் குறைகின்றன. ஆயுட்காலம் காலம் கூடுகின்றன’ என்று வியாதிகளுக்கெல்லாம் மீனே சிறந்ததென வழிமொழிந்தார்.

முகைதீன் பிச்சைப் பரிகாரி தன் மூலிகை மீன் மருத்துவத்தால் மக்கள்பிணி தீர்த்து வைத்து வாழ்ந்து மறைந்து போனாலும் அவரது அரும்பேரும் - பெரும்பேறும் - தகைமைசார் துறைப் புகழும் இந்த மண்ணில் இன்னமும் நிலைத்தே இருக்கின்றன.

❍❍❍

# அப்பாவின் காது

"என்ர பிள்ளை ஒரு பச்சை மண்
வந்தவள் அவனை இருத்தி எழுப்பிறாள்"
அப்பம்மா அடிக்கடி புலம்புவதுண்டு.
"அப்பாக்கு அவரிட ஆக்கள்தான் உசத்தி"
அம்மாவும் அடிக்கடி புலம்புவதுண்டு.
மச்சாள் ஏன் இப்பிடி இருக்கிறா?
மாமிமார் அப்பாவை கேள்விகளால்
துளைப்பதுண்டு.
"எங்களுக்கு மட்டும் ஏன் கஞ்சத்தனம் காட்டிறியள்"
அண்ணாவும் நானும் அடிக்கடி கேட்பதுண்டு.
யாருக்கும் அவர் பதில் சொன்னதில்லை.
அப்பாவுக்கு வாயிருந்தது. அது மூடியிருந்தது.
அப்பாவுக்குக் காதிருந்தது. அது இதயத்தைத்
தொட்டிருந்தது.

நேற்று வரை இருந்தன. ஆனால் இன்றில்லை.
அம்மாவின் அழுகுரல் வானத்தை இடித்தது.
நல்லாயிருந்த மனுசன் பொத்தென்று போயிட்டார்."
"தன்ர குடும்பம் தன்ர குடும்பம் என்று
மனுசி பிள்ளையள நடு ரோட்டில விட்டிட்டான்"
அதுகளுக்கு இருக்க ஒரு வீடு கூட இல்லை!
யார் யாரோ வந்தார்கள். ஏதேதோ சொன்னார்கள்.
அப்பாவின் கூட்டாளி சோமுமாமா வந்திருந்தார்.
எங்களைத் தனியே கூட்டிப் போனார்
ஒரு பையை அம்மாவிடம் கொடுத்தார்.



"தேவி! நீயும் மற்றவையும் நினைப்பது போல
பாலன் பொல்லாதவன் இல்லை.
உங்கட எதிகாலத்தை நினைச்சு
அவன் தேடின சொத்தெல்லாத்தையும்
என்னட்ட தந்து வைச்சவன்.
இதில ஒரு வீட்டு உறுதியும் இருக்குது பார்."
"ஏன் அண்ண அதை எனக்கு மறைச்சவர்.?"
மத்தளம் போல அவன் பட்ட அடிகள்
அவனை ஊமையாக்கிவிட்டது தேவி.

கிரிகைச் சாமான்களும் வந்துவிட்டன.
அம்மா அழுதழுது சாமான்களைப் பிரிக்கிறாள்.
சந்தணக் கட்டை இல்லையே என்கிறாள்
சுவிச்சைப் போட்டால் விசயம் முடியும்.
வெளிநாட்டில சந்தணக்கட்டைக்கு எங்க போறது?
பக்கத்து வீட்ட அன்ரி உபதேசம் செய்தாள்.
உனக்கு என்னடி தெரியும் சந்தனக் கட்டைபற்றி
என்ர மனுசன் ஒரு சந்தன மரம் கண்டியோ!
எத்தனை நச்சுப் பாம்புகள் சுற்றி வளைத்தாலும்
சந்தன மரத்துக்கு நஞ்சு ஏறவே ஏறாது.
என்ர மனுசனைச் சுற்றி எத்தனை பேர்
எத்தனை நச்சுக் கதையள் சொல்லிறவ.
ஆனால் அவரிட காது நஞ்சை உள்வாங்காது.
அவர் ஒரு அப்பழுக்கற்ற சந்தனமரமடி!
அவரிட உடல் சந்தனக் கட்டையிலதான் வேக
வேணும்.
அம்மா உறுதியாகச் சொல்லிவிட்டாள்.
நான் சந்தனக் கட்டை வேண்டப் புறப்படுகிறேன்.
அப்பாவுக்குக் காதிருந்தது.
அது இதயத்தைத் தொட்டிருந்தது.



**– கலாநிதி ஜீவகுமாரன் –**

# ஆபிரிக்காவின் புதிய கலங்கரை விளக்கு இப்ராகிம் ராரோற



**பு**ஸ்கினோ பஸோவின் ஜனாதிபதியான 37 வயதே நிரம்பிய இப்ராகிம் ராறோ ஒரு புதிய எழுச்சியை தனது நாட்டில் விதைத்து வருகிறார். அது ஆபிரிக்க நாடுகள் எங்கும் பரவி பயிராகிக் கொண்டு வருகின்றது.

இந்த வயதுடையவர்களில் ஒருசிலரே அரசியலில் புதிய வரலாற்றை எழுதுபவர்களாக இருப்பார்கள்.

ஆபிரிக்கக் கண்ட மண் பொன் விளையும் பூமி என்பார்களே அதற்கு ஒப்பானது. அம் மண்ணில் விளையாத, விளைவிக்க முடியாத பயிர் வகைகளோ பழவகை மரங்களோ கிடையாது.

ஆபிரிக்க மண்ணின் கீழ் கனிம வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன. அவை விலை மதிக்க முடியாதவை. ஆபிரிக்க கண்டமென்பது அட்லான்ரிக் சமுத்திரம், இந்து சமுத்திரம், தென் சமுத்திரம் என மூன்று கடல்களால் சூழப்பட்டு அக்கண்டம் சார்ந்த தீவுகளையும் உள்ளடக்கி 54 நாடுகளைக் கொண்ட கண்டமாகும்.

இந்தச் செல்வ இருப்புகளை சுரண்டுவதற்காக, ஆபிரிக்க மக்கள் விழிப்படையாதவர்களாக இருக்க வேண்டும் என்பதில் முதலாளித்துவ நாடுகள் ஆபிரிக்க மக்களை வறுமையில் வாழ அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி அவர்களின் நிறமான கருப்பு நிறத்தையும் முன்னிறுத்தி அவர்கள் நாகரீகமற்றவர்கள் என்ற விம்பத்தை மிகப்பல ஆண்டுகளாக முன்னிறுத்தியமை இன்று நொருங்த் தொடங்கயுள்ளது.

ஆபிரிக்க நாடுகளின் வளங்களைச் சுரண்டுவதற்காக ஐரோப்பியர்கள் மேற்கொண்ட பொருளாதாரச் சுரண்டல் சூழ்ச்சிகள் ஏராளம்.

தமது நாட்டு வளங்கள் சுரண்டப்படுவதற்காகவே ஐரோப்பிய முகவர்கள் பாதுகாவலர்களாக தமது நாடுகளுக்குள் நுழைந்து தமக்கு அபயம் அளிப்பவர்கள் என நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆபிரிக்க நாடுகள் தெளிவாக உணர்ந்து நிலையில்தான் புஸ்கினோ பஸோ என்ற நாட்டின் இராணுவக் கப்டன் இப்ராகிம் ராறோ புரட்சியின் மூலம் அந்த ஜனாதிபதியாக வந்து முழு ஆபிரிக்க நாடுகளுக்கும் தன்னெழுச்சி வழிகாட்டியாக மாறியுள்ளான்.

37 வயதேயான ஜனாதிபதி இப்ராகிம் ராறோவின் எழுச்சிப்புரட்சிக்கு அந்நாட்டு மக்கள் மட்டுமல்ல அனைத்து ஆபிரிக்க நாடுகளுமே இளம் ஜனாதிபதியுடன் கைகோர்த்து நிற்கின்றன.

இப்ராகிம் ராறோவை அந்நாட்டு மக்கள் தமக்கும் ஜனாதிபதிக்குமிடையில் இடைவெளி வைத்து ஜனாதிபதி என்று பார்க்கவில்லை. இப்ராகிம் ராறோவைத் தமது சகோதரனாகவே பார்க்கிறார்கள். இப்ராகிம் ராறோவும் நான் உங்களுடைய சகோதரன் என்றே சொல்லி வருகின்றார்.

எந்த நாட்டில் நாட்டின் தலைவன் மக்களுடன் கலந்து நிறங்கிறானோ அந்தத் தலைவனை, அந்நாட்டின் தலைவன் என்பதற்கப்பால் தமது குடும்பத்தவனாக அன்பு செலுத்தத் தொடங்கி விடுவார்கள் என்பதற்கு புஸ்கினோ பஸோ என்ற நாடு உதாரணம்.

தமது காலணித்துவ நாடாக இருந்த புஸ்கினோ பஸோவின் எழுச்சியையும் தற்சார்புச் சிந்தனையையும் பிரான்ஸ் எதிர்பார்க்கவே இல்லை.



-ஏலையா
க.முருகதாசன்
(ஜேர்மனி)

இப்ராகிம் முழு ஆபிரிக்க நாடுகளுக்குமே ஒரு முன்னோடி,ஒரு விடிவெள்ளி. ஆபிரிக்கர்கள் என்றவுடன் அவர்களின் நிறங்களை முன்னிறுத்தி ஏளனமாகச் சிந்தித்த உலக நாடுகள் சில அந்நாட்டின் அபிவிருத்திகள் கண்டு திகைத்து நிற்கின்றன.

புஸ்கினோ பஸோ தமகக்கான பணத்தை அவர்களே அச்சிடுகிறார்கள். அங்கு விமானங்கள் தயாரிக்கப்படுகின்றன.மின்சாரக் கார்கள், கைத்தொலைபேசிகள், நவீன மருத்துவமனைகள், நவீன கல்விக்கூடங்கள், அழகிய வாழ்விடக் கட்டிடங்கள், நவீன வீதிகள், நவீன ரயில்கள், ரயில் பாதைகள், மிகையான விவசாய அபிவிருத்தி என வேகமாகத் தன்னை வளர்த்து வருகின்றது புஸ்கினோ பஸோ என்ற ஆபிரிக்க நாடு.

அதற்கு அச்சாணியாக இருப்பவர் 37 வயதே நிரம்பிய ஜனாதிபதியான இப்ராகிம் ராறோதான். அந்நாட்டின் அமைச்சரவையும் ஒரே இலக்குடன் செயல்பட்டு வருகின்றது.

அடிக்கடி தனது நாட்டு மக்களுடன் உரையாடும் இப்ராகிம் ராறோ அந்நாட்டிற்கு ஒரு கலங்கரை விளக்கேயாகும்.

❍❍❍

# போதை

முழுமையான தூக்கம்
தேவையான போது விழிப்பு
வாசிப்பு
அம்மாவின் அரவணைப்பு
கவனிப்பு
அப்பாவுடனான உரையாடல்கள்
நல்லுறவுகளின் கைகோர்ப்பு
நன்மதிப்பு
செல்லப் பிராணிகளுடனான கொஞ்சல்
தொய்வு தைக்காத தொடர் வெற்றிகள்
வேடிக்கை வினோதங்கள் விளையாட்டுகள்
திருவிழாக்கள்
வளர வளர வெட்டி
அழகு படுத்தப்படும் முடி
சவரம் செய்யப்பட்ட முகம்
சலவை செய்யப்பட்ட ஆடை அணிவு
நாளாந்தக் குளியல்
வாராந்த முழுக்கு
வேளா வேளைக்கான உணவு
ஆரோக்கியம்
நிமிர்ந்த நடை
இவை எவையுமே
இன்று தேவையில்லை
இவனுக்கு

இவனுக்குத் தேவை
நடுங்கும் தன் நரம்புகளின்
ஆர்ப்பாட்டத்தை அடக்க
போதைமருந்தும் ஊசியுமே
தந்தையின் கோபம்
பெற்ற தாயின் கதறல்
ஆசிரியர்களின் அறிவுரை
அதிகாரிகளின் அதட்டல்
நல்ல நண்பர்களின் பாராமுகம்
ஊராரின் கேலி கிண்டல்கள்
தொடர் தோல்விகள்
இவை எவையுமே
தடுத்து நிறுத்திவிடப் போவதில்லை
இவனையும்
இவனைப் போன்றவர்களையும்

இதுவே இன்றைய நிதர்சனம்

இறுதி காணுமா
போதை முடக்கம்
அடக்கித் துடைத்துத்
தூர்வாரலை
முழுமையாகச் செய்யுமா
சீர்திருத்த வழிவகைகள்

அல்லது
மீண்டும் மீண்டும் உயிர்தெழுந்து
அவலத்தைத் துப்பத்தான்
போகின்றதா
போதைப் பாவனை

பதில் சொல்லுங்களேன்

– மனோகரி ஜெகதீஸ்வரன்

# முளைகட்டும் கண்ணீர்

நட்சத்திரங்களிடம் உன்னைப் பற்றி
கூறியிருக்கிறேன்
நிலவிடம் நினைவுகளை நிரப்பி இருக்கிறேன்
இருண்ட வானம் முழுவதும்
இசையாகித் தவழ்ந்திருக்கிறேன்
காற்றினிலே காதல் இரகசியங்களை
கரைத்து வைத்திருக்கிறேன்
பறவைகளிடமும் மரங்களிடமும் கூட
பாசக்கதைகளைப் பறைந்திருக்கிறேன்

நீயோ மலை முகட்டில் அமைதிப்பிரகடனம்
செய்து கொண்டிருந்தாய்
முட்காட்டைக்கண்களில் காட்டி
முக்காடிட்டுப் பயணித்தாய்
கண்ணீர் முத்துக்கள் நிலத்தை
முத்தமிட்டு முத்தமிட்டு
முளைகட்டத் தொடங்கி விட்டன

பின்னும் அவை மேலெழுந்து வளர்ந்து
முதிரத்தொடங்கிவிட்டன
அங்கே பூக்களுமில்லை காய்கனிகளுமில்லை
பூச்சிகள் மட்டும்

எங்கேயோ
எப்படியோ
ஏதிலியாய் நானிருக்க
பாலைவனத்தின் நீரோட்டமாய்
என் நேசத்தை தூக்கி(ல்) எறிந்தாய்

பாலைவனம் இப்போ என் சோலைவனம்
என் பாதங்களோ
உனை நோக்கியே தினம்

ஒரு வாய்தானும் சாப்பிடாமல்
அடம்பிடிக்கும் குழந்தையாய்
நானின்னும்!!

**Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்**

# புனிதரைத் தொலைத்த பூமி...!

**– ஷெல்லிதாசன்**

புனைந்த வரலாற்றில்
புனிதர்களாம் இவர்கள்.
சட்டங்களை இவர்கள் மீறலாம்
இவர்ளை மீறிய சட்டங்களுக்கு
இங்கு இடமில்லை.

நடுத்தெருவில் நின்று இவர்கள்
வரம்பற்ற வார்த்தைகளை
உதிர்த்தாலும்
பார்த்துக்கொண்டு
பார்வையாளர்களாக நின்று
பாதுகாப்பு வழங்கும்
அழகை எமது நாட்டைத் தவிர வேறு
எந்தத் திருநாட்டிலும் நாம்
காணவே முடியாது.

அத்து மீறலாம்
அடாவடிகளும் புரியலாம்
தர்மத்தை உச்சரித்தே
அதர்மத்தைச் செய்யலாம்
இவர்களை தட்டிக்கேட்கும்
திராணி இதுவரையில்
எவருக்கும் வரவில்லை.
ஏனெனில்
வருந் தலைவர்களும்
அவர்களது அணிகளும்
இவர்களின் பாதங்களில்
முழந்தாளிட்டு வணங்கி
ஆசி பெற்றாலே
அடுத்த அடி எடுத்துவைக்க
முடியுமென்ற
எழுதாத சட்டந்தான்
நடைமுறையில் காலாகாலமாக.

நீதி நீதிக்காக ஏங்கும்
புண்ணிய பூமி இதுவாக.
மீதியைத்தான் சொல்ல வேண்டுமா...?
ஆசைகளை துறந்து
அரசவையை வெறுத்து
புனித ஞானம் பெற்றவனே
உன்வழி செல்லும்
உண்மையான சீடர்
எங்கிருக்கிறார்...
தேடுகிறோம்...தேடுகிறோம்
எமது தேடல் முடியவில்லை.

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

**புதிய புயல்கள்**

நாட்டில் புயல் ஒன்று ஏற்படப்போகிறது என்பது, எல்லோரும் எதிர்பார்த்த ஒரு விடயமாகவே இருந்தது. ஆனால், அந்தப் புயல் இவ்வளவு உயிர்ப்பலிகளையும், அழிவு களையும் ஏற்படுத்தும் என்பது, யாரும் எதிர் பார்க்காத ஒன்று. நமது காலத்தில் ஏற்பட்ட பெரும் அவலமாக இது அமைந்துள்ளது. இயன்றவரை மக்களைக் காப்பாற்றிய படைத் தரப்பினர் உட்பட அனைவருமே நாட்டின் நன்றிக்கு உரியவர்கள். மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் தம் இன்னுயிரை இழந்த அனைவ ருக்கும் நாட்டின் அஞ்சலி உரித்தானது. இந்தப் புயலால் நாட்டில் ஏற்பட்ட சோகம் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப, அதிக காலத்தைச் செலவிடவேண்டி வரும்.

நாட்டின் இத்தகைய சோகமான நிலை யில், எதிர்க்கட்சி முக்கியஸ்தர் சுயநலம் மிக்க ஒரு வேடிக்கையான விடயத்தை முன்வைத்திருக்கிறார். நாட்டின் அனர்த்த நிலையைக் கையாளத் தெரியாவிட்டால், நாட்டைத் தங்களிடம் தந்துவிடுமாறு அரசிடம் அவர் கூறியிருக்கிறார். இப்படி ஓர் ஆசை, அவருக்கு இந்த நேரத்தில் வந்திருக்கிறது! படுமுட்டாள்தனத்தின் உச்சியில் இருப்பவர்களுக்குத்தான் இந்த நேரத்தில் இப்படியான யோசனைகள் ஏற்படும். “மடைச்சாம்பிராணி” என்பது, இவர் களுக்குத்தான் மிகப் பொருந்தும். இப்படி யான ஒருவரைத்தான், “வீடு” நாட்டின் முக்கியஸ்தருக்கான தேர்வின்போது ஆதரித்தது.

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் காரணமாகப் பல நாடுகள் “நான் முந்தி நீ முந்தி” என்று விழுந்தடித்துக்கொண்டு உதவிக்கரம் நீட்டி வருகின்றன. நாட்டின் சோகமான சூழலில், இத்தகைய உதவிகள் பெரும் வரப்பிரசாதமாக விளங்குகின்றன. அதேவேளை பாகிஸ்தான், 2024இல் காலாவதியான பொருட்களை அனுப்பி வைத்துள்ளதாகச் செய்திகள் வந்தன. நாட்டின் பழைய அரசுகள் இப்போதும் இருந்திருந்தால், கிடைக்கும் உதவிகள் அவர்களது சட்டைப்பைகளை நிறைத் திருக்கும். மிஞ்சியவை மக்களுக்குக் கிள்ளிப் போடப்பட்டிருக்கும்.

நாட்டில் ஏற்பட்ட பாரிய அழிவுகளுக்கு மத்தியில், புதிய வெளிச்சம் ஒன்றும் ஏற்பட் டிருக்கிறது. அது பலாலி விமான நிலையம் தொடர்பானது. அங்கு 75 ஆசனங்களைக் கொண்ட விமானங்கள் மட்டுமே தரையிறங்க முடியும் என்று இந்தியா இவ்வளவு காலமும் சொல்லிக்கொண்டு திரிந்தது. ஆனால், யாரும் எதிர்பாராத முறையில் இது வரையில் இரண்டு அமெரிக்கக் கனரக விமானங்கள் பலாலியில் தரையிறக்கப்பட்டு, அது சகல வகையிலும் சர்வதேச விமான நிலையத் துக்குரிய தகுதி களைக் கொண்டது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாரிய புயலுக்கு முன்னர் நாட்டின் பேரினவாதிகளால் திருகோணமலையில் ஒரு செயற்கையான ‘புயல்’ ஏற்படுத்தப்பட்டது. பேராசை கொண்ட வர்த்தகர் ஒருவரினதும், பேரினவாதத்தில் ஊறிப்போயிருந்த சமய வேடதாரி ஒருவரினதும் சுயநலத்துக்காக ஒரு ‘நாடகம்‘ அரங்கேற்றப்பட்டது. அந்த நாடகத்தில் பேரினவாதிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்துவிட்டனர். பேரினவாதிகள் எப்போதும் தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு ஒரு மகானின் சிலைகளையே அடையாளச் சின்னமாகப் பயன்படுத்துவதுண்டு. அவர் உபதேசித்த தர்மம் எதனையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. நாட்டில் சமய வேடதாரிகள் என்ன செய்தாலும், கேள்வி - மறுமொழி இல்லை. அவர்கள் என்ன அடாவடித்தனங்களும் செய்யலாம், காவல்

துறையினரைக் கை நீட்டி அறையலாம், இனங்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டலாம். யாரும் அவை பற்றி அக்கறை காட்ட மாட்டார்கள். இவற்றையே ஒரு பொது மகன் செய்தால், சட்டம் அவன்மீது சீறிப்பாயும்.

இந்த நிகழ்வின்போது, அரசின் முதல் செயல்பாடு, தமிழ்மக்களுக்கு நிம்மதியைக் கொடுத்தது. 'பரவாயில்லையே!' என்று அரசை வாழ்த்த உதடுகள் துடித்தன. அந்த ஈரம் காய்வதற்குள், அடுத்து நடைபெற்ற நிகழ்வு, 'ப்பூ! இவ்வளவு தானா?' என்று வாயைச் சுழிக்கவைத்தது. பேரினவாதத்துக்கு அடிபணிந்துவிட்டு, உயர்சபையிலும், பொது வெளியிலும் இலங்கையர் பற்றியோ, 'இலங்கையர் தினம்' கொண்டாடப்படுவது பற்றியோ பேசுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. தமிழ்மக்களால் தெரிவுசெய்யப்பட்டு உயர்சபைக்கு அனுப்பப்பட்ட அரசு சார்புத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்குச் சாப்பிட மட்டும்தான் வாய் இருக்கிறதா?

நாட்டில் ஏற்பட்ட பெரும் புயலுக்கு முன், ராஜவம்ச இளவரசரின் பேரணிப் 'புயல்' ஒன்றும் இடம்பெற்றிருந்தது. அவர் ஒரு 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்பது, விஷயம் அறிந்த அனைவருக்கும் தெரியும். அந்தப் பேரணிப் புயலில், மக்களால் தூரத் துரத்தப்பட்ட எதிரணியைச் சேர்ந்த பலரும் உல்லாசமாகக் கலந்துகொண்டனர். பேரணிக்குச் 'சிறப்புச்' சேர்க்குமுகமாகக் குடிகாரக் கும்பல்களும் தமது 'திறமையைப்' பரவசத்தோடு வெளிப்படுத்தின. ஒரு வாரமோ, பத்து நாட்களோ கழித்து, அவர்களுக்கும், தமக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என்று வாடிய 'மொட்டு' பதில் அளித்தது. நாட்டில் ராஜவம்சம் என ஒன்று இருப்பதை, நாட்டுமக்களுக்கு இப்படியான முறையிலாவது தெரியப்படுத்த வேண்டாமா?

## திருமலையில் ஒரு சிறப்பு நிகழ்வு

கடந்த நவம்பர் மாத நடுப்பகுதியில், திருகோணமலையில் ஒரு சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. திருகோணமலைத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டிலும், அகரம் மக்கள் கலைக்கூடத்தின் அனுசரணையிலும் கவிச்சுடர் சிவரமணியின் இரு துருவங்கள் என்ற கவிதைத் தொகுப்பு நூல்வெளியீட்டுவிழா இடம்பெற்றது. திருகோணமலைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் திருமலை நவத்தின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், முதன்மை அதிதியாகத் திருகோணமலை மாநகராட்சி மன்ற முதல்வர் கந்தசாமி செல்வராசாவும், சிறப்பு அதிதிகளாகப் பேராசிரியர் துரை. மனோகரனும், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரும், விசேட கௌரவ அதிதியாகப் புரவலர் ஹாசிம் உமரும் கலந்துகொண்டனர். நீங்களும் எழுதலாம் இதழின் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம் உட்படப் பல சிறப்பு அழைப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் வரவேற்புரையை ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளர் எம். எஸ். எம். நஸீரும், ஆசியுரையைச் சோ. இரவிச்சந்திரக் குருக்களும் நிகழ்த்தினர். தலைமை உரையைத் திருமலை நவமும், அறிமுக உரையை மர்ழியா சக்காப்பும் வழங்கினர். நயவுரைகளை எம். எஸ். எம். நியாஸும், சொல்லருவி கருணாகரனும் நிகழ்த்தினர். புரவலர் ஹாசிம் உமர் முதல் பிரதியைப் பெற்றதோடு, திருகோணமலைத் தமிழ்ச் சங்கத்துக்கு நூல்களையும் வழங்கினார். அதிதிகள் உரைகளைக் கந்தசாமி செல்வராசாவும், பேராசிரியர் துரை. மனோகரனும், தே. செந்தில் வேலவரும் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியை கவிச்சுடர் சிவரமணியும், நன்றியுரையை சி. காண்டீபனும் நிகழ்த்தினர். நிகழ்ச்சித் தொகுப்பினைச் சுஜந்தினி யுவராஜா செய்திருந்தார். நூலாசிரியை கவிச்சுடர் சிவரமணியை, வவுனியா தமிழ் விருட்சம் தலைவரும், ஸ்தாபகருமான சந்திரகுமார் கண்ணன் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கவிச்சுடர் சிவரமணியின் இரு துருவங்கள் என்ற இந்நூல் புதுக்கவிதைகளையும், கிராமியக் கவிதைகளையும் உள்ளடக்கிய இரு பாகங்களைக் கொண்ட கவிதைத் தொகுப்பாக விளங்குகிறது. பல்வேறு பட்டங்களையும் தம்மகத்தே சுமந்துகொண்டிருக்கும் கவிஞை சிவாமணியின் கவிதாவிலாசத்தை இந்நூல் நன்கு வெளிப்படுத்துகிறது. இந்நூலுக்கான அணிந்துரையை நான் வழங்கியிருந்தேன்.

இவ்விழாவுக்குத் தலைமை வகித்த திருமலை நவம், எழுத்தாளரும், அரசியல் விமர்சகரும், ஆய்வாளரும், கல்விமானும் ஆவார். அவரது திருகோணமலை கலை இலக்கிய வரலாறு என்ற நூல், என்னை மிகவும் கவர்ந்திருந்தது. திருமலை நவம்

பற்றிய ஒரு முக்கிய விடயம், அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது முதலாவது மாணவர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதாகும். அதேபோல, நீங்களும் எழுதலாம் இதழின் ஆசிரியர் எஸ். **ஆர். தனபாலசிங்கமும்** பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவராகப் பயின்றவர். ஒருநாள் வகுப்பில் அவரது கவிதையொன்றை மற்றைய மாணவர்களுக்கும் வாசித்துக்காட்டி, அவரை உற்சாகப்படுத்தினேன். இன்று அவர் ஒரு கவிதை இதழின் ஆசிரியராக இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. இவ்விழாவுக்காகத் திருகோணமலை சென்றபோது, எழுத்தாளர்கள் ***திருமலை சுந்தா***, ***ஷெல்லிதாசன்***, ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளர் **நஸீர்** உட்படப் பலரையும் சந்தித்துப்பேச வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

❍ ❍ ❍

# அவள்



அகம் முழுதும் அன்புள்ள போதும்
புறத்தே கரிசனை காண்பித்ததில்லை
விதண்டாவாதமும் – பிடிவாதமும்
அமைதியான வீட்டை இரண்டாக்க
அம்மாவின் அகப்பை காம்பே பலசமயம் நிலைமையை சீர்செய்யும்.

அது வேணும் – இது வேணும் எனும் போதெல்லாம்
தன்வேலை விடுத்து – என் வேலையை
தன் வேலையாக்கியவளை
பலமுறை கரைந்துள்ளேன் –
“வேற்றிடம் செல்பவள் நீ” என்று.

தன்னுள் எத்தனையோ சலனம் இருப்பினும்
ஈன்ற தாய்போல் எனைவிட்டு
எக்கணமும் நீங்கியதில்லை
ஞாபக மறதியுற்ற நிமிடங்களில் எல்லாம்
தொலைதூர பேரூந்து நடத்துனர் போலநின்றவளும் நீயே.

காலம் இவ்வளவு வேகமாய் நகரும் என்பதை
கருத்திற் கொண்டதே இல்லை
கரம்பிடித்து – கால்மாறிச் செல்லும் வேளைதான்
இனி அவள் என்னுடன் இல்லையே
என்று புத்தியில் உரைக்க.

கூட்டாளிகளும் உறவினரும் கலாய்ப்பார்களே என்று
விழியோரம் சிந்திய நீரையும் எவரும் அறியாதவாறு கையால் துடைத்து
திடமானவன் போல் படலை வரை வழியனுப்ப வந்தவனை
“போட்டு வாறன்டா” எனும் பதில்
கல்லெறிந்த கண்ணாடியாக்கி விட்டது.

தேற்றுவோர் பலர் இருக்கையிலும்
தன் கண்களிற்கு அமைதிகூற முடியவில்லையே
தண்டவாளம் இடையே வெளியிருப்பினும்
இரண்டுமே என்றும் ஒன்றை விட்டொன்று பிரிவதில்லையே.

**ஜெயச்சந்திரன் அனுஜன்**
நுண்கலைத்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்.




ஞானம் நவம்பர் 2025 இதழ் கிடைத்தது. கனதியான பக்கங்களுடன் ஞானம் காட்சி தந்தது மகிழ்வை தருகிறது. கவிதைகளும், சிறுகதைகளும் பக்கம் எங்கும் தாராளமயமாய் காட்சி தந்தன. அத்தனையும் புத்தம்புதிய கருத்துகளை உணர்த்துகின்றன. அவை சிந்திக்கவும் செய்கின்றன.

கவிதைகளுக்காக புத்தகத்தின் நடு இரண்டு பக்கங்களையும் ஒதுக்குங்கள். அத்துடன் இடையிடை தனிப்பக்கத்திலேயும் கவிதைகள் இடம்பெற்றால் நூல் இன்னும் அழகு பெறும் என்பது என்னுடைய சின்ன அபிப்பிராயம்.

மேலும், சபா ஜெயராசா அவர்கள் எழுதிய தமிழில் சிறுவர் இலக்கியம் எனும் கட்டுரை அருமையிலும் அருமை. காலத்திற்கேற்ற கட்டுரை. அதிலே Comedy (Comics) என்பதற்கு மகிழ்வியம் என்ற சொல்லை உட்புகுத்தியிருந்தார். அது சரியான சொல்லாடல். நம்மவர்கள், கவுண்டமணி-செந்தில் காமடி, விவேக்கின் காமடி, வடிவேல் காமடி, சூரியின் காமடி என்று பழக்கப்படுத்தி வைத்திருக்கின்றனர். தமிழ்நாட்டு தமிழர்களின் உச்சரிப்பு வடிவம், இது. 2000 ஆம் ஆண்டிற்கு பிறகுதான் காமடி (கொமடி) என்ற சொல் ஈழத்திலே உச்சம்பெற்றது என நான் நினைக்கிறேன். அதற்கு முன்பெல்லாம், தங்கவேலுவின்ர பம்பல் நாகேசின்ர பம்பல் மனோரமாவின்ர பம்பல் கவுண்டமணி-செந்திலின்ர பம்பல் என்றவாறான சொல்லாடலே இருந்து வந்தது. யாழ்ப்பாணத்திலே பம்பல் என்ற சொல்லுக்கு பதிலாக முசுப்பாத்தி என்ற சொல் பயன்படுத்தி வருகின்றனர்.

இது நல்ல முசுப்பாத்தியாக்கிடக்கு..., சோக்கான முசுப்பாத்தியாக்கிடக்கு...,

இன்றைய கலைச்சொல் ஆக்கத்திலே கொமடி என்ற சொல்லுக்கு பதிலாக கவுண்டமணி-செந்திலின்ர மகிழ்வியம் விவேக்கின் மகிழ்வியம் வடிவேலுவின்ர மகிழ்வியம் என்று பழக்கப்படுத்தி வந்தால் சரியான தமிழ்ச்சொல் ஒன்றை நின்று நிலைக்க வைத்தோம் என்ற பெருமையை நாம் பெறலாம் அல்லவா..? நன்றி

**– சின்னராஜா உதயகுமார்**

❍ ❍ ❍

# நேபாள நெருப்புக் கங்குகள் !

இனியும்
அண்டை நாடுகளில்
கூர்கா வேலை பார்த்து
வீடு வீடாகக் கையேந்திப்
பிழைக்க நாங்கள்
தயாராக இல்லை!

அரசியல் வேடம் பூண்டு
உள்ளிருந்தே எங்கள்
வாழ்வையும்
வளங்களையும்
நாசமாக்கும்
குள்ள நரிகளை
விரட்டாமலிருக்க முடியாது!

எங்கள்
ஏரிகளும் குளங்களும்
ஆறுகளும் – நாரைகளின்
மீன் பிடிக்கும்
களங்கள் அல்ல!
அந்தப் புரங்களிலும்
நட்சத்திர விடுதிகளிலும்
குடித்து கும்மாளமிடும்
பன்றிக் குட்டிகளைத்
தட்டிக் கேட்டால்
சமூக ஊடகங்களை
முடக்கும் பன்றிகள்!

எங்கள் நெருப்புக்
கங்குகள் – இனி
ஊழல் பெருச்சாளிகளின்
வலைகளில் வீசப்படும்!
எங்கள் வெடிகள்–இனி
பன்றிகளின் வாய்களைச்
சிதறடிக்கும்!

எங்கள் பண்பாட்டையும்
நிலத்தையும் வளத்தையும்
வாழ்க்கையையும் – விழுங்கும்
முதலைகளிடமிருந்து – காக்க
எங்கள் இளங்கரங்கள் –இனி
தீப்பந்தம் ஏந்தும்!

– முனைவர் கு. சிதம்பரம், சென்னை



# இலங்கை வானொலியின் நூற்றாண்டு விழா

இலங்கை வானொலி ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பெற்று நூறாண்டுகள் கடந்துவிட்டன. 1920களின் ஆரம்பங்களில் பிரித்தானியாவில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட வானொலி சேவையைத் தொடர்ந்து தெற்காசியாவில் முதலாவது வானொலி சேவையாக 1925ஆம் வருடம் டிசம்பர் 16ஆம் திகதி யன்று இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டமை பெருமைதரும் விடயமாகும்.

தமிழ் வானொலித் துறைக்கு முன்னோடியாக நின்று, இலக்கணம் வகுத்து, பாதையைக் கட்ட மைத்து, திசைமுகப்படுத்தியது இலங்கை வானொலி என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கை வானொலி தன் நூற்றாண்டைக் கொண்டாடும் இத்தருணத்தில் இந்த பயணத்தில் தோள் கொடுத்த நிர்வாகிகள், பொறியியலாளர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், ஒலிபரப்பாளர்கள், வானொலிக் கலைஞர்கள், வானொலி நேயர்கள் என அனைவரையும் நினைவு கூர்வது கடமையாகும். இது நீண்டதொரு வரலாற்றுப் பயணம்.

வானொலியில் ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஒலி மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது. ஒலிக் கோலங்களை மாத்திரம் கொண்டு நேயர்களிடம் கலைப்படைப்பைக் கொண்டுசேர்ப்பது என்பது மிகவும் சிரமமான பணியாகும். வானொலி நாடகம் ஒன்றை எடுத்துக்கொண்டால், கதை நடக்கும் காலம், கதைக் களம், பல்வேறு நாடக பாத்திரங்கள், அவர்களின் குணங்கள் என்பனவற்றை நேயர்களின் மனக்கண்முன் விரிக்கவேண்டும். நேயர்களின் உள்ளத்தில் அவர்களது கற்பனைக் கேற்றாற்போல் உருவகம் வேறுபடும். வானொலிக் கலைஞரது குரல்மூலம் வெளிப்படும் ஒலியே, அந்த உருவகச் சித்திரத்தை நேயர்களது மனத்திரையில் பிரதிபலிக்கும். ஒப்பனையால், உடை யலங்காரங்களால், உடல் மொழியால், முகபாவங்களால் சித்தரிக்க வேண்டிய கதாபாத்திரங்களின் உணர்வுகளை வானொலிக் கலைஞர்கள் தம் குரல் ஒலிமூலம் மட்டுமே வெளிப்படுத்தவேண்டும். பொருத்தமற்ற சில நொடி இடைவெளிகள்கூட கலைப்படைப்பின் மீதான நேயர்களின் கவனத்தையும் ஈர்ப்பையும் சிதைத்துவிடும். மிகவும் நுட்பமானதும் சிரமமானதுமான பணியாகும். இது அத்துணை வானொலி நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும்.

இத்தருணத்தில் 20ஆம் நூற்றாண்டில் இலங்கை வானொலியும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும் கொண்டும் கொடுத்தும் பயணித்து வந்ததை நாம் நினைவுகூரல் வேண்டும். வானொலி நாடகம், குறுநாடகம், கவிதை நாடகங்கள், ஒலி மஞ்சரி, வானொலி மலர், இசையும் கதையும், கவிதை, சிறு கதை, நவரசக்கோவை, கால சங்கமம், கூத்து, கதாகாலட்சேபம், வில்லுப் பாட்டு என நீண்டதொரு வானொலிக் கலைப்படைப்புகளின் பட்டியல் நீள்கிறது. ஆனால், கடந்த ஓரிரு தசாப்தங்களாக வானொலி பெரும்பாலும் வெறும் பாட்டுப் பெட்டியாக மாறி வந்துள்ளதையும் குறிப்பிடல்வேண்டும்.

தற்காலத்தில் நடைபெறும் தொழிநுட்ப பாய்ச்சல் அடுத்த ஓரிரு தசாப்தங்களுக்குள் வானொலியின் வகிபாகத்தை செப்பனிடும் என எதிர்பார்க்கலாம்.

நூற்றாண்டைக் கொண்டாடும் இலங்கை வானொலியை ஞானம் வாழ்த்தி மகிழ்வதுடன் இப் பயணத்தில் தோள்கொடுத்த அனைவரையும் நன்றி கூருகின்றது.



GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

**நெய்தல் நடை – ரஞ்சனி சுப்ரமணியம் (2025)**




2022ஆம் வருடம் ஞானம் சஞ்சிகையில் எழுதிய "அன்றொரு நாள்" எனும் முதலாவது சிறுகதை உள்ளடங்கலாக பன்னிரு சிறுகதைகளை இத்தொகுதி உள்ளடக்கியுள்ளது. இது ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதி என்பது மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது. ஜீவநதி பதிப்பகத்தின் 456ஆவது வெளியீடாக 'நெய்தல் நடை' வெளிவந்துள்ளது.
மனித நேயம், மனித உறவுகள், மனிதர்களின் அலைவுறும் வாழ்க்கை ஆகியன நூலாசிரியரது கதைகளின் அடிநாதமாக அமைகின்றது. சரளமான எழுத்துநடை நம்பிக்கை தருகிறது. எதிர்பார்ப்பும் நீள்கின்றது.




**நினைவழியா நூல்கள் – புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் (2025)**

நாற்பது வருடங்களுக்கும் மேலாக திறனாய்வுத் துறையில் இயங்கிவரும் நூலாசிரியரின், பிறர் எழுதிய இருபது நூல்கள் சார்ந்த பதிவுகள் ஜீவநதி வெளியீடாக வந்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. தினகரன், தினக்குரல், ஜீவநதி, நூலிற்கான அணிந்துரை என 2019ஆம் வருடம் தொடங்கி எழுதிய பார்வைகள் தொகுக்கப் பட்டுள்ளன. "படைப்பாளிகளிடமிருந்து தாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல்" எனும் தெளிவான நோக்கத்துடன் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.
இக்கட்டுரைகளில் பல இலண்டன் SRS வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**சமயமும் சமூக–பண்பாட்டு உருமாற்றமும் –இ.இராஜேஸ்கண்ணன் (2025)**

இந்த நூலில் ஆசிரியர்,
1 - யாழ்ப்பாணத்தில் காலனிய ஏகாதிபத்தியங்களின் ஆதிக்க அரசியலை விளங்கப்படுத்துதல்,
2 - சமய, சமூகக் கட்டமைப்புகளில் நிகழ்ந்த பாரதூரமான மாற்றங்களை அளவிடுதல்.
3 - காலனியம் கட்டமைத்த வரலாற்றைத் திறனாய்ந்து அதனை மாற்றி எழுதுவதற்கான தேவைகளை இனங்காணுதல் ஆகிய பிரதான மூன்று விசாரணைகளை மேற்கொள்கிறார்.
இருப்பினும் காலனியத்தின் விளைவால் சமயம் சமூகப் பொருண்மையாகவும், சமூகம் சமயப் பொருண்மையாகவும் அசைவியக்கம் பெற்றன.
இதனால் விளைந்த யாழ்ப்பாணச் சமூக உருமாற்றத்தை மைய நீரோட்டமாக தர்க்க நிலைசார்ந்து நூலாசிரியர் விவாதிக்கிறார்.

## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340
9 772478 034009
PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195